விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: இருபது

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 மாசி 21 சனிக்கிழமை (05.03.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 076

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# கடாபி கலங்காதே; உசாராய் இரு


# தொலைபேசியில் ஜனாதிபதி மகிந்த

## லிபியத் தொலைக்காட்சி தகவல்



(கொழும்பு)

40 வருட குடும்ப ஆட்சிக்கு எதிராக கிளர்ச்சியில் ஈடுபட்டுள்ள தமது நாட்டு மக்கள் மீதே வானில் இருந்து குண்டு வீச்சுக்களை நடத்தி வருவதன் காரணமாக லிபிய தலைவர் கேணல் முஹம்மர் கடாபி உள்ளிட்ட குடும்ப உறுப்பினர்களை கைது செய்யுமாறு நெதர்லாந்தின் ஹேக் நகரில் இருக்கும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் நேற்றுபிடியாணை பிறப்பித்துள்ளது. *(20ஆம் பக்கம் பார்க்க)*



## சிங்கம் சிறையில் இருப்பதனால் நாணயத்தாளில் ஆந்தை

### ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் கிண்டல்

(கொழும்பு)

புதிதாக அச்சிடப்பட்டுள்ள நாணயத்தாள்களில் சிங்கம் காணப்படாமைக்கான காரணம் சிங்கம் சிறையில் இருப்பதாகுமென ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவிக்கின்றார்.

சிங்கத்தை நாணயத் தாளில் மீண்டும் சேர்க்க வேண்டுமாயின் ஐக்கிய தேசிய கட்சியின் ஆட்சி ஏற்படுத்தப்பட வேண்டுமென குருநாகல் பகுதியில் நேற்று இடம்பெற்ற கூட்டமொன்றில் அவர் குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில், இன்று அரசாங்கம் 10 ரூபாய், 100 ரூபாய், 500 ரூபாய், *(20ஆம் பக்கம் பார்க்க)*

## தேர்தல் பிரசார கூட்டத்தில் துப்பாக்கிச்சூடு; இருவர் பலி

(கொழும்பு)

கொழும்பின் புறநகர் பகுதியில் ஆளும் கட்சி ஆதரவாளர்களின் தேர்தல் பிரசார கூட்டத்தின் மீது இனம் தெரியாத நபர்கள் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் இருவர் கொல்லப் பட்டுள்ளனர்.

ஹிக்கடுவில் உள்ள பெரலிய என்னும் பகுதியில் நேற்று இரவு 8.00 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் ஆளும் கட்சியின் ஆதரவாளர்கள் இருவரே கொல்லப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அப்பகுதியை சுற்றி வளைத்துள்ள பொலிஸார் தீவிர தேடுதலில் ஈடுபட்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவத்தின் போது உள்ளூராட்சி சபை வேட்பாளர் ஒருவரின் சகோதரரும் மற்றும் ஒருவருமே பலியாகினர். இந்த சம்பவத்தை அடுத்து குறித்த பிரதேசத்தில் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது.

(ந-5)

## விமானப்படையின் விழாவில் இந்தியத் தளபதி பங்கேற்கவில்லை

(சென்னை)

இந்தியாவின் விமானப்படைத்துணைத் தளபதியோ அன்றி சுகோய் போர் விமானங்களோ திட்டமிட்டிருந்தபடி இலங்கை விமானப்படையின் 60ஆவது ஆண்டு நிறைவு விழாவில் கலந்து கொள்ளவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந் நிகழ்வில் கலந்து கொள்வதற்காக இந்திய விமானப்படையின் துணைத்தளபதி ஏயார் மார்ஷல் பிறவுண், போர் விமானங்களுடன் *(20ஆம் பக்கம் பார்க்க)*

## நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பில் அமெ. புரிந்துகொள்ளத் தவறியுள்ளது

### வெளிவிவகார அமைச்சு சாடல்

(கொழும்பு)

அமெரிக்க செனட்டில் அண்மையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் குறித்த விடயங்களின் மூலம் அவர்கள் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிறந்த செயற்பாட்டினை நோக்க தவறியுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

தேசிய ஒற்றுமைக்காக நல்லிணக்க ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகளை அமெரிக்கா புரிந்து கொள்ள தவறியுள்ளதாக வெளிவிவகார அமைச்சினால் விடுவிக்கப்பட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தமிழீழ விடு *(20ஆம் பக்கம் பார்க்க)*

## சுபாஸ் ஹோட்டல் கையளிக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

கடந்த 16 வருடங்களாக இராணுவத்தின் 51ஆவது படையணியின் தலைமையகமாக பயன்படுத்தப்பட்ட யாழ்.சுபாஸ் ஹோட்டல் அதன் உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

தனியார் சொத்துக்களை இராணுவப் பாவனைக்காக வைத்திருத்தல் தொடர்பாக அரசாங்கத்தினால் விடுக்கப்பட்ட அறிவுறுத்தலின்படி இக் கட்டிடம் உரிமையாளர்களிடம் கையளிக்கப் *(20ஆம் பக்கம் பார்க்க)*

## அ.தி.மு.க. கூட்டணியுடன் நடிகர் விஜயகாந் இணைவு

(சென்னை)

நடிகர் விஜயகாந் தலைமையிலான தேசிய முற்போக்கு திராவிடர் கழகம் அ.தி.மு.க தலைமையிலான கூட்டணியில் இணைந்து எதிர்வரும் சட்டமன்றத் தேர்தலில் 41 தொகுதிகளில் போட்டியிட இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தொகுதிப் பங்கீட்டு பேச்சுக்களுக்காக நேற்று இரவு அ.தி.மு.க பொதுச் செயலாளர் ஜெயலலிதாவை அவரது இல்லத்தில் நடிகர் விஜயகாந் சந்தித்தார்.

இதனையடுத்து இரண்டு கட்சிகளுக்கும் இடையில் எட்டப்பட்டுள்ள இணக்கப்பாடு குறித்து அறிவிக்கப்பட்டது.

ஏற்கெனவே புதிய தமிழகம் கட்சி 02 தொகுதிகளும் மனிதநேய மக்கள் கட்சிக்கு 03 தொகுதிகளும் மூவேந்தர் முன்னேற்றக் கழகத்திற்கு ஒரு தொகுதியும் அளிப்பது என கூட்டணி அறிவித்துள்ளது.

இதேவேளை *(20ஆம் பக்கம் பார்க்க)*

## மாவை ஆதீனகர்த்தா இறையடி சேர்ந்தார்



(யாழ்ப்பாணம்)

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் ஆதீன கர்த்தா மஹாராஜஸ்ரீ சு. து. சண்முகநாதக் குருக்கள் நேற்றிரவு 10.15 மணியளவில் இறையடி சேர்ந்தார்.

அவருக்கு வயது 85.

இந்து மக்கள் மட்டுமன்றி ஏனைய மதத்தவர்களினதும் *(02ஆம் பக்கம் பார்க்க)*

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Study & Work in UK and Canada**

Hurry......for Jan-2011
Intake Get Register Now
இறுதிச் சந்தர்ப்பம் IELTS தேவையில்லை
Administration & Documentation

என்பன வெற்றிகரமான முறையில் எங்களால் செய்து தரப்படும்.
ஐரோப்பிய நாடுகளுக்கான வீஸா பெறுவதற்கான Sponsorship
பிரச்சினையா? உடனடியாக ஏற்பாடு செய்து தரப்படும்.
சகல தொடர்புகளுக்கும்: 0729994777
London City College
No.01, Deanston House, Deanston Place, Colombo-03
(C-2291)


## அழுத்தம் கொடுக்க முடியாது

மேற்குலக நாடுகள் எதுவும் இலங்கை மீது அழுத்தங்களை கொடுக்க இடமளிக்க போவதில்லை என சமூக சேவைகள் அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா தெரிவித்துள்ளார்.எண்ணெய் வளம் மிக்க நாடுகள் மீது மேற்குலக நாடுகள் அழுத்தங்களை ஏற்படுத்தி வருகின்றன எனவும் அமைச்சர் குற்றம் சுமத்தியுள்ளார்.

ஜா-எல பிரதேசத்தில் இடம்பெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.ஜனநாயகம் என்ற போர்வையில் மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள எண்ணெய் வளத்தை சூறையாட மேற்குலக நாடுகள் முயற்சிக்கின்றன.இலங்கையின் மன்னார் வளைகுடா பகுதியில் எண்ணெய் வளம் காணப்படுவதால் மேற்குலக நாடுகள் இலங்கை மீது தனது பார்வையை செலுத்தியிருப்பதாக பீலிக்ஸ் பெரேரா குறிப்பிட்டுள்ளார். (ந-5)


**வர்த்தகப் பெருமக்களே...**

பெறுமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து, அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.

தொடர்புகளுக்கு:-0729994777


# கிபீர் விமான விபத்து

# விமானியின் பிரேத பரிசோதனை அறிக்கை

# விமானப் படைத்தளபதி சந்தேகம்



(கொழும்பு)

**கிபீர் விமான விபத்தில் உயிரிழந்த ஸ்குவாட்ரன் லீடர் மொனாத் பெரேராவின் பிரேத பரிசோதனை அறிக்கை குறித்து விமானப்படைத் தளபதி ஏயார் மார்சல் ஹர்சா அபேவிக்கிரம சந்தேகம் தெரிவித்துள்ளார்.**

விமானியான மொனாத் பெரேராவுக்கு நடுவானில் மாரடைப்பு ஏற்பட்டு மரணமானதாக பிரேத பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந் நிலையில் காலி கிதுலம்பிட்டியவில் விமானி மொனாத் பெரேராவின் உடலுக்கு அஞ்சலி செலுத்திய பின்னர் உறவினர்களிடம் கலந்துரையாடும் போதே அவர் இச் சந்தேகத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

சிறந்த ஆரோக்கியத்துடன் உடல் நலத்துடனும் காணப்பட்ட விமானியான ஸ்குவாட்ரன் லீடர் மொனாத் பெரேரா மாரடைப்பு ஏற்பட்டே மரணமாகியுள்ளதாக பிரேத பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறித்து தன்னால் எதுவும் கூறமுடியாதுள்ளதாக அவர் உறவினர்களிடம் கூறியுள்ளார்.

விமானப் படையின் விமானிகள் அனைவரும் தொடர்ச்சியாக மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருவதாக உறவினர்களிடம் குறிப்பிட்ட விமானப்படைத் தளபதி,

விமானத்தில் கிளம்ப முன்னரும் திரும்பி வந்த பின்னரும் விமானிகளுக்கு இரத்த அழுத்தப் பரிசோதனை செய்யப்படுவதாகவும் தெரிவித்தார்.

அதேவேளை விமானப்படையின் கிபீர் விமானங்கள் நடுவானில் மோதிக் கொண்ட விபத்துத் தொடர்பாக ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவின் ஆரம்ப அறிக்கை விமானப்படைத் தளபதி ஏயார் மார்சல் ஹர்சா அபேவிக்கிரமவிடம் எதிர்வரும் 7ஆம் திகதி சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இவ் விபத்துத் தொடர்பாக ஏயார் மார்சல் கபில ஜெயம்பதி தலைமையிலான ஐந்து பேர் கொண்ட உயர்மட்ட குழு விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ந-5)



## மின் தடை

(யாழ்ப்பாணம்)

உயரழுத்த மின்மார்க்கங்களில் பராமரிப்பு வேலைகள் செய்யும் பொருட்டு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 05.00 மணிவரை கொட்டடி, நாவாந்துறை, மீனாட்சிபுரம், காக்கைதீவு ஆகிய இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ். பிராந்திய மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (ந)

## ராஜன்-கதிர்காமர் கிண்ண

## கிரிக்கெட் போட்டி இன்று

வடக்கில் நடைபெறும் பெரும் கிரிக்கெட் போட்டிகள் வரிசையில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும், யாழ்ப்பாணம் சென் பற்றிக்ஸ் கல்லூரிக்கும் இடையேயான ராஜன்- கதிர்காமர் வெற்றிக் கிண்ணத்திற்கான 50ஓவர்கள் மட்டுப்படுத்திய கிரிக்கெட் போட்டி இன்று காலை 9.00மணிக்கு யாழ்ப்பாணம் சென் பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.


கடந்த 22ஆண்டுகள் இடம்பெற்ற போட்டிகளில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி 6தடவைகளும் யாழ்ப்பாணம் சென் பற்றிக்ஸ் கல்லூரி 16 தடவைகளும் வெற்றி பெற்றுள்ளன.

## வெடியில் சிக்கிய யானை பலி

மன்னார் நானாட்டான் பகுதியில் மறைத்துவைக்கப்பட்டிருந்த நாட்டு வெடியை உணவென நினைத்து வாயில் வைத்த வேளை அந்த வெடி வெடித்ததில் காயமுற்ற யானை ஒன்று நேற்றுப் பலியானது.

கடந்த மூன்று தினங்களுக்கு முன்னர் இடம்பெற்ற இச் சம்பவத்தில் வாயில் காயமடைந்த யானை உணவெதனையும் உட்கொள்ள முடியாது அவஸ்தைப்பட்டது.

குறித்த யானைக்கு சிகிச்சை அளிக்கப்பட்ட போதிலும் அது பலனளிக்காது அந்த யானை நேற்று பலியானது.(ந)



## மாவை ஆதீன...

மரியாதைக்குரியவராக விளங்கிய மஹாராஜஸ்ரீ சண்முகநாதக் குருக்கள் வேதாகம சாஸ்திரங்களில் விற்பன்னராகத் திகழ்ந்தவர்.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலை மீண்டும் புதுப்பொலிவு பெறுவதற்கு அவர் ஆற்றிய பணி மகத்தானது.

அவரின் திருவுடல் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் வளாகத்தில் உள்ள அவரின் இல்லத்தில் பொது மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

இறுதிக் கிரியைகள் நாளை ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11 மணிக்கு ஆரம்பித்து தகனக் கிரியைகள் கீரிமலை தீர்த்தக் கரையில் இடம் பெறும். (ந)


**ENGLISH CLASSES**

இலகுவான முறையில் விரைவாக ஆங்கிலம் பேச.....
உங்கள் ஆங்கில அறிவை மேலும் வழப்படுத்த....

- Certificate in Spoken English
- Certificate in General English
- Diploma in English Language
- IELTS - Spacial English Training

மிகச்சிறந்த அனுபவமிக்க ஆசிரியர்களின் வழிகாட்டலில் சர்வதேச அங்கிகாரம் கொண்ட பாடப்பிரிவை கொண்டு மிக சிறந்த மாணவ அணுகுமுறையிலான கற்பித்தல்....

சர்வதேச அங்கிகாரம் கொண்ட சான்றிதழ் ..

WESTMINSTER INSTITUTE OF HIGHER STUDIES
No. 03. Ramanathan Road, Kalatti Junction. Jaffna.
Tel : 0213207778 Mob: 0771919192.
யாழ் பல்கலைக்கழக வீதியில்- கலட்டிசந்தியில்
(3946)



**கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய பொங்கல் விழாவின்போது வாணிபம் மேற்கொள்ளும்**

**வணிகர்களுக்கான அறிவித்தல்**

கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய வருடாந்த பங்குனி உத்தரப் பொங்கல் எதிர்வரும் 19.03.2011 சனிக்கிழமை வழமைபோல நடைபெறவுள்ளது. இதனை முன்னிட்டு வியாபாரம் மேற்கொள்ளும் வணிகர்களுக்கான வியாபார நிலைய ஏல விற்பனை 06.03.2011 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு ஆலய முன்றலில் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

இவ்வண்ணம்
ஆலய பரிபாலன சபை
(சி-2575)



**அலுவலகம் வாடகைக்கு**

பலாலி வீதி, கந்தர்மடம் றோட்டில் 5அறை மேல் மாடி கீழ்ப் பகுதி வாகனத் தரிப்புடன் வாடகைக்கு உண்டு.
N.G.O விரும்பத்தக்கது.
தொடர்பு :-
(3947) 0750386004

**காணி விற்பனைக்கு**

அளவெட்டி அம்பனை றோட்டில் 2 1/2 பரப்பு காணி விற்பனைக் குண்டு.
தொடர்பு :-
(3936) 0772985314

**C.C.A. சுன்னாகம்**

புவியியல் - N.BABU
A/L - DAY CLASS
சனி, ஞாயிறு
4Pm- சூழற் புவியியல்
5.30Pm-செய்முறைப் புவியியல்
புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
(3943)

**தவறிவிட்டது**

ஆசைப்பிள்ளை தரணிதரன் என்பவரது மோட்டார் சைக்கிள் இலக்கத்தகடு (NPJW-4558) பலாலி வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.
தொடர்புக்கு:-
(3934) 0774163023

**விற்பனைக்கு**

TATA 10 wheel Lorry விற்பனைக்கு உண்டு.
தொடர்புகட்கு:-
151, K.K.S. Road
0773366482
(C-2586) 021 4925854

**விற்பனைக்கு**

நல்ல நிலையிலுள்ள சுசுக்கி (SUZUKI) GS 125 யப்பான் மோட்டார் சைக்கிள் விற்பனைக் குண்டு.
தொடர்பு :-
0750413161
(3942) 0779122935

**வீடு விற்பனைக்கு**

அளவெட்டி அம்பனை றோட்டில் 2 3/4 பரப்பு காணியுடன் வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு :-
(3936) 0772985314


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகக் கிண்ண கிரிக்கெட் திருவிழா 2011


பெப்ரவரி 19 - ஏப்ரல் 02

ICC Cricket World Cup 2011

## ரோச், பென், சமி கூட்டணியின் வேகத்தில்

# பங்களாதேஷ் நசுங்கியது

# மேற்கிந்தியத் தீவுகள் வெற்றி



மேற்கிந்தியத் தீவுகள் பந்து வீச்சுக் கூட்டணியின் வேகத்தில் பங்களாதேஷ் அணி 58 ஓட்டங்களுக்கு சுருண்டது.

ஹயிலின் அதிரடியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 09 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

பத்தாவது உலகக்கிண்ண கிரிக்கெட் தொடர் இந்தியா, இலங்கை பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் நடைபெற்று வருகிறது.இதில் டாக்காவில் நேற்று பகலிரவு ஆட்டமாக நடைபெற்ற 19 ஆவது லீக் போட்டியில் பி பிரிவைச் சேர்ந்த மேற்கிந்தியத் தீவுகள் - பங்களாதேஷ் அணிகள் மோதின.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணித்தலைவர் சகீப் அல் ஹசன் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணிக்கு ஆரம்பமே சரிவுதான்.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் தமீம் இக்பால் ஆட்டத்தின் மூன்றாவது பந்தில் பூச்சியத்துடன் ரோச்சின் வேகத்தில் வெளியேறினார்.

அடுத்து ஜீனைட்டட் சிட்டிக் களமிறங்க இம்ரூல் ஹைஸ் 5 ஓட்டங்களுடன் சமியின் பந்தில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய மிஸ்பிகுர் ரகீம் பூச்சியத்துடன் சமியின் பந்தில் வெளியேறினார்.

அடுத்து அணித்தலைவர் சகீப் அல் ஹசன் வர மறுமுனையில் சிறப்பாக ஆடிய ஜீனைட்டட் சிட்டிக் 27 பந்துகளில் (4 பவுண்டரிகள் உட்பட) 25 ஓட்டங்களுடன் ரோச்சின் பந்தில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து அணித்தலைவர் சகீப் அல் ஹசன் , ரகீபுல் ஹசன் 4 ஓட்டங்களுடன் நடையைக்கட்ட பங்களாதேஷ் அணி 14 ஓவர்களில் 51 ஓட்டங்களை எடுத்து 6 விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது.

பின்வரிசை வீரர்களையும் பென் பதம் பார்க்க பங்களாதேஷ் அணி 18.5 ஓவர்களில் 58 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

இதில் மொகமட் அஷ்ரபுல் 11 ஓட்டங்களை எடுத்தார்.

பந்துவீச்சில் பென் 4 விக்கெட்டுக்களையும் ரோச், அணித்தலைவர் சமி ஆகியோர் 3 விக்கெட்டுக்களையும் சாய்த்தனர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 59 ஓட்டங்கள் என்ற சுலபமான இலக்கை விரட்டிய மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு சிமித் - ஹயில் ஜோடி ஆரம்பம் வழங்கினர்.

இதில் டேவன் சிமித் 6 ஓட்டங்களுடன் நயிம் இஸ்லாமின் பந்தில் ஆட்டமிழந்தார்.

அடுத்துவந்த பிரவோ துணை வழங்க மறுமுனையில் கிறிஸ் ஹயில் அதிரடியாக ஓட்டங்களை எடுத்தார்.

இந்நிலையில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 12.2 ஓவர்களில் ஒரு விக்கெட்டை மாத்திரமிழந்து 59 ஓட்டங்களை எடுத்து 9 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதன் மூலம் மேற்கிந்தியத் தீவுகள் அணி தான் விளையாடிய 3 ஆவது ஆட்டத்தில் 2 ஆவது வெற்றியைப் பெற்று 4 புள்ளிகளைப் பதிவு செய்தது.

துடுப்பாட்டத்தில் கிறிஸ் ஹயில் 36 பந்துகளில் (6 பவுண்டரிகள் உட்பட)37 ஓட்டங்களையும் டரன் பிரவோ 9 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.

இப் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகளின் வெற்றிநாயகன் கீமர் ரோச் ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

## அயர்லாந்து வீரர்களுக்கு போனஸ்

உலகக் கிண்ணத் தொடரில் கடந்த புதன்கிழமை பெங்களூரில் நடைபெற்ற 'பி' பிரிவு லீக் போட்டியில் பலம்வாய்ந்த இங்கிலாந்து அணியை கத்துக்குட்டி அணியான அயர்லாந்து வீழ்த்தியது.

கடந்த 2007ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக் கிண்ணத் தொடரில் பாகிஸ்தான் அணியை சுருட்டிய அயர்லாந்து அணி இம்முறை இங்கிலாந்து அணிக்கு அதிர்ச்சி வைத்தியத்தை காட்டியிருக்கிறது.

அயர்லாந்து அணியின் அனுசரணையாளரான ஆர்.எஸ்.ஏ. இன்சுரன்ஸ் நிறுவனம் உலகக் கிண்ணத் தொடர் ஆரம்பமாவதற்கு முன்பே லீக் சுற்றில் சிறப்பாக செயற்பட்டால் சிறப்புப் போனஸ் வழங்கப்படும் என்று அறிவித்திருந்தது.

இந்த உறுதிமொழியின்படி அயர்லாந்து வீரர்களுக்கு மொத்தம் ரூபா 250 இலட்சம் (இலங்கைப் பெறுமதியில்) போனஸாக கிடைத்துள்ளது. இந்தத் தொகை அணியில் இடம்பெற்றுள்ள வீரர்களுக்கு சரிசமமாக பகிர்ந்தளிக்கப்படும்.

தனிப்பட்ட வீரர்களுக்கு சிறப்பு பரிசு வழங்கும் திட்டம் இல்லை. காலிறுதிக்கு முன்னேறினால் இன்னொரு போனஸ் காத்திருக்கிறது என்றும் அந்நிறுவனம் அறிவித்துள்ளது.


கிரிக்கெட் ரசிகர்களுக்கு ஓர் நற்செய்தி!

MCS இன் ஒரு மில்லியன் ரூபா பரிசை வெற்றிகொள்ள உங்களுக்கு அரிய சந்தர்ப்பம்

தினமும் 5 பேருக்கு
50ஆயிரம் ரூபா வீதம் 100 பேருக்கு
ஒரு மில்லியன் வெற்றிகொள்ளும் வாய்ப்பு
வலம்புரியில் கேட்கப்படும்
உலகக்கிண்ண கேள்விகளுக்கு
சரியான பதிலை அனுப்பி உங்கள் உயர்கல்வி வாய்ப்பை
பெற்றுக்கொள்ளுங்கள்

கூப்பனை வெல்பவர் அல்லது அவரால் வழங்கப்படும் ஒருவர் பின்வரும் கற்கை நெறிகளுக்கு இப் பரிசுக் கூப்பனை பயன்படுத்த முடியும்

1. கொழும்பு பல்கலைக்கழக தகவல் தொழில்நுட்ப பட்டக் கற்கை நெறி
2. சீமா (லண்டன்) CIMA_UK
3. மைக்ரோசொப்ற் நிறுவன கணினிப் பொறியியலாளர் கற்கை நெறி
4. அடோப் நிறுவனத்தின் மல்ரிமீடியா கற்கை நெறி



இன்றைய கேள்வி ?

உலகக் கிண்ண கிரிக்கெட் வரலாற்றில் போட்டி ஒன்றில் அதிக ஓட்டங்களால் வெற்றிபெற்ற அணி எது?

.......................................................

சரியான விடையை எழுதி கீழுள்ள கூப்பனை பூரணப்படுத்தி 07.03.2011 இற்கு முன்னர் அனுப்புபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் வெற்றியாளர் ஒருவருக்கு நவகலா வழங்கும் பெறுமதியான பரிசு காத்திருக்கிறது.

பெயர்:- ..............................
முகவரி:- ..............................
..............................
தொ.பே:- ..............................
தே.அ.அ.இல:- ..............................

அனுப்ப வேண்டிய முகவரி
'உலகக் கிண்ணம்'
வலம்புரி
இல.3,2 -ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி, யாழ்ப்பாணம்.



காலிறுதிச் சுற்றுக்கு தெரிவாகும் அணிகள் ?

சரியான விடையை எழுதி கீழுள்ள கூப்பனை பூரணப்படுத்தி 10.03.2011 இற்கு முன்னர் அனுப்புபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் வெற்றியாளர் ஒருவருக்கு ஒலிம்பியா ஸ்போட்ஸ் வழங்கும் பெறுமதியான பரிசு காத்திருக்கிறது.

1. ..............................
2. ..............................
3. ..............................
4. ..............................
5. ..............................
6. ..............................
7. ..............................
8. ..............................

அனுப்ப வேண்டிய முகவரி
'உலகக் கிண்ணம்'
வலம்புரி
இல.3,2 -ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி, யாழ்ப்பாணம்.

பெயர்: ..............................
முகவரி: ..............................
..............................
தொ.பே: ..............................
தே.அ.அ.இல: ..............................

ஒலிம்பியா ஸ்போட்ஸ்
இல06,ஜும்மா பள்ளிவாசல் லேன்
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.



உலகக்கிண்ண கிரிக்கெட்-2011

சம்பியனாகும் நாடு?..............................

தொடர் நாயகன் விருது யாருக்கு?..............................

சரியான விடையை எழுதி கீழுள்ள கூப்பனை பூரணப்படுத்தி 20.03.2011 இற்கு முன்னர் அனுப்புபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் வெற்றியாளர்களுக்கு பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்கப்படும்.

பெயர்..............................
முகவரி..............................
தொலைபேசி..............................
தே.அ.அ.இல..............................

'உலகக்கிண்ணம்'
வலம்புரி
இல.3, 2-ம் ஒழுங்கை
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

Midea Electro Mart
No:1-1, 1-H, STANLEY ROAD, JAFFNA.

ESPN
இ.ச.பே. நாகரத்தினம் சக நிறுவனம்
52,54, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

இன்னும் பல பரிசுகள்

PC SOLUTIONS TECHNOLOGIES (PVT) LTD
305,Kasthuriyar Road,Jaffna.
T.P.021 2221101,021 2229644
email:- pcsjaffna@sltnet.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





திக்கம் சித்தி விநாயகர் வித்தியாலயத்தின் கால்கோள் விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் அதிபர் எஸ். ரவீந்திரன் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினரால் மாலை அணிவித்து வரவேற்கப்படுவதையும் அருகில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட இளைப்பாறிய வடமராட்சி வலய கணித சேவைக்கால ஆலோசகர் எஸ். இராமக்கிருஸ்ணா, பாடசாலையின் இளைப்பாறிய அதிபர் சிறி வடிவாம்பிகை சிவராஜா ஆகியோர் நிற்பதையும் பாடசாலையில் புதிதாக இணைந்து கொண்ட மாணவர்களுடன் ஆசிரியர்கள் நிற்பதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-அல்வாய் செய்தியாளர்)

## கருத்தமர்வு

(கொழும்புத்துறை)

அல்வாய்' கிராமத்திலுள்ள பாடசாலை ஆசிரியர், பெற்றோர், மாணவர்களுக்கான உள சமூக மேம்பாட்டுக் கருத்தமர்வு இன்று சனிக்கிழமை பி.ப 2 மணிக்கு அல்வாய் இளங்கோ பாலர் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பெற்றோர், ஆசிரியர்களின் நல்லுறவு மற்றும் சிறுவர்களின் ஆளுமையை வளர்க்கவும் சமூகமட்டத்திலுள்ள உள சமூக மேம்பாட் டில் குடும்பங்கள் பங்கேற்கவும் ஆரோக் கிய சமுதாயத்தை உருவாக்கும் நோக்கில் கியூடெக் கரித்தாஸ் நிறுவனம் மேற்படி கருத்தமர்வை ஏற்பாடு செய்துள்ளது.

இதில் வளவாளர்களாக திருமறைக் கலாமன்ற வளவாளர் ஜோ. ஜெஸ்ரின், கியூடெக் கரித்தாஸ் நிறுவன கள உத்தியோகத்தர் செ. ஜோசப் பாலா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஸ்ரீ-3-51)

## பல கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய இருவர் கைது

(கரவெட்டி)

சாவகச்சேரியில் இடம்பெற்ற பல்வேறு கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய இரு முக்கிய நபர்களை கொடிகாமப் பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

மேற்படி சந்தேக நபர்கள் நேற்றைய தினம் சாவகச்சேரி நீதவான் நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் மன்றில் முற்படுத்தப்பட்டனர்.

இரு சந்தேக நபர்களையும் விசாரித்த நீதிபதி அவர்களை எதிர்வரும் 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் புலன் விசாரணை செய்து மன்றில் ஆவணங்களை சமர்ப்பிக்குமாறும் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

அத்துடன் இரு சந்தேக நபர்களும் மாங்குளம் , கரவெட்டி பகுதிகளை சேர்ந்தவர்கள் என்று குறிப்பிடப்படுகிறது.

இருவரும் யாழ். குடாநாட்டில் கடந்த காலங்களில் இடம்பெற்ற பல கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புபட்டிருக்கலாம் என்ற கோணத்தில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஸ்ரீ-3-24)

## பஸ்நிலையக் கட்டடம் பொது நூலக மேல்மாடி திறப்பு விழா

சாவகச்சேரி நகரில் அமைக்கப்பட்ட புதிய பஸ்நிலையக் கட்டடமும் சாவகச்சேரி நகரசபையின் நுணாவில் பொதுநூலக மேல்மாடியும் இன்று சனிக்கிழமை காலை 11.30 மணிக்கும், 12.00 மணிக்கும் திறக்கப்படவுள்ளன.

சாவகச்சேரி நகரசபைச் செயலாளர் கொ.யக்சீல் தலைமையில் நடைபெறும் மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

(ஸ்ரீ-3-29)

## பொது இடத்தில் மது அருந்திய நபர்களுக்கு அபராதம் விதிப்பு

(கரவெட்டி)

பொது இடத்தில் வைத்து மது அருந்திய குற்றச்சாட்டின் பேரில் இரு சந்தேக நபர்களை நேற்று முன்தினம் கொடிகாமப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தெஹிவளை மற்றும் கிரிவளைப் பகுதிகளைச் சேர்ந்த இரு சந்தேக நபர்களும் நேற்றைய தினம் சாவகச்சேரி நீதவான் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகம் கணேசராசா முன்னிலையில் மன்றில் முற்படுத்தப்பட்டனர்.

இரு சந்தேக நபர்களையும் விசாரணை செய்த நீதிபதி இரு சந்தேக நபர்களும் மன்றில் குற்றத்தை ஒப்புக்கொண்டமையால் இருவருக்கும் தலா ரூபாய் 3 ஆயிரம் அபராதமும் செலுத்தத் தவறின் ஒரு மாதகால சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார். (ஸ்ரீ-3-24)

## சனச அபிவிருத்தி வங்கிக்கிளை பருத்தித்துறையில் திறப்பு

(அல்வாய்)

சனச அபிவிருத்தி வங்கியின் இரண்டாவது கிளை இன்று காலை 9 மணியளவில் பிரதான வீதி, பருத்தித்துறையில் (வேலாயுதம் மகா வித்தியாலய அருகில்) சனச வங்கியின் தலைமைக் காரியாலய தலைவர் கலாநிதி பி.ஏ.கிரிவந்தெனியவால் திறந்து வைக்கப்படவுள்ளது. (ஸ்ரீ-3-19)

## யாழ்.செய்திகள்

## வாசகர் போட்டியில் வெற்றியீட்டியோர்

(மருதங்கேணி)

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் வருடந்தோறும் நடத்திவரும் ஞானச்சுடர் ஆன்மீக சஞ்சிகைக்கான வாசகர்கள் போட்டி இம்முறையும் நடத்தப்பட்டது. இதில் மூன்று பரிசுகளும் பத்து ஆறுதல் பரிசுகளும் வழங்கப்படவுள்ளன. இப்பரிசுகள் எதிர்வரும் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை 159 ஆவது மலர் வெளியீட்டின் போது வழங்கப்படவுள்ளது. இப்போட்டியில் வெற்றியீட்டியோர் விபரம் வருமாறு.

முதலாம் பரிசு சி.பகீரதன் (சண்டிலிப்பாய் வடக்கு, சண்டிலிப்பாய்), இரண்டாம் பரிசு எம். சந்திரபிரகாஷ் (ரோகினி ஒழுங்கை, கொழும்பு 10), மூன்றாம் பரிசு செல்வி. சு.கந்தையா (சேர். பொன். இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்) ஆறுதல் பரிசில் 10 பேருக்கு வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-3-35)

## சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களுக்கான திசைமுகப்படுத்தும் செயலமர்வு

(அல்வாய்)

வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளரினால் இவ்வருடம் புதிதாக நியமிக்கப்பட்ட சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களுக்கான வதிவிடச் செயலமர்வு எதிர்வரும் 6,7,8 ஆம் திகதிகளில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதில் பாடசாலைத் தரிசனம், வேலைப் பங்கீடு மற்றும் நடைமுறைகள் தொடர்பான பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

இதற்கான பதிவுகளை எதிர்வரும் 6ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு முன்னர் மேற்கொண்டு செயலமர்வில் பங்குபற்றுமாறு வடமாகாணக் கல்வித் திணைக்கள மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் பி.செல் வின் இரேனியஸ் அறிவித்துள்ளார்.

மேற்படி செயலமர்வில் தங்குவதற்கான ஒழுங்குகளை வடமாகாணக் கல்வித் திணைக்களம் மேற்கொண்டுள்ளது. (ஸ்ரீ-3-19)

## மகாஞான ஒடுக்கம்

(கொழும்புத்துறை)

யாழ்.ஆயர் இல்லத்தின் ஏற்பாட்டில் ''நீங்கள் மனம் மாறியவர்கள் என்பதை அதற்கேற்ற செயல்களால் காட்டுங்கள்'' எனும் கருப்பொருளில் மகாஞான ஒடுக்கம் கடந்த பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் 20 ஆம் திகதி வரை உரும்பிராய், புன்னாலைக்கட்டுவன், நீர்வேலி ஆகிய இடங்களில் நடைபெற்று வருகின்றது.

தினமும் காலை 7 மணிக்கு நன்றித் திருப்பலியும் தொடர்ந்து ஞான ஒடுக்க பயற் சிகளும் மாலை 6.30 மணிக்கு கலை நிகழ் வுகளும் நடைபெற்று வருகின்றது.

(ஸ்ரீ-3-51)

## 108 சங்காபிஷேக ஸ்கந்த ஹோமப் பெருவிழா

மிருசுவில் உசன் ஸ்ரீ கந்தசுவாமி கோயில் 108 வலம்புரி சங்காபிஷேக ஸ்கந்த ஹோமப் பெருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இவ்விழாவை ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோயில் அருள்வாக்குச் சித்தர் குக ஸ்ரீ இரத்தினகேதீஸ்வர சுவாமிகள் தலைமையில் பல சிவாச்சாரியார்கள் கலந்து கொண்டு நடத்தவுள்ளனர். (ஸ்ரீ-9)

## பருத்தித்துறை கோட்டமட்ட விளையாட்டுப்போட்டிகள்

(அல்வாய்)

பருத்தித்துறைக்கோட்டமட்ட விளையாட்டுப் போட்டிகள் வல்வெட்டித்துறை உபகோட்டத்திலும் பருத்தித்துறை உப கோட்டத்திலும் எதிர்வரும் 14, 15, 16 ஆகிய திகதிகளில் நடைபெறவுள்ளது.

வல்வெட்டித்துறை உபகோட்டப் போட்டிகள் யா/சிதம்பராக் கல்லூரியிலும் பருத்தித்துறை உபகோட்டப் போட்டிகள் ஹாட்லிக் கல்லூரி மைதானத்திலும் நடைபெறவுள்ளன.

இப்போட்டிகளுக்கான விண்ணப்ப முடிவுத் திகதி எதிர்வரும் 10 ஆம் திகதியென அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஸ்ரீ-3-19)

## மஹோற்சவம்

யா/நாயன்மார்கட்டு ஸ்ரீ வெயிலுகந்த விநாயகர் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 10 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

இத்திருவிழாவில் எதிர்வரும் 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு இரதோற்சவமும் 19 ஆம் திகதி சனிக்கிழமை தீர்த்த உற்சவமும் மாலை கொடியிறக்கமும் நடைபெறவுள்ளது. (ஸ்ரீ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூநகரி விவசாயிகளிடம் இருந்து குறைந்த விலையில் நெல் கொள்வனவு

(பூநகரி)

பூநகரிப் பிரதேசத்தில் காலபோக நெல் அறுவடை துரிதமாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிலையில் யாழ்.அரிசியாலை உரிமையாளர்கள் ஒரு மூடை நெல்லை (70கிலோ) இரண்டாயிரம் ரூபாவில் இருந்து ஆயிரத்து 500 ரூபாவுக்கு கொள்வனவு செய்து வருவதால் விவசாயிகள் பெரும் கவலை கொண்டுள்ளனர்.

இந்நிலையில் பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தினர் முதல் கட்டமாக பூநகரி விவசாயிகளிடமிருந்து 500 மூடை சம்பா நெல்லை ஒரு கிலோ 30 ரூபா வீதமும் ஏனைய வகை நெல்லை ஒரு கிலோ 28 ரூபா வீதமும் கொள்வனவு செய்து வருகின்றனர்.

இதன்படி விவசாயி ஒரு மூடை நெல்லை இரண்டாயிரத்துக்கு மேல் விற்பனை செய்யக்கூடிய நிலை தோன்றியுள்ளது.

(ஸ்ரீ-3-84)

# கபேகளில் இணையத்தளத்தை பயன்படுத்த சிறுவர்களுக்கு தடை

சிறுவர்கள் கபேகளில் இணையத்தளத்தை பயன்படுத்த குருணாகல் மாவட்டத்தில் தடை விதிக்கப்பட்டுள்ளது.

18 வயதுக்கு உட்பட்டவர்கள் கபேகளில் இணையத்தளத்தை பயன்படுத்த முடியாது என்று குருணாகல் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் வாஸ் குணவர்தன அறிவித்தல் விடுத்துள்ளார்.

அத்துடன் இத்தடை தொடர்பான அறிவுறுத்தல்கள் கபே உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

பாடசாலைச் சிறுவர்கள் எவரேனும் கல்வித் தேவைக்காக கபேகளில் இணையத்தளத்தை பார்வையிட வரக்கூடும் அதிபரின் கடிதத்துடன் வருகின்றபோது மாத்திரமே அனுமதி வழங்கப்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஸ்ரீ-2)

# புலிகளின் முக்கிய உறுப்பினர் ஒருவர் திருமலையில் கைது

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர் ஒருவர் திருகோணமலையில் வைத்து விமானப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

விமானப்படையினரின் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து பிராஸ்தாபப நபர் கடந்த வாரம் திருகோணமலையில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

இரகசியப் பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டுள்ள அவரிடம் தற்போது மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

கிழக்கை விடுவிப்பதற்கான இராணுவ நடவடிக்கையின் போது இராணுவத்திற்கு எதிராக பல முக்கிய தாக்குதல்களிலும் குறித்த நபர் தலைமை தாங்கியுள்ளதாக புலனாய்வுத் தகவல்கள் மூலம் தெரியவந்துள்ளது.

இதற்கமைய திட்டமிட்டு வழி நடாத்திய தாக்குதல்களில் மிக முக்கியமானது கடந்த 2006ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 11ஆம் திகதி தம்புள்ளை திகம்பத்தனையில் கடற்படையினரின் பேருந்து தொடரணியை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட தாக்குலாகும்.

அதன் போது விடுமுறையில் சென்று கொண்டிருந்த நூற்றுக்கணக்கான கடற்படையினர் கொல்லப்பட்டிருந்தனர். அது மட்டுமன்றி தாக்குதலின் காரணமாக கடற்படையினருக்குப் பெரும் பொருட்சேதமும் ஏற்பட்டிருந்தது. இவ்வாறான தாக்குதல் ஒன்றின் போது காயமுற்ற அவர் தற்போது அங்கவீனமுற்ற நிலையில் காணப்படுகிறார் அவரது இரண்டு சகோதரர்களும் விடுதலைப்புலிகள் அமைப்பில் இணைந்து போராடி மரணித்துள்ளனர் என குறிப்பிடப்படுகிறது. (ஸ்ரீ-2)

# விமானப்படைத்தளத்துக்குள் சட்டவிரோதமாக பிரவேசிக்க முயன்ற எழுவர் கைது

(கொழும்பு)

போலியான அனுமதிச்சீட்டின் மூலம் இரத்மலானை விமானப்படைத் தளத்துக்குள் சட்ட விரோதமாகப் பிரவேசிக்க முயன்ற ஏழு வாலிபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அண்மையில் நடைபெற்ற விமானப் படையின் வைரவிழாக் கொண்டாட்டங்களை முன்னிட்டு நடைபெறும் விமானப்படை கண்காட்சியில் பொதுமக்களும் பார்வையாளர்களாக கலந்து கொள்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இந்த வைரவிழாக் கண்காட்சியைப் பார்வையிட வருகை தரும் பொதுமக்களுக்கு இருபது ரூபா பெறுமதியான நுழைவுச்சீட்டு விநியோகிக்கப்பட்டது.

ஆயினும் பிரஸ்தாப அனுமதிச்சீட்டையொத்த போலி அனுமதிப்பத்திரத்தின் மூலம் இரத்மலானை விமானப்படைத் தளத்தினுள் ஏழு வாலிபர்கள் நுழைய முற்பட்டபோது மடக்கிப் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடனம் கையளிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் வைத்திருந்த போலி அனுமதிப்பத்திரத்தை அச்சடித்த அச்சகம் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ஸ்ரீ-2)

# புதுப்பொலிவுடன் குமுதினிப்படகு திங்கள் முதல் சேவையில்

(கொழும்பு)

நவீன முறையில் புனரமைக்கப்பட்ட குமுதினிப் படகு மீண்டும் நாளை மறுதினம் திங்கட்கிழமை தொடக்கம் யாழ் கடல்வழி போக்குவரத்து சேவையில் ஈடுபடவுள்ளது.

வடக்கில் மிக நீண்ட காலமாக கடல் வழி போக்குவரத்துச் சேவைகள் குமுதினிப்படகு மூலமே நடைபெற்று வந்து குமுதினிப் படகு பழுதடைந்த காரணத்தினால் சில காலம் இச்சேவை இடை நிறுத்தப்பட்டிருந்தது.

புதுப்பொலிவுடன் புனரமைக்கப்பட்ட குமுதினிப்படகு நேற்று வெள்ளோட்டத்தில் விடப்பட்டது.

(ஸ்ரீ-2)


# 90ஆம் நாள் நீங்கா நினைவலைகள்...



கடந்த 02.12.2010 அன்று எமைவிட்டு நீங்கிச் சென்ற எமது குல விளக்கு

**திருமதி அன்ரன் ஜெனோசன் இமாலினி (சுரேகா)**

அவர்களின் 90ஆம் நாள் நினைவஞ்சலி நிகழ்வுகள் 05.03.2011 இன்று சனிக்கிழமை மதியம் 12.00 மணியள வில் டச்சுவீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாயிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது.

அத்தருணம் தாங்களும் தங்களது குடும்பத்தவர்களுடன் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

அத்துடன் அவரின் மரணச் செய்தி கேட்டவுடன் வந்து உதவிகள் புரிந்தவர்கட்கும், கண்ணீர் அஞ்சலிகள் வெளியிட்டோர், தொலைபேசி மூலம் ஆறுதல் செய்தி கூறியோருக்கும், நேரில் வந்து அஞ்சலி செய்தும் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டும் அவரது ஆத்ம சாந்திக்காக பிரார்த்தித்த அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

குடும்பத்தினர்.

இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

(3937)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## உண்மையான அன்பு

ஒரு பெரியவரைப் பார்த்துக்கேட்டேன், "இந்த உலகத்தில் எல்லோரும் அன்பைப்பற்றியும் அதன் பெருமைகளைப்பற்றியும் பேசிக்கொண்டிருக்கிறார்களே... அன்பு என்ன அவ்வளவு தூரம் பேசவேண்டிய ஒருவிடயமா?" என்று கேட்டேன்.

இதற்கு அவர் சொன்னார் :

"நமக்கு உண்மையான அன்பென்றால் என்னவென்றே தெரியாது. அதனால் தான் அதைப்பற்றி அதிகமாக பேசிக் கொண்டிருக்கிறோம்" என்றார்.

பொதுவாக நாம் வாழ்ந்து பார்க்காததைப்பற்றி நம் மனம் அதிகமாகப்பேசும். உண்மையான அன்பை நாம் இன்னும் அனுபவித்துப் பார்த்ததில்லை அது நம்மிடம் உயிரோடு இயங்கவில்லை.

உண்மையிலேயே அன்பு இயங்கிக்கொண்டிருந்தால் நாம் அதைப்பற்றி அதிகமாக பேசவேண்டிய அவசியமே இல்லை.

நாம் அதிகமாக அதைப்பற்றி பேசுவதிலிருந்தே அது உயிரோடு இயங்கவில்லை என்பது தெளிவாகிறது.

நாம் பல வழிகளில் அது இயங்குவது மாதிரியான ஒரு பொய்த்தோற்றத்தை கொடுத்துக் கொண்டிருக்கிறோம்.

அதைப்பற்றி கவிதை எழுதுவது – மேடையில்பேசுவது – நாடகம் – சினிமா... இப்படி எல்லாவற்றிலும் அன்பைப்பற்றி அதிகமாக சொல்லிக்கொண்டிருக்கிறோம். அன்பைப்பற்றி ஒன்றுமே தெரியாதவன் எழுதும் கவிதை, அதைப்பற்றி நன்றாகத் தெரிந்தவன் எழுதும் கவிதையைவிட நன்றாகவே இருக்குமாம்.

ஏனெனில் தெரியாதவனிடம் இருக்கும் வெறுமை ஆழமானது.

அதை அவன் வார்த்தை ஜாலங்களால் நிரப்ப முயற்சி செய்கிறான். அதனால் அன்பென்றால் என்ன என்பதை முதலில் நன்றாகப்புரிந்து கொள்ள வேண்டும்.

ஓஷோ என்ன சொல்கிறார் என்றால்... நாம் அன்பு என்று நினைத்துக்கொண்டிருப்பது உண்மையில் அன்பு கிடையாதம். அது அன்பின் பொய்த்தோற்றம் என்கிறார் அவர். முதலில் இந்த பொய்த்தோற்றத்தை புரிந்து கொள்ளவேண்டும்.

இப்போது உதாரணத்துக்கு ஒருத்தர் இன்னொருத்தரை நேசிக்கிறார் என்று வைத்துக் கொள்வோம். நேசிக்கப்படுபவர் முழுமையாக இவர் வசம் வந்துவிட்டார் என்றால் அந்த நேசிப்பு விரைவில் இறந்துபோய்விடும்.

ஆனால் அந்த நேசிப்புக்கும் பல தடங்கல் ஏற்பட்டு அதை அடையமுடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டால், அப்பொழுது அந்த 'அன்பு' தீவிரமடைகிறது. அந்த அன்பு நிறைவேறாத ஒரு கட்டம் வந்தால் அது தெய்வீகக்காதல் ஆகிறது.

அதனால் ஒருத்தர் அன்பில் அல்லது காதலில் ஜெயித்து விட்டால் அது சுலபமாக இறந்துவிடும் அதை அடைவதற்கு தடைகள் அதிகமாகிவிட்டது என்று வைத்திருங்கள் அப்பொழுது இவருக்கு அகங்காரமும் இறுக்கமும் ஏற்படுகிறது.

இந்த இறுக்கநிலையைத்தான் 'அன்பு' அல்லது 'காதல்' என்று இப்பொழுது சொல்லிக்கொண்டிருக்கிறோம்.

ஆக இப்பொழுது நாம் 'காதல்' என்று நினைத்துக் கொண்டிருப்பது உண்மையிலேயே 'காதல்' இல்லை. அது முட்டாள் தனமான அகங்காரத்தின் வெளிப்பாடு.

அது ஒரு இறுக்கநிலை. போராட்டம் மற்றும் வேறுபாட்டு நிலை இதைத்தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும் என்கிறார் அவர்.

நம்முடைய முன்னைய மனிதசுவட்டம் மிகவும் தந்திரமாக அன்பை நிலைப்படுத்த சில வழிகளைக் கையாண்டிருக்கிறது.

அன்புக்குரியவர்கள் ஒருத்தரை ஒருத்தர் நீண்டநாள் பார்க்காமல் இருந்தால் மனதுக்குள் ஒரு வெறி ஏற்படுகிறது. அதனால் இப்படி இடைவெளிவிட்டு சந்திப்பது போன்ற சந்தர்பங்களை ஏற்படுத்துவது. உண்மையில் அன்பு மிகவும் அமைதியான நிலையில் ஏற்படுவது அங்கே கோபத்திற்கோ, வெறுப்பிற்கோ, அல்லது கவர்ச்சிக்கோ இடம் கிடையாது.

இன்னும் சொல்லப்போனால் உண்மையிலேயே அங்கே அன்பும் கிடையாது: வெறுப்பும் கிடையாது. ஏனெனில் அந்த அன்பு அடுத்தவர்களை சார்ந்திருப்பதில்லை. இது தான் பெரியவர்கள் சொல்லும் அன்பின் அடையாளம்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும்

### ஜனாதிபதியிடம் சிவசக்தி ஆனந்தன் எம்.பி கோரிக்கை

யுத்த சூழ்நிலையையும் பொருட்படுத்தாமல் பல வருடங் களாகத் தொண்டர் ஆசிரியர்களாகப்பணியாற்றி வரும் இளைஞர் யுவதிகளுக்கு நிரந்தர நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். என்று வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் என்.சிவசக்தி ஆனந்தன் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கடிதம் ஒன்றையும் அனுப்பிவைத்துள்ளார். அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வவுனியா வடக்கு, மடு, துணுக்காய், முல்லைத்தீவு, கிளிநொச்சி, வடமராட்சி ஆகிய ஆறு கல்விவலயங்களில் போர்க்காலம் தொடக்கம் பல்வேறு கஸ்டங்கள் நெருக்கடிகளுக்குமத்தியில் 800 பேர்தொண்டர் ஆசிரியர்களாக பல வரு டங்கள் கடமையாற்றி வந்துள்ளார்கள்.

சாதாரண பாடசாலைகளில் நிலவிய ஆசிரியர்களுக்கான வெற்றிடங்களை நிரப்பி அவர்களது கடமைகளை இவர்கள் மேற்கொண்டு வந்துள்ளார்கள்.

தேவைகள் மிகுந்திருந்த காலத்தில் இந்த தொண்டராசிரியர்கள், இந்தப்பிரதேசங்களுக்கு ஆற்றியுள்ளபணி மிகவும் பெறுமதி வாய்ந்தது. அந்த சேவை நன்றியுடன் கௌரவிக்கப் படவேண்டியதும் கூடவாகும்.

இருப்பினும் இத்தகைய சேவையாற்றிய இந்ததொண்டர் ஆசிரியர்கள், யுத்தசூழலில் தமக்கு ஏற் பட்டிருந்த தனிப்பட்ட கஷ்ரங்களையும் பொருட்படுத்தாமல் பணியாற்றி வந்துள்ளார்கள். இப்போதும் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆயினும் கொடுப்பனவுகள் எதுவும் வழங்கப்படுவதில்லை. அத்துடன்தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கப்பட்ட சந்தர்ப்பங்களில் இந்த ஆசிரியர்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படவில்லை.

இதனால் எந்தவித மான வருமானமும் இன்றி இந்த ஆசிரியர்கள் தமது வாழ்க்கையைக் கொண்டு நடத்துவதில் பெரும் கஸ்ரங்களுக்கும் சிரமங்களுக்கும் ஆளாகியிருக்கின்றார்கள்.

இவர்களது கஷ்டநிலைமைகளையும் ஆசிரிய சேவையையும் கவனத்தில் எடுத்து நிரந்தர நியமனம் வழங்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன் என அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளா. (ஸ்ரீ-2)

# சிவராத்திரியன்று திருக்கேதீஸ்வரத்தில் 4 இலட்சம் பக்தர்கள் வழிபாடு

சிவராத்திரி தினத்தன்று மன்னார் திருக்கேதீஸ்வரம் ஆலயத்தில் நாலு இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப் பட்டிருந்த போதிலும் பல பக்தர்களிடம் பெறுமதியான நகைகள் கொள்ளையிடப்பட்டுள்ளதாக முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

சிவராத்திரி தினத்தை முன்னிட்டு மன்னார் திருக்கேதீஸ்வரம் ஆலயத்தில் பல்வேறு சமய நிகழ்ச்சிகளும் இசை நிகழ்ச்சியும் இடம் பெற்றன. பல்லாயிரக்கணக்கான மக்கள் பாலாவியில் நீர் எடுத்து வந்து சிவனுக்கு திருமுழுக்கு செய்தனர்.

அத்துடன் பல பெண்களின் நகைகள் கொள்ளையிடப்பட்டதாக பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது. ஆலயத்திற்குள்ளேயே பெருமளவானோரது நகைகள் கொள்ளையிடப்பட்டதாகவும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | மருதனார்மடம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 220 | 280 | 200 |
| உருளைக்கிழங்கு | 65 | 60 | 70 |
| பச்சைமிளகாய் | 240 | 250 | 240 |
| தக்காளி | 110 | 150 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 50 |
| கோவா | 80 | 120 | 120 |
| கரட் | 150 | 200 | 120 |
| பூசணி | 70 | 70 | 70 |
| புடோல் | 70 | 90 | 100 |
| வாழைக்காய் | 60 | 70 | 60 |
| சின்ன வெங்காயம் | 100 | 110 | 80-100 |
| பெரிய வெங்காயம் | 80 | 70 | 100 |
| பாகற்காய் | 130 | 130 | 140 |
| வெண்டிக்காய் | 120 | 150 | 140 |
| கருணைக் கிழங்கு | - | 80 | - |
| பயற்றங்காய் | 220 | 200 | 240 |
| லீக்ஸ் | 110 | 150 | 140 |
| பீற்றூட் | 70 | 80 | 80 |
| கறிமிளகாய் | 200 | 250 | 170 |
| முருங்கைக்காய் | - | 600 | 600 |
| போஞ்சி | 150 | 140 | 120 |
| கத்தரிதம்புள்ள | - | 200 | - |
| கீரை – 1 பிடி | 5-15 | 20 | 10-20 |
| தேசிக்காய் | 60 | 30 | 30 |
| தேங்காய் (ஒன்று) | 30-60 | 50 | 30-60 |

# இராசி பலன்

*05.03.2011*
*(மாசி 21, சனிக்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.22 மணிக்கு*
*பிரதமை பின்னிரவு 4.43 மணிவரை*
*பூரட்டாதி பின்னிரவு 5.19 மணிவரை*
*இராகுகாலம் 9.26-10.56 மணிவரை*
*சுபநேரம் 3.26-4.56 மணிவரை*

**மேடம்** எதிர்காலம் சிறப்பாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், வருமானம் திருப்தி தரும், புகழ் கூடும், பெரியோர் உதவியுண்டு, சுபசெய்திகள் வந்துசேரும்.

**இடபம்** நண்பர்கள் ஒத்துழைப்பு வழங்குவர், தொழில்வளர்ச்சிக்கு அதிகம் பாடுபடுவீர்கள், தூரத்தேச செய்தியால் உள்ளம் மகிழ்வீர்கள், மாலையில் பொருட்சேர்க்கையுண்டு.

**மிதுனம்** கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்கு செல்லவேண்டிய நாள், உங்களின் கடினஉழைப்பை மற்றவர்கள் வியப்பாக பார்ப்பர். பயணத்தால் பலன் கிடைக்கும்.

**கடகம்** கொடுத்த வாக்கை காப்பாற்ற வேண்டுமென்ற எண்ணம் மேலோங்கும், பயணங்களில் கூடிய கவனம் தேவை, தேக ஆரோக்கியத்தில் அக்கறை கொள்ளவேண்டிய நாள்.

**சிங்கம்** சந்தித்த நண்பர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், களஸ்திர நன்மையுண்டு, தொலைபேசி வழித்தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும், விருந்து உபசாரத்தில் கலந்து சிறப்படையும் நாள்.

**கன்னி** கூட்டு முயற்சி வெற்றிபெறும், எதிர்பார்த்த சலுகைகள் இயல்பாகவே வந்து சேரும், உடல் நலம் சீராகி உற்சாகப்படுத்தும், செய்தொழிலால் மேன்மையடைவீர்கள்.

**துலாம்** எதிர்பார்ப்புக்கள் நிறைவேறலாம், வியாபார விருத்தியுண்டு, சுபகாரியப்பேச்சுக்கள் முடிவாகி மனநிம்மதியை கொடுக்கும், புத்திரர்களால் மகிழ்ச்சி உண்டு.

**விருச்சிகம்** வருமானம் திருப்தி தரும், பயணங்களானால் பலன்உண்டு, பாராட்டும் புகழும் கூடும், எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும், வாகன சுகமுண்டு.

**தனுசு** மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், உடன்பிறப்புக்கள் அனுசரணையாக நடந்து கொள்வர் குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும், செய்தொழிலில் முன்னேற்றமுண்டு.

**மகரம்** சொன்ன சொல்லைக்காப்பாற்றி மகிழ்வீர்கள், வருமானம் பல வழிகளில் வந்து சேரலாம், உறவினர்களிடையே விவாதங்கள் ஏற்படலாம், சுப செய்திகள் வந்துசேரும்.

**கும்பம்** உறவினர் வருகையால் திடீர் செலவுகள் ஏற்படலாம், ஆரோக்கியம் சீராகமாற்று மருத்துவத்தை கையாள்வீர்கள், உஷ்ண சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம்.

**மீனம்** உறவினர் சிலரின் அன்புக்கட்டளைக்கு உட்பட நேரிடலாம், தொழிலில் சிறு மாற்றங்கள் செய்யும் சூழ்நிலை உருவாகலாம், தூர தேச செய்தி வியக்கவைக்கும்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





யா/ ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் விருந்தினர்கள் பாண்ட் வாத்தியம் சகிதம் அழைத்து வரப்படுவதையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட மத்திய வங்கியின் வட பிராந்திய முகாமையாளர் க. ஸ்ரீதரன் விளையாட்டு முதல்வனிடம் ஒலிம்பிக் சுடரைக் கையளிப்பதையும் அருகில் அதிபர் செல்வி ந. பிரதா, விளையாட்டுத் துறைச் செயலர் அ. ஸ்ரீதரன் , சிறப்பு விருந்தினரான உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் செ. குபேரநாதன் ஆகியோர் நிற்பதையும் படங்களில் காணலாம்.

# சைவ சமய அபிவிருத்திக்கழகம் நடத்தும் நீதி நூல் மனனப்போட்டி

(யாழ்ப்பாணம்)

வண்ணை-சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவ சமய அபிவிருத்திக் கழகம் வருடந்தோறும் நடத்தி வரும் நீதி நூல் மனனப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

தரம்1,2 மாணவர்களுக்கு நடைபெறும் இப் போட்டியில் பல்வேறு பாடசாலைகளைச் சேர்ந்த சுமார் 750 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர். இவர்களுக்கான அனுமதி அட்டைகள் யாவும் பரீட்சார்த்திகள் கல்வி கற்கும் பாடசாலைகளுக்கும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு தபால்மூலமும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாதவர்கள் இன்று சனிக்கிழமை சைவ சமய அபிவிருத்திக்கழக அறிவகம்,இலக்கம் 82,நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறு சைவ சமய அபிவிருத்திக்கழகப் பரீட்சைச் செயலர் சு.ஸ்ரீகாந்தன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ)

# இளைஞர்,யுவதிகளுக்கான நாடகப் பயிற்சிப் பட்டறை

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் கிளிநொச்சி மாவட்ட இளைஞர்-யுவதிகளுக்கான இரு நாள் நாடக பயிற்சிப்பட்டறை ஒன்று நடைபெறவுள்ளது.

இப்பயிற்சிப்பட்டறையானது 8, 9ஆம் திகதிகளில் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற கிளிநொச்சி மாவட்ட காரியாலய மண்டபத்தில் நடைபெறும்.

இதில் 50 இளைஞர் ,யுவதிகள் கலந்துகொள்வர். கிளிநொச்சி மாவட்ட இளைஞர் ,யுவதிகளை நாடக டிப்ளோமா பாட நெறிகளுக்கு உள்வாங்குவதற்கு முன்னோடியாக நடத்தப்படும் இப்பயிற்சிப்பட்டறையில் திறமைகளை வெளிக்காட்டும் இளைஞர்-யுவதிகள் கொழும்பில் நடைபெறும் நாடக டிப்ளோமா பாட நெறிக்கு உள் வாங்கப்படவுள்ளனர். இப் பயிற்சிப்பட்டறையில் பங்கு பற்ற விரும்பும் இளைஞர்-யுவதிகள் தங்களுடைய பெயர் விபரங்களை உதவிப்பணிப்பாளர், தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் ,மாவட்டப் பணிமனை,கிளிநொச்சி என்னும் முகவரியுடன் அல்லது 0776041503 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பதிவு செய்து கொள்ளலாம் என கிளிநொச்சி மாவட்ட உதவிப்பணிப்பாளர்ஓ.கே.குணநாதன் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ)

# கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

சமூக விஞ்ஞான படிப்பு வட்டம் நடத்தும் 'இலங்கையின் உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரங்களும் அபிவிருத்தி வாய்ப்புகளும்' எனும் தலைப்பிலான கருத்தரங்கு நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு புதிய உயர் கல்லூரியில் சமூக அரசியல் வரலாற்று ஆய்வறிவாளர் உதயகுமார் தலைமையில் நடை பெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் அரசியல் விஞ்ஞான விரிவுரையாளர், உள்ளூராட்சி நிர்வாக அதிகாரி ஆகியோரால் விரிவுரைகள் வழங்கப்படவுள்ளன. (ஸ்ரீ-9)

# சர்வதேச நாணயங்கள் பற்றி மாணவர்கள் அறிந்திருக்க வேண்டும்

## இந்திய பேராசிரியர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச நாணயங்கள் தொடர்பான அறிவினை மாணவர்கள் பெற்றுக்கொள்ள வேண்டும். அப்போதுதான் நாடுகளின் தனித்துவமான தன்மைகளை விளங்கிக்கொள்ள முடியும் என இந்திய பேராசிரியரும் சர்வதேச நாணயக் கண்காட்சியின் ஒருங்கிணைப்பாளருமான எஸ். எஸ்.அந்தோனிசாமி தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணயங்களின் கண்காட்சி நேற்று முன்தினம் யாழ். சென்ஜோன்ஸ் கல்லூரியில் இடம்பெற்றது. இதில் மாணவர்களுக்கு நாணயங்கள் தொடர்பாக விளக்கமளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒரு நாட்டின் அரசியல் ,பொருளாதாரம் என்பவற்றை நாணயங்கள் ஊடாக அறிந்து கொள்ள முடியும். தற்போது காட்சிக்காக 240 நாடுகளின் நாணயங்கள் வைக்கப்பட்டுள்ளன என்றார். அத்துடன் மாணவர்களுக்கு நிகழ்வின் இடையில் பலவிதமான கேள்விகளை எழுப்பி அவர்களுக்கு பரிசில்கள் வழங்கி நாணயங்கள் தொடர்பாக ஆர்வத்தை ஏற்படுத்தினார்.

மேலும் பாடசாலையின் அதிபர் ஜே.ஞானப்பொன்ராசா தனது உரையில் தெரிவிக்கையில், இந்நாணயக்கண்காட்சி மூலம் மாணவர்கள் பல நாட்டு நாணயங்கள் பற்றியதான அறிவைப் பெறக்கூடியதாக அமைந்துள்ளது. உலக நாடுகளில் இருந்து வெளியீடு செய்யப்படும் நாணயங்கள் பற்றியதான தகவல்களையும் அவை உருவாக்குவதற்கான கால சூழ்நிலையையும் மாணவர்கள் அறிந்துகொள்ளக்கூடியதாகவுள்ளது என அவர் தெரிவித்தார். (ஸ்ரீ-2-6)

# வெளிநாட்டு பறவையை பிடித்து தம்வசம் வைத்திருந்த இருவருக்கு அபராதம்

(கரவெட்டி)

நாவற்குழிப்பகுதியில் வெளி நாட்டுப் பறவையைப் பிடித்து தன் வசம் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் இருவர் சாவகச்சேரி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள் ளனர்.

கைதடி,மந்துவில் பகுதிகளைச் சேர்ந்த மேற்படி இரு சந்தேக நபர்களும் நேற்று முன்தினம் சாவகச்சேரி நீதவான் நீதிமன்றில் நீதிபதி மாணிக்கவாசகம் கணே சராசா முன்னிலையில் மன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரித்த நீதிபதி இரு சந்தேக நபர்களும் மன்றில் குற்றத்தை ஒப்புக்கொண்ட மையால் இருவருக்கும் தலா 7 ஆயிரத்து 500 ரூபா அபராதமும் செலுத்தத் தவறின் 2 மாத சாதாரண சிறைத் தண்டனையும் வழங்கியதுடன் சான்றுப்பொருளான வெளிநாட்டுப் பறவையை பிடித்த இடமான நாவற் குழிப்பகுதியில் விடுவதற்கு பொலிஸாருக்கு நீதிபதி உத்தர விட்டார். (ஸ்ரீ-3-24)

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

2011.03 05

★1770 - பாஸ்டன் படுகொலை: பாஸ்டனில் அமெரிக்கர்களுக்கும் பிரித்தானியப் படையினருக்கும் இடையில் கிளம்பிய கலவரத்தை அடுத்து ஐந்து அமெரிக்கர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

★1793 - பிரெஞ்சுப படைகள் ஆஸ்திரியாவினால் தோற்கடிக்கப்பட்டன.

★1824 - பிரித்தானியர் பர்மாவின் மீது போர் தொடுத்தனர்.

★1940 - சோவியத் உயர்பீடம் 40ஆயிரத்து 100 போலந்துப் பிரஜைகளுக்கு மரண தண்டனை அளித்து கையொப்பமிட்டது.

★1964 - இலங்கையில் அவசரகாலச் சட்டம் அமுலாகியது.

## பிறப்புகள்

★1871 - ரோசா லக்சம்பேர்க், மார்க்சிய மெய்யியலாளர் (இ.1919)

★1886 - டொங் பிவு (DongBwu), சீனக் கம் யூனிஸ்ட் கட்சியின் முக்கிய உறுப்பினர் (இ.1975)

★1913 - கங்குபாய், இந்துஸ்தானி இசைப் பாடகி (இ.2009)

★1934 - Daniel Kahneman, நோபல் பரிசு பெற்ற இஸ்ரேலியர்

★1973 - த.ஜெயசீலன், ஈழத்து எழுத்தாளர்

## இறப்புகள்

★1878 - ரி.சின்னத்தம்பி, உடுப்பிட்டியைச் சேர்ந்த ஈழத்துப் புலவர்

★1953 - ஜோசப் ஸ்டாலின், சோவியத் தலைவர் (பி.1878)

★1966 - அன்னா அக்மதோவா, ரஷ்யக் கவிஞர் (பி.1889)

★2006 - கே.ஷங்கர், தமிழ்த் திரைப்பட இயக்குநர்

**2008 - இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவநேசன் படுகொலை செய்யப்பட்டார்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ அம்மா பகவான் பிரார்த்தனை நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் ஸ்ரீ அம்மா பகவான் சற்சங்க ஆன்மீகப் பிராத்தனை மையத்தினால் எதிர்வரும் 8 ஆம் திகதி செவ்வாய்கிழமை பிற்பகல் 3 மணிக்கு தோஷ நிவர்த்திக்கான பூசை நிகழ்வு இடம்பெறவுள் ளது.

எனவே பூசை நிகழ்வில் பக்தர் கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளு மாறு சுழிபுரம் ஆன்மீகப் பிராத்தனை மை யத் தினர் கேட்டுள்ளனர். (ஸ்ரீ-2)

# கால்கோள் விழாவும் கலை நிகழ்வுகளும்

(அல்வாய்)

பொலிகண்டி மக்கள் படிப்பக முன்பள்ளி யின் கால்கோள் விழாவும் கலை நிகழ்வுக ளும் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கந்தவன ஆலய இந்துமன்ற மண்ட பத்தில் மக்கள் படிப்பகத் தலைவர் சி.குலசிங்கம் தலை மையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மராட்சி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப் பாளர் சி.தில்லைநாதன் கலந்து சிறப்பிக்க வுள்ளார்.

சிறப்பு விருந்தினராக கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் முன்னாள் அதிபர் திருமதி சி.இராமநாதன் கலந்து சிறப்பிக்க வுள்ளார். (ஸ்ரீ-3-19)

# நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையினால் நவீன விஞ்ஞான முகாமைத்துவ நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 9 ஆம் திகதி புதன்கிழமை காலை 10 மணிக்கு கூட்டுற வாளர் வீரசிங்கம் மண்டபத்தில் யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையின் தலைவர் இ.ராஜாராம் தலைமையில் நடைபெறவுள் ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணை யாளர் வீகே.அருந்தவநாதன் கலந்து சிறப் பிக்கவுள்ளார். கௌரவ விருந்தினர்களாக யாழ். பிரதேச செயலர் திருமதி எஸ். தெய் வேந்திரம், நல்லூர் பிரதேச செயலர் பா.செந் தில் நந்தனன், யாழ். மக்கள் வங்கி பிரதான வீதிக்கிளை முகாமையாளர் வ. சண்முக முதலி, யாழ். பல்கலைக் கழகமுகாமைத் துவ கற்கைகள் வணிகபீட பீடாதிபதி பேரா சிரியர் க. தேவராஜா, யாழ். பல்கலைக்கழக சந்தைப்படுத்தல் துறை தலைவர் இ.இரட் ணம் ஆகியோர் கலந்துகொள்ள வுள் ளனர். (ஸ்ரீ-9)

# மெய்வல்லுநர் போட்டிகள்

கோண்டாவில் சிவபூமி பாடசாலையின் வருடாந்த விளையாட் டுப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு சிவபூமி பாடசாலை விளையாட்டு மைதா னத்தில் சிவபூமி அறக்கட்டணத் தலைவர் ஆறு. திருமுருகன் தலைமையில் நடை பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சிரேஷ்ட சட்டத்தரணி மா. தியாகராஜா, தேசிய சேமிப்பு வங்கி இளைப்பாறிய முகாமையாளர் திருமதி ரதி தியாகராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். சிறப்பு விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக விரிவுரையாள ரும் சர்வதேச விசேட ஒலிம்பிக் குழுவின் வட மாகாண விளை யாட்டுத் துறை பணிப்பாளருமான மா. இளம்பிறையன், ஆசி ரியை திருமதி சிவசக்தி இளம்பிறையன், உரும்பிராய் லயன்ஸ் கழக தலைவரும் பிரபல கட்டட ஒப்பந்தக்காரருமான கே.சண்முக நாதன், திருமதி ஜே.சண்முகநாதன் ஆகியோர் கலந்து சிறப் பிக்கவுள்ளனர். (ஸ்ரீ-9)

❖ ❖ ❖

(அல்வாய்)

கற்கோவளம் மெ.மி.த.க. பாடசாலையின் இல்ல மெய்வல் லுநர் போட்டி இன்று சனிக்கிழமை பி.ப 1.30 மணிக்கு பாடசாலை அதிபர். கா. புஸ்பராஜா தலைமையில் கற்கோவளம் பொது விளை யாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலய கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா கலந்து கொண்டு சிறப்பிக்கவுள் ளார்.

இந் நிகழ்வில் சிறப்பு விருந்தினராக வட மராட்சி வலய திட்ட மிடல் பிரதிக்கல்விப் பணிப்பாளர் சி. நந்தகுமார் கலந்துகொள் ளவுள்ளார். (ஸ்ரீ-3-19)

# பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்கு வருடாந்தம் 4000மில்.ரூபா இழப்பு

## அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவிப்பு

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு வருடாந்தம் 4 ஆயிரம் மில்லியன் ரூபா வருமானத்தை இழக்க நேரிடுவதாக பெற்றோ லிய வள அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

மக்களுக்கு மறைமுகமான நிவாரணமாக குறைந்த விலையில் எரிபொருள் வழங்குவதாலேயே இந்நிலை ஏற்படுகிறது என அமைச் சர் குறிப்பிட்டார். மகாவலி நிலையத்தில் நேற்று முன்தினம் நடை பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றிய அவர்,

இந்தியக் கம்பனி எரிபொருள் விலையை 5 ரூபாவினால் உயர்த் தியுள்ள நிலையில் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் விலைகளை உயர்த்த வேண்டுமென்று ஐ.தே.க.விரும்புகிறது. பொருட்களின் விலை கள் உயர்வதை ஐ.தே.க.வரவேற்கிறது. முன்பு எரிபொருளுக்கு 25 ரூபா வரி அறிவிடப்பட்டது.இதனை ஜனவரி தொடக்கம் 15 ரூபா வாக குறைத்துள்ளோம்.எரிபொருள் மூலம் நாம் அதிக இலாபம் ஈட்டுவதாக தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டு தவறானதாகும்.

ஈரானுடன் செய்துகொண்டுள்ள ஒப்பந்தத்தின் படி சந்தை விலையை விட குறைந்த விலைக்கே எமக்கு மசகு எண்ணெய் வழங்கப்படுகிறது. அதனால் உலக சந்தையில் எரிபொருள் விலை உயர்ந்தாலும் பழைய விலைக்கே எரிபொருள் கிடைக்கிறது. இந்த நன்மையும் மக்களுக்கே வழங்கப்படுகிறது.

80 ரூபா பெறுமதியான டீசல் மின்சார சபைக்கு 40 ரூபாவுக்கே வழங்கப்படுகிறது. இதனால் மின்சார சபை நஷ்டத்தில் இயங்கு கிறது. இல்லாவிட்டால் மின் கட்டணங்களை உயர்த்த நேரிடும்.ஐ.தே.க குற்றம் சாட்டினா லும் மறைமுகமாக மக்களுக்கு இவ்வாறான நிவார ணங்கள் வழங்கப்படுகின்றது என்றார். (ஸ்ரீ-2)

# மரண அறிவித்தல்

## சின்னக்குட்டி சிவஞானம்(சிவா)

வேளாபள்ளம் மிருசுவிலைப் பிறப்பிடமாகவும், யாழ்ப் பாணம்-குருசோ வீதியை வசிப்பிடமாகவும், தற்போது ஜேர்மனி (Neuss) இல் வாழ்ந்து வந்தவருமான சின்னக் குட்டி சிவஞானம் 28.02.2011 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னக்குட்டி - சீதேவி தம்பதி யரின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்ற ராசு-குணரத்தி னம் தம்பதியரின் அன்பு மருமகனும், றீற்றா றெஜினாவின் அன்புக்கணவரும், சிவபாக்கியம், சிவசுப்பிரமணியம், சிவரா ஜரட்ணம், சிவராஜா, காலஞ்சென்ற சிவனேஸ்வரி மற்றும் சிவராஜலிங்கம், சிவக்குமார் ஆகியோரின் அன்புச் சகோதர னும், லூர்துராணி, ஜெயராணி, ஜெரீன் (டெக்ஸர்) ஆகியோ ரின் மைத்துனரும், பாலச்சந்திரன், இம்மானுவேல் ஆகியோ ரின் சகலனுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் நேற்று 04.03.2011 வெள்ளிக் கிழமை பிற்பகல் 1மணிமுதல் 3 மணிவரை (Hauptfriedhof Neuss, Rheydter Strabe 191,41464 Neuss இல் ஆராதனை யுடன் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பாலச்சந்திரன் லூர்த்துராணி
(சகோதரி) 0112521161
றெஜீனா சிவஞானம்(மனைவி)
02131402856(ஜேர்மனி)

(சி-2601)

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
24
11
1988

மறைவு
05
03
2009

## அமரர் சிங்கராயர் பிரதாப்

கண்ணீர் துளிகள் ஈரமாய் எம் கன்னம்
கிழிக்குதடா– பிரதாப்
கண் மூடினாயே! எம் கண்களில் நீயே!
உயிராய் உருவமாய்!

4ஆம் வட்டாரம், மண்கும்பான்
கிழக்கு, அல்லைப்பிட்டி.

குடும்பத்தினர்.

(3025)

# கொழும்பில் சுற்றுலா வலயம்

(கொழும்பு)

கொழும்பில் சுற்றுலா வலயமொன்று அமைக்கப்படவுள்ளதாக அரசாங்கம் அறிவித் துள்ளது.

டி.ஆர்.விஜேவர்தன மாவத்தையில் பதினைந்து ஏக்கர் பரப்பில் இந்த சுற்றுலா வலயம் அமைக்கப்படவுள்ளது. குறித்த சுற் றுலா வலயத்தை அமைப்பதற்கு அமைச்சர வையின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரி மாதம் 31ஆம் திகதி கையொப்பமிடப்பட்ட அமைச்சரவையின் பத்திரத்தின் அடிப்படையில் குறித்த வலய காணிகளை நகர அபிவிருத்தி அதிகார சபை பொறுப்பேற்கவுள்ளது.

குறித்த பிரதேசத்தின் சில காணிப் பகுதி கள் நீண்ட காலமாக பயன்படுத்தப்படாத நிலையில் காணப்படுவதாகவும் அவற்றை வர்த்தக நோக்கங்களுக்காக பயன்படுத்த அரசாங்கம் உத்தேசித்துள்ளதாகவும் குறிப் பிடப்படுகிறது.

அரசாங்கத்திற்கு சொந்தமான சில கட் டடங்கள் இவ்வாறு நகர அபிவிருத்தி அதி காரசபையினால் பொறுப்பேற்கப்படவுள் ளது. (ஸ்ரீ-2)

# பண்டாரநாயக்கவின் சிலை இடம் நகர்த்தப்படமாட்டாது

## ஜனாதிபதி செயலகம் அறிவிப்பு

(கொழும்பு)

காலிமுகத்திடலில் அமைந்துள்ள முன் னாள் பிரதமர் அமரர் எஸ். டபிள்யூ.ஆர். டி. பண்டாரநாயக்கவின் சிலையை இடம் நகர்த்தும்திட்டம் கிடையாது என ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

முன்னாள் பிரதமரின் சிலை இடம் நகர்த் தப்படுதல் தொடர்பான வெளியான வதந்தி களின் அடிப்படையில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க கருத்துக்களை வெளியிட வேண்டிய அவசியமில்லை என ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு பணிப்பாளர் பந்துல ஜயசேகர தெரிவித்துள்ளார்.

சிலை இடம் நகர்த்தப்படவுள்ளதாக வெளி யான செய்திகளில் எவ்வித உண்மையும் கிடை யாது என்றும் ஊடகத் தகவல்களின் அடிப் படையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சிலையை அகற்ற சூழ்ச்சி செய்வதாக சந் திரிக்கா பண்டாரநாயக்க வெளியிட்ட கருத்து வருத்தமளிப்பதாக அவர் தெரிவித்துள் ளார்.

பொறாமை காரணமாக யார் சூழ்ச்சி களை செய்கின்றார்கள் என்பதனை சந்தி ரிக்கா பண்டாரநாயக்க நன்கு தெரிந்து கொண்டுள்ள நிலையில் இவ்வாறான கருத் துக்களை வெளியிடுவது பொருத்தமற்றது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பண்டாரநாயக்க சிலை மட்டுமன்றி டி.எஸ். சேனாநாயக்க மற்றும் ஆர். பிரேம தாச ஆகிய தலைவர்களின் சிலைகளும் அகற்றப்படமாட்டாது என அவர் குறிப்பிட் டுள்ளார்.

யதார்த்த நிலைமைகளை புரிந்து கொண்டு சந்திரிக்கா பண்டாரநாயக்க கருத் துக்களை வெளியிட வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# தேர்தல் செயலகமே தேர்தல் சட்டங்களை மீறியுள்ளது

## கபே அமைப்பு குற்றச்சாட்டு

(கொழும்பு)

தேர்தல் செயலகமே தேர்தல் சட்டங் களை மீறிச் செயற்படுவதாக கபே என்ற முன் னணி தேர்தல் கண்காணிப்பு அமைப்பு குற் றம் சுமத்தியுள்ளது.


பதாகைகள் மற்றும் சுவரொட்டிகளை ஒட்டக் கூடாது என்ற சட்டம் அமுலில் காணப்பட்ட போதிலும் சுவரொட்டிகளை ஒட்டுவதற்கு தேர் தல் ஆணையாளர் அனுமதி வழங்கியுள் ளதாக சுட்டிக்காட்டப்படுகிறது. சட்டவிரோத பிரசார நடவடிக்கைகளை கட்டுப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுக்கத் தவறியுள் ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

17 உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தல் களையே நீதிமன்றம் ஒத்தி வைத்துள்ள போதிலும் தேர்தல் செயலகம் 67 உள்ளூ ராட்சி மன்றங்களுக்கான தேர்தலை ஒத்தி வைத்துள்ளது.

இதன் மூலம் தேர்தல் ஆணையாளர் மக் களின் ஜனநாயக உரிமைகளை நிராகரித் துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பில் 197 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக கபே அறிவித்துள்ளது. (ஸ்ரீ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கள்ளிக்காட்டு இதிகாசம்



56



**கவிப்பேரரசு வைரமுத்து**

அடுத்த அரைக் கெசத்துல மஞ்ச(ள்) வரிக்கல்லு தெரிஞ்சுச்சு. "ஆகா! நான் கும்புடுற சாமி பொய்யில்ல" கெணத்துக் குள்ளேயே தலைக்குமேல கையத் தூக்கித் தாளம் போட்டுப் பெருங்கூத்தாட ஆரம்பிச் சிட்டாரு பேயத்தேவரு.

"ஏலே மொக்க! மஞ்சவரிக்கல்லு வந்தி ருச்சுடா. தண்ணி இருக்குங்குற சகுனம் இதாண்டா. போடு! போடு! இன்ன நேரம்ன்னு இல்ல. எப்ப வேண்ணாலும் தண்ணி வரலாம். போடு! ரெண்டுபோடு சேத்துப் போடு!" ஆவேசம் வந்து ஆப்பு அடிக்கி றாக ரெண்டுபேரும்.

நாலு நாலரைக் கெச ஆழத்துல நிக்கி றாக தாத்தாவும் பேரனும். வெட்டுறது கடுசில்ல. மண்ணக் கடத்துறதுதான் பெரும் பாடா இருக்கு. பாவம் பொடிப்பய! ஒத்த ஆளாச் சொமந்து சொமந்து இடுப்புல சத்து இல்லாம ஒடிஞ்சு போனான். ஒரு கமலை கட்டி உருளபோட்டுக் கடத்தலாம்ன்னு நெனச்சாரு. கமலை போடுறதுன்னா லேசா? கொள்ளக்காசாகும். ரெண்டு கமலைக் கால் நடணும். அதை நட ரெண்டு கிடை மரத்துக்கல்லு வாங்கணும். இந்தா இந் தான்னு ஏகப்பட்ட ரூவா ஆகிப்போகும். நடக்கிற காரியமா? நாளப் பின்னப் பாப்பம்.

மஞ்ச(ள்) வரிக்கல்ல ஒடைச்சா உள்ள தெரியுது ஓட்டு மண்ணு பக்குப்பக்கா ஓடு வர ஆரம்பிச்சவுடன பக்குன்னு ஆகிப் போச்சு பேயத்தேவருக்கு. யாத்தே! இது பாறை வரப் போகுதுங்கிறதுக்கு அறிகுறி யாச்சே! கல்லோட எப்படி மல்லாடுறது?

அவரு நெனச்சமாதிரியே ஆகிப்போச்சு. ஒன்றரை அடி தோண்டுனா 'கரேர்'ன்னு தெரியுது கரும்பாறை. செத்துப் புதைச்ச யான முதுகு விறைச்சு நிக்கிற மாதிரி பொடைச்சு நிக்குது பாறை. இதுக்குமேல மகனே உன் சமத்துன்னு மரியாத இல்லாம மொறைக்குது.

கெணத்துக்குள்ளேயே துண்ட அவுத்து வேர்வையத் தொடச்சுக்கிட்டு ஈசானி மூலையில முதுகச் சாய்ச்சு சடசடன்னு சரிஞ்சு உக்காந்தாரு பேயத்தேவர். சொரசொ ரன்னு நீட்டிக்கிட்டிருந்த சுக்கான் கல்லுக முதுகுல ரத்தக்கோடு கிழிக்கிறதும் மூளை யில ஒறைக்கல. வளையாத கடப்பார மனசும் வளைஞ்சுபோச்சு. அன்னைக்கு வேலைய நிறுத்திட்டு வீட்டுக்கு வந்துட்டாரு.

"யம்மா மின்னலு! அப்பன் ஒண்ணு கேப்பேன் தப்பா நினைக்க மாட்டியே"

"கேளுப்பே"

"கெணத்துல பாறை விழுந்துபோச்சு. வேட்டு வைக்காம வெட்டமுடியாது போலிருக்கு"

தன் மடியில உக்காந்திருந்த பேத்தியத் தலயத் தடவிக்கிட்டே பேசுனாரு பேயத்தேவர்.

"அதுக்கு என்னிய என்ன பண்ணச் சொல்ற?"

"நீ ஒண்ணும் பண்ண வேணாம். ஒம் பிள்ளகாதுல கெடக்குற கடுக்கானக் கழத்திக் குடுத்தீன்னா கெணத்துல தண்ணி உண்டாக்கிருவேன். தண்ணி வந்திட்டா ரெண்டுக்கு நாளா செஞ்சுபோட்ருவேன்."

"நான் வேணான்னா விடவா போறீக. முதல்ல கடுக்கானக் கேப்பீக. அப்பறம் காதக் கேப்பீக. வாழா வெட்டியா வந்தவ வளஞ்சுதான போகணும்."

பிள்ள உறங்கவும் கடுக்கான் ரெண்டையும் கழத் திக் குடுத்தா. ஒரு வெளக்கமாத்துக் குச்சியில கொஞ் சம் கொஞ்சம் ஒடிச்சு ரெண்டு காது ஓட்டையிலயும் செருகிவிட்டா. விடிஞ்சு எந்திரிச்சு "என் கடுக்கானக் காணோம்! என் கடுக்கானக் காணோம்"ன்னு மின்னலு பொண்ணு கையக் காலத் தரையில அடிச் சுக் கத்திக் கதற -

"காக்கா தூக்கிட்டுப் போயிருக்கும்டி. கத்தாதடி - வந்திரும்"ன்னு, மின்னலு சமாதானப்படுத்தினாள்.

கடுக்கானத் தூக்கின காக்கா கால்ல செருப்ப மாட்டிச் சிரிச்சுக்கிட்டே ஆண்டிபட்டி அடகுக் கடைக்குப் போயிருச்சு.

பேயத்தேவருக்காக முத்துக்காளி நாயக்கரு வெடி மருந்து செய்ய ஆரம்பிச்சாரு. அதுக்குன்னு ஆன பொருள்களக் கணக்குப் பாத்துச் சேத்துப் பதப்படுத்திப் பக்குவம்பண்ணி உரல்ல போட்டு, இரும்புப்பூண் இல்லாத உலக்கையாத் தேடி எடுத்து இடிக்க ஆரம்பிச்சாரு. இரும்புப்பூண்ல இடிச்சாத் தீப்பிடிச்சிருமாம். ஒரு பதத்துக்கு வந்த உடனே இனிமே இது சொன்னபடி கேக்கும்ன்னு சொல்லிக்கிட்டே இடிக்கறத நிறுத்துனாரு.

'நீ வெள்ளக்காரன் நாட்ல பொறந்திருக்க வேண்டிய ஆளுய்யா. இந்தப் பிச்சைக்காரப்பய ஊர்ல பொறந்துட்ட'ன்னு முத்துக்காளி நாயக்கரைக் கட்டிப்புடிச்சு இறுக்கிப் பாராட்டினாரு பேயத்தேவர். ஒரு வேண்டுகோளும் வச்சாரு.

"அய்யா இந்த வெடி வைக்கிற வித்தையெல்லாம் எனக்குத் தெரியாது. அது அதுக்கு உண்டான ஆளு செஞ்சாத்தான் அது உருப்படியாயிருக்கும். வந்து வச்சுக்குடுத்துட்டுப் போயிருங்கய்யா"

வெடிமருந்துத் திரியோட வறட்டுக் காட்டுக்கு வந்து சேந்தாக கெணத்துப் பாறையில சம்பர் கம்பி வச்சு அடிச்சு அடிச்சு ஆறு குழிபோட்டாரு நாயக்கரு. ஒவ்வொரு குழியும் ரெண்டே முக்கா அடி ஆழம் ஒவ்வொரு குழியிலயும் ஈரப்பசை இல்லாம சுத்தமாத் தொடச்சு, வெடிமருந்த உள்ளபோட்டுத் திரியும் வச்சுக் கரையேறினாக எல்லாரும்.

வேட்டு வைக்கிற விசேசமில்லையா! எல்லாருக் கும் நெல்லுக்கஞ்சி காச்சி, கத்திரிக்கா மாங்கா போட்டுச் 'சிவீர்'ன்னு ஒரு கொழம்பும்வச்சு, குத்துச் சட்டி தலையில குழம்புச் சட்டி கையிலேன்னு வந்து சேந்தா மின்னலு. அவ முந்தானையப் புடிச்சுக்கிட்டே அவ பிள்ள வேற கூடவே வந்தி ருச்சு - கையில ஒரு காத்துப் போன பந்தை வச்சுக் கிட்டுக் கண்ணயும் கசக்கிக்கிட்டு.

மொக்கராசு கிள்ளிட்டு வந்த ஆமணக்கு எலையில எல்லாருக்கும் விருந்து. காக்கா பறக்காத காட்ல நெல்லுக் கஞ்சியும் கத்திரிக்காக் குழம்பும்ன்னா சாமானியப்பட்ட காரியமா? போன சென்மத்துல புண்ணியம் கிண்ணியம் பண்ணியிருக்க வேணாமா? ஒரு ஆமணக்கு எலையில சோறு தின்னவுக இன்னொரு ஆமணக்கு எலையில கை தொடச்சுக் கிட்டாக.

"ஓடிப் போயிருங்கப்பா! எல்லாரும் ஓடிப்போயி ருங்க. திரிக்குத் தீ வைக்கப் போறோம்; ஓடிப் போயிருங்க."

கத்தாழைக்குப் பின்னால - கிலுவ மரத்துக்குப் பின்னால ஆளாளுக்கு உசுரக் கையில புடிச்சுக் கிட்டு ஓடி ஒளிய வச்சாகய்யா திரியில தீயை. அது படமெடுத்துப் போற பாம்பு மாதிரி பொசு பொசுன்னு போச்சு. உள்ள போயிகொஞ்ச நேரம் ஒண்ணுமே ஆகல. திரி செத்துப் போச்சோன்னு எல்லோரும் துணுக் துணுக்குன்னு நிக்கிறப்ப - வெடிச்சதையா பாறை! குண்டுக் கல்லுகளும் குறுங்கல்லுகளும் தெறிச்சு விழுந்ததுல தெகச்சு நிக்குது தெசையெல்லாம்! கள்ளிக்காடே கதிகலங்கிப் போச்சு. கழுகு காடை கதுவாலி யெல்லாம் செத்தோம் பொழைச்சோம்ன்னு கள்ளிக் காட்டைக் காலிபண்ணிட்டுப் பறக்குதுக. மொத ஆளா ஓடிப்போயிப் பாத்தது மொக்கராசுதான். 'தாத்தா! தண்ணி'ன்னு கத்தினான். 'வைரவா! சீலக்காரி'ன்னு கத்திக்கிட்டே ஒரே ஓட்டமா ஓடிவந்தாரு பேயத்தேவரு.

எட்டிப்பாத்தா கெணத்துக்குள்ள சலசலசலன்னு தண்ணிவழியிறதும் தெரியுது; கெணத்துக்குள்ள விழுந்த பந்தை எடுக்கப்போன மின்னலு பிள்ள காக்காமாதிரி கருகிக் கெடக்குறதும் தெரியுது.

சாமி இருக்கா இல்லையாங்கிற சந்தேகம் மொதத் தடவையா வந்துச்சு பேயத்தேவருக்கு. சண்டக்காரனுக்குக் கூட ஈவு இரக்கம் இருக்குமே; இந்தச் சாமிக்கு இல்லையே. கஞ்சிக்குச் செத்தவன் கொரவளைய இப்படியே கடிச்சுக்கிட்டிருந்தா அது சாமியா இருக்க முடியுமா?

செத்து ஒரு மாசமாகியும் கண்ணுக்குள்ளயே இருக்கா மின்னலு பொண்ணு. சின்னக் கழுத. சிரின்னா அழுகுறவ... அழுன்னா சிரிக்கிறவ... பாவம் பண்ணத்தெரியாத பட்டாம் பூச்சி. ஒழுகிக்கிட்டே இருக்கிற மூக்கத் தொடைக்கத் தெரியாது அந்த நாதியில்லாத நாய்க்கு. சிந்துடின்னா சிந்தமாட்டா.

(வளரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலையின் எழுச்சிக்கு வித்திட்ட அதிபர்கள்

யாழ்.இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை யாழ்ப்பாணத்தில் இயங்கும் ஒரேயொரு இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை ஆகும். சுமார் 25 ஆண்டுகள் சிறப்பாகச் செயற்பட்டு வரும் இப்பாடசாலையின் முதல் அதிபராக இருந்தவர் திருமதி யோகம்மா ஸ்ரீவிக்கினேஸ்வரா அவர்கள். (1979-1996) அமைதியான சுபாவமுடையவர். அவரது காலத்திலிருந்து அடியேனுக்கு இப்பாடசாலையுடன் தொடர்பு உண்டு. எனது பிள்ளைகள் இங்குதான் ஆரம்பக் கல்வியைக் கற்றார்கள். அது முதல் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் உறுப்பினராகவிருந்து செயற்பட்டுள்ளேன்.



முதல் அதிபர்
திருமதி யோகம்மா
ஸ்ரீவிக்கினேஸ்வரா

திருமதி ஸ்ரீவிக்னேஸ்வரா அவர்களுடன் இணைந்து பாடசாலை வளங்களைக் கட்டியெழுப்பிக் கொண்டிருந்த சூழ்நிலையில் 1995ஆம் ஆண்டு இடப்பெயர்வு ஏற்பட்டது.

மீண்டும் யாழ்.நகர் திரும்பியபோது பாடசாலையின் உடைமைகள் திருடப்பட்டிருந்தன. அதிபரின் ஓய்வுக் காலமும் வந்தது. பாடசாலையைப் பொறுப்புக் கொடுப்பதற்கு முன்னர் பல பிரச்சினைகள் ஏற்பட்டன. அந்த நேரத்தில் கல்வி அதிகாரியாக இருந்த கோ.சி.வேலாயுதம் அவர்கள் மூலம் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டன.

அடுத்த அதிபர் யார் என்பதில் போட்டி நிலவியது. இன்று பாடசாலைகளைப் பொறுப்பேற்பதற்கு அதிபர்கள் தயக்கம் காட்டுகிறார்கள். அன்று பொறுப்பேற்பதற்குக் கடும் போட்டி. இந்தச் சூழ் நிலையில் பாடசாலையின் உப அதிபராகவிருந்த திருமதி தனரஞ்சினி துரைசிங்கம் அவர்களை அதிபராக நியமிக்கும்படி பாடசாலை அபிவிருத்திச் சங்கமும் நலன்விரும்பிகளும் கேட்டுக்கொண்டதற்கமைய புதிய அதிபராக திருமதி தனரஞ்சினி துரைசிங்கம் பொறுப்பேற்றுக்கொண்டார்.

முதல் அதிபர் திருமதி ஸ்ரீவிக்கினேஸ்வராவின் வழிகாட்டலில் திருமதி துரைசிங்கமும் பாடசாலையைச் சிறப்பாக வழிநடத்தி 29 வருடங்கள் இப்பாடசாலைக்குச் சேவை செய்துள்ளார். இதில் 16 வருடங்கள் அதிபராகப் பணிபுரிந்து நிறைவான சேவையைச் செய்து ஓய்வுபெற்றுள்ளார்.

திருமதி துரைசிங்கம் எப்பொழுதும் ஆரவாரமாக இருப்பவர். இவரது குரலின் வீச்சும் சற்று உயர்வானது. அதுவும் இவரது வெற்றிக்குக் காரணமாகும். 'அம்மா வாரா, பேசப் போகிறா' என்று ஆசிரியர்கள் கூறி உசார் அடைவதை நான் பல தடவைகள் பார்த்திருக்கிறேன். ஏதும் விடயமாக இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலைக்குச் செல்வதாயின் நேரத்தை மேலதிகமாக ஒதுக்கிக் கொள்ள வேண்டும். ஏனெனில் பாடசாலையின் பிரச்சினைகள் அனைத்தையும் ஒன்றும் விடாமல் குறிப்பிட்டு ஆவன செய்யவேண்டும் என வேண்டுகோள் விடுப்பார். இவ்வாறு பாடசாலை நலன் ஒன்றையே அக்கறையாகக் கொண்டு செயற்பட்டவர் ஓய்வு வயதை அடைந்துவிட்டார்.





திருமதி துரைசிங்கம் அவர்களின் காலத்தில் பாடசாலையின் பௌதீகவளம் மேம்பட்டுள்ளது. மண்டபத்துடன் கூடிய புதிய கட்டடம் இவரது கடும் முயற்சியி னால் உருவாக்கப்பட்டதாகும். பாடசாலைக் கல்வியை விட இதர நிகழ்வுகளிலும் பாடசாலை மாணவிகள் சிறப்பான வெற்றியைப் பெறுவதற்கு அயராது உழைத்தார்.



உஆவது அதிபர்
திருமதி தனரஞ்சினி
துரைசிங்கம்

ஆசிரியர்களிடம் கடுமையாக வேலை வாங்குவதில் வல்லவராக இருந்ததனால் தான் பல போட்டிகளில் தங்கப் பதக்கங்களை பாடசாலை பெற முடிந்தது. தமிழ்த்தினம், ஆங்கிலதின நிகழ்வுகள் மறக்கமுடியாதவையாகும். பண்ணிசைப் போட்டிகளிலும் பாடசாலை மாணவிகள் முன்னிலை பெற்றுள்ளனர்.

திருமதி தனரஞ்சினி துரைசிங்கம் அவர்களின் காலம் பாடசாலைக்குப் பொற்காலமாகும். அதிபரின் ஓய்வுகாலம் மிகச் சிறப்பாக அமைவதற்கு விநாயகப்பெருமானைப் பிரார்த்தனை செய்கின்றேன்.

யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலைக்கு மூன்றாவது அதிபராக வருபவரை இன்முகத்துடன் வரவேற்கின்றோம். பாடசாலையின் பௌதீகவளம் மேம்படுத்தப்பட்டுள்ளது. கல்வி நிலையில் மென் மேலும் உச்சமான உயர்வு ஏற்பட வேண்டும். அதற்கான முயற்சியை முன்னெடுத்துச் செயற்படுத்த வேண்டும் என்பதே பாடசாலைச் சமூகத்தின் ஒரே விருப்பமாகும்.

சொல்லின் செல்வர்
இரா. செல்வவடிவேல்

## மீண்டும் டெங்கு அபாயம் இரு மாதங்களில் 18 பேர் பலி

(கொழும்பு)

நாட்டின் பல பகுதிகளில் கடந்த இரண்டு மாதங்களில் ஆயிரத்து 722 பேர் டெங்கு நோயால் பீடிக்கப்பட்டுள்ளதுடன் 18 பேர் பலியாகியுள்ளதாக சுகாதார அமைச்சின் நோய் தடுப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

கொழும்பு, கம்பஹா, புத்தளம், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, களுத்துறை ஆகிய மாவட்டங்களில் இந்நோயால் பீடிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுவதாக அப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

கடந்த வருடத்தின் நவம்பர், டிசம்பர் மாதங்களில் டெங்கு நோய்க்கு உள்ளானோரின் எண்ணிக்கை பெரிதும் குறைவடைந்து காணப்பட்டது.

இதற்கு குறிப்பிடப்பட்ட காலத்தில் மேற்கொள்ளப்பட்ட விழிப்புணர்வு மற்றும் தவிர்ப்பு நடவடிக்கைகளே பெரிதும் உதவின என அப்பிரிவு தெரிவித்துள்ளது. (ஸ்ரீ-2)



சிங்கப்பூர் சர்வதேச ஸ்தாபனத்தின் அனுசரணையுடன் யாழ். பொது நூலக சிறுவர் பகுதியில் நேற்று முன்தினம் முன்பள்ளி சிறார்களுக்கு கற்றல் உபகரணங்களும் பயிற்சிகளும் வழங்கப்பட்டன. (படம்:எஸ்.கரன்)

## குற்றச்செயல்களுடன் சம்பந்தப்படாத புலி உறுப்பினர்களுக்கு புனர்வாழ்வளிக்குக

### கொழும்பு நீதவான் உத்தரவு

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் அமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட பாரிய குற்றச்செயல்களுடன் சம்பந்தப்படாத 41 விடுதலைப்புலி உறுப்பினர்களுக்கு புனர்வாழ்வு பயிற்சிகளை வழங்குமாறு கொழும்பு மேலதிக நீதவான் அருணி ஆட்டிகல பயங்கரவாத விசாரணைப் பிரிவினருக்கு நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளார்.

இந்த சந்தேக நபர்கள் காலி பூசா தடுப்பு முகாமில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்களை பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

மேற்படி சந்தேக நபர்கள் தொடர்பில் நடத்தப்பட்ட விசாரணைகள் பற்றிய அறிக்கை சட்டமா அதிபரிடம் கையளிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் சந்தேக நபர்களை புனர்வாழ்வுக்கு உட்படுத்துவது பொருத்தமானது என சட்டமா அதிபர் பரிந்துரை செய்திருந்தார். சட்டமா அதிபரின் இந்த பரிந்துரை குறித்து அரச தரப்பு சட்டத்தரணி நீதிமன்றத்தில் அறிவித்ததைத் தொடர்ந்து அவர்களை புனர்வாழ்வு பயிற்சிகளுக்கு உட்படுத்துமாறு நீதவான் அருணி ஆட்டிகல உத்தரவிட்டார். இந்தச் சந்தேக நபர்களில் 37 பேர் பெண்களாவர். இவர்களை வவுனியா பூந்தோட்டம் மற்றும் யாழ்ப்பாணம், தெல்லிப்பழை புனர்வாழ்வு முகாம்களுக்கு அனுப்பி வைக்குமாறு நீதவான் பயங்கரவாத விசாரணை பிரிவினருக்கு உத்தரவிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

## நிபுணர் குழுவின் இறுதியறிக்கை விரைவில் பான் கீ மூனிடம் கையளிப்பு

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாகத் தனக்கு ஆலோசனை வழங்குவதற்காக ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் பான்-கீ-மூன் நியமித்த நிபுணர்கள் குழு, தமது அறிக்கையைத் தயாரிப்பதற்கான சாட்சியப் பதிவுகளை நிறைவு செய்துள்ளது.

இதனடிப்படையில் நிபுணர்கள் குழுவின் இறுதியறிக்கை அடுத்த சில தினங்களில் ஐ.நா. செயலாளரிடம் கையளிக்கப்படும் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 28ஆம் திகதி நிபுணர்கள் குழுவின் கடமைகள் நிறைவடைந்தன. எனினும் நிபுணர்கள் குழுவின் பணிக்காலம் நீடிக்கப்படவில்லை.

இந்தநிலையில் நிபுணர்கள் குழுவின் அறிக்கையை ஊடகங்களுக்கு வெளியிடுவது தொடர்பில் இதுவரை தீர்மானங்கள் எதுவும் தீர்மானிக்கப்படவில்லை எனக் கூறப்படுகின்றது.

பான்-கீ-மூனிடம் அறிக்கை கிடைத்ததும் அதனை ஊடகங்களுக்கு வெளியிடுவதா இல்லையா என்பது பற்றி தீர்மானிக்கப்படும் எனத் தெரியவருகிறது.

நிபுணர்கள் குழு தனது சாட்சியப்பதிவுகளை முடித்துள்ள நிலையில், அந்தக் குழுவுக்கும் இலங்கையின் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவிற்கும் இடையிலான சந்திப்பு குறித்து இதுவரை உறுதியான அறிவிப்புகள் வெளியிடப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுபான்மை மக்களின் எதிர்பார்ப்புகள் அனைத்தும் அலட்சியப்படுத்தப்பட்டுள்ளது

## ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் யுத்தவெற்றியை சர்வதேச நாணய நிதியத்திடம் அடகு வைத்துள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க குற்றம் சாட்டுகின்றார்.

ஐக்கிய தேசியக்கட்சியின் சார்பில் மாத்தளை மாவட்டத்தில் உள்ளூராட்சித் தேர்தல்களில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குற்றம் சாட்டியுள்ளார்.

விடுதலைப்புலிகளுடனான யுத்தம் நடைபெற்ற காலத்தில் அரசாங்கம் பொதுமக்களிடம் வயிற்றை இறுகக் கட்டிக்கொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்த வண்ணம் அனைத்து நிதியையும் யுத்தத்துக்காக செலவழித்தது. அதன்பின் இந்நாட்டின் இராணுவத்தினர் மிகுந்த அர்ப்பணிப்புகளுடன் யுத்தத்தை வெற்றிகொண்டனர். நாட்டுமக்களுக்கு மீண்டும் அமைதியான, சுதந்திரமான காற்றைச் சுவாசிக்கும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி தந்தனர்.


ஆயினும் அரசாங்கம் அதன் பின்பும் நாட்டு மக்களுக்கு எந்தவித சலுகைகளையும் வழங்கவில்லை. அதற்குப் பதிலாக ஜனாதிபதி மற்றும் அமைச்சர்கள் தங்கள் சம்பளத்தையும் கொடுப்பனவுகளையும் அதிகரித்துக் கொண்டார்கள்.

இராணுவத்தின் வெற்றிக்குக் காரணமாக அமைந்த சரத் பொன்சேகாவை சிறையில் அடைத்தார்கள். ஊடகங்களை அடக்குமுறை கொண்டு நசுக்கினார்கள். நாட்டு மக்களுக்கு அளித்த அனைத்து வாக்குறுதிகளையும் காற்றில் பறக்க விட்டார்கள்.

அத்துடன் சிறுபான்மை மக்களின் அனைத்து எதிர்பார்ப்புகளும் இந்த அரசாங்கத்தால் அலட்சியப்படுத்தப்பட்டுள்ளன. அவர்கள் சுதந்திரமற்ற, உரிமையற்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

அதற்கு மேலாக இவ்வளவு அர்ப்பணிப்புடன் பெற்றுக்கொள்ளப்பட்ட யுத்த வெற்றியை அரசாங்கம், சர்வதேச நாணய நிதியம் உள்ளிட்ட அமைப்புகளிடம் அடகு வைத்து விட்டது. அவர்களின் சொற்படி ஆடுகின்றது.

அதன் காரணமாக எதிர்வரும் காலங்களிலும் அரசாங்கம் நாட்டு மக்களுக்கான நிவாரணங்களை குறைக்கலாம். விலைவாசியை



அதிகரிக்கலாம். அதற்கான எதிர்ப்பை மக்கள் தங்கள் வாக்குகள் ஊடாகவே அரசாங்கத்துக்கு உணர்த்த வேண்டும் என்றும் அவர் தொடர்ந்தும் அங்கு குறிப்பிட்டார். (ஸ்ரீ-2)

# நாடக ஆற்றுகை

திருமறைக் கலாமன்றத்தின் தயாரிப்பில் நடாத்தப்படும் ***வானோர் விடு தூது*** என்னும் நாடக நடன கலைப்படைப்பு நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 5.15 மணிக்கு இல 286, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மன்றத்தின் கலைத்தூது கலையகத்தில் மேடையேற்றப்படவுள்ளது.

தூது சிற்றிலக்கியத்தின் சாயலைக் கொண்டு இயேசுவின் வாழ்வோடு தொடர்புடைய விடயங்களை உள்ளடக்கிய நாடக ஆற்றுகையாக ***வானோர் விடு தூது*** அமையுவுள்ளது.

இந்நாடகத்திற்கான எழுத்துரு நெறியாள்கையை நி.மரியசேவியர் அடிகளும் நடன அமைப்பை திருமதி. சுதர்சினி கரண்சனும் மேற்கொண்டுள்ளார்கள். (ஸ்ரீ-2)

# சொற்பொழிவு

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமைதோறும் நடைபெற்றுவரும் ஆன்மீக நிகழ்வு தொடரில் நாளை ஞாயிற்றுக்கிழமை பகல் 10 மணி பூசை முடிவுற்றதும் *மகாபாரதம்* என்னும் கருப்பொருளில் பண்டிதர் பொன். சுகந்தன் தொடர் சொற்பொழிவாற்றவுள்ளார்.

(ஸ்ரீ-3-35)

# இரட்டைக் குடியுரிமையுடையோர் தொடர்பில் இரகசிய புலன் விசாரணை

## பாதுகாப்பமைச்சு தீர்மானம்

(கொழும்பு)

இரட்டைக். குடியுரிமை பெற்றுள்ள அனைவர் தொடர்பிலும் இரகசியப் புலன் விசாரணை யொன்றை மேற்கொள்வதற்கு பாதுகாப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது.

இரட்டைக் குடியுரிமை பெற்ற பல வெளிநாட்டவர்கள் இலங்கைக்கெதிரான பல்வேறு இரகசிய நடவடிக்கைகளில் பங்கு கொள்வதாக புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவல்களையடுத்தே மேற்கண்டவாறான முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

அவ்வாறான வெளிநாட்டவர்கள் பலர் அடிக்கடி இலங்கைக்கு வந்து வெளிநாடுகளுக்குத் திரும்பிச் செல்வதை வழக்கமாகக் கொண்டிருக்கின்றனர். அவர்களின் நடவடிக்கைகள் குறித்து இதுவரை அவதானிக்கப்படவில்லை என்றும் பாதுகாப்பமைச்சின் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

அதன் காரணமாக எதிர்வரும் காலங்களில் இரட்டைக் குடியுரிமை பெறுகின்றவர்கள் பாதுகாப்பமைச்சினால் நடாத்தப்படும் விசேட நேர்முகப் பரீட்சையொன்றுக்கும் முகம் கொடுக்க வேண்டியேற்படும் என்றும் அந்த அதிகாரி சுட்டிக்காட்டியுள்ளார்.

உத்தேச புதிய நடைமுறைகள் குறித்து குடிவரவு மற்றும் குடியகல்வுத்திணைக்கள அதிகாரிகளுக்கும் அரசாங்கம் அறிவுறுத்தியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஸ்ரீ-2)

# லாப்காஸ்விலையுயர்வு

(கொழும்பு)

உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் லாப் காஸின் விலையை 96 ரூபாவால் உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் 12.5 கிலோகிராம் எடை கொண்ட காஸ் சிலிண்டரின் புதிய விலை ஆயிரத்து 652 ரூபாவாக அதிகரித்துள்ளதென லாப் காஸ் நிறுவனத்தின் பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பாக நுகர்வோர் விவகார அதிகார சபையின் தலைவர் ரூமி மர்சூக் கூறுகையில், காஸ் விலையை உயர்த்துவதற்கு அந்த நிறுவனத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

(ஸ்ரீ-2)

# வெளிநாடுகளிலுள்ள இலங்கை தூதரகங்களில் புலனாய்வு அதிகாரிகளை நியமிக்கத் திட்டம்

(கொழும்பு)

வெளி நாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களில் மீண்டும் புலனாய்வு அதிகாரிகளை கடமையில் ஈடுபடுத்துவது குறித்து அரசாங்கம் தீவிர கவனம் செலுத்தி வருகின்றது.

இலங்கை அரசாங்கத்துக்கெதிரான போக்கு சர்வதேச மட்டத்தில் அதிகரித்து வருவதையும் மேற்கத்தேய நாடுகளில் விடுதலைப்புலிகளுக்கு ஆதரவான சக்திகள் பலம் பெற்று வருவதையும் கவனத்திற்கொண்டே அரசாங்கம் இந்த முடிவுக்கு வந்துள்ளது.

விதடுலைப்புலிகளுடனான யுத்தம் நடைபெற்ற காலகட்டத்தில் மேற்கத்தேய நாடுகளின் இலங்கைத் தூதரகங்களில் புலனாய்வு அதிகாரிகள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். ஆயினும் அதன்பின் அவர்கள் திரும்ப இலங்கைக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

ஆயினும் தற்போது உருவாகி வரும் புதிய சூழலைக் கருத்திற்கொண்டு மீண்டும் புலனாய்வு அதிகாரிகளின் சேவையை இலங்கைத் தூதரகங்களுக்குப் பெற்றுக் கொடுப்பது குறித்து அரசாங்கம் தீவிர கரிசனை கொண்டுள்ளது.

பெரும்பாலும் ஓய்வு பெற்ற சிரேஷ்ட இராணுவ மற்றும் பொலிஸ் அதிகாரிகளே தூதரகங்களின் புலனாய்வு அதிகாரிகளாக நியமிக்கப்படுவது வழக்கமாகும். (ஸ்ரீ-2)


# சமுர்த்தி அதிகாரசபையால் சலுகை விலையில் உணவுப்பொருட்கள் விற்பனை

(கொழும்பு)

இலங்கை சமுர்த்தி அதிகாரசபை சலுகை விலையில் உணவுப் பொருட்களை விநியோகம் செய்யும் துரித வேலைத் திட்டமொன்றை ஆரம்பித்துள்ளதாக சமுர்த்தி அதிகாரசபையின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

அரிசி மற்றும் மரக்கறி வகைகள், தேங்காய்கள் உட்பட அத்தியாவசிய உணவுப் பொருட்கள் இத்திட்டத்தின் கீழ் விற்பனை செய்யப்படுகின்றன.

நாடு பூராகவுமுள்ள சமுர்த்தி மகாசங்கம், சமுர்த்தி வங்கிச் சங்கங்கள் என்பவற்றினுடாக சமுர்த்தி பயனாளிகள் குறைந்த வருமானம் பெறுவோரின் உற்பத்திகளை இடைத் தரகர்களின்றி சந்தைக்கு வழங்குவதன் ஊடாக நன்மைகளை நுகர்வோருக்கு வழங்குவதே இந்த வேலைத்திட்டத்தின் பிரதான நோக்கமென அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-2)





யா/சரவணை நாகேஸ்வரி மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் அணிவகுப்பு மரியாதையை பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வேணி களஞ்சிய தொழிலதிபர் கு.கங்கைவேணியன், சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட ஆனைக்கோட்டை மெ.மி.த.க.பாடசாலை ஆசிரியர் கு.மகேந்திரன், பாடசாலை அதிபர் ம.சத்தியசீலன் ஆகியோர் ஏற்றுக்கொள்வதையும் வெற்றிபெற்ற இல்லத்திற்கு பிரதம விருந்தினர் வெற்றிக்கேடயம் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திறமையை வளர்த்துக் கொள்வது எப்படி?



## ஆன்மீகம் 35

பல திறன்மயாளர்களை நீங்கள் கவனத்திருக்கலாம். கிடுகிடுவென்று உயர்ந்து வருவார்கள். சடாரென்று ஒரு கட்டத்தில் நிலைகுத்தி நின்றுவிடுவார்கள். அதன்பின், அவர்களிடம் புதிதாக எதையும் எதிர்பார்க்க முடியாது!ஏன்?

அதற்குப்பிறகும் வளரவேண்டும் என்ற ஆசை அவர்களுக்கு இருக்காதா என்ன? . இருக்கும். ஆனாலும், கிடைத்திருப்பதை விட்டு விடக்கூடாது என்று அச்சத்துடன் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு விடுவார்கள். அதற்கப்புறம் எப்படி வளர்ச்சி இருக்கும்?

குட்டி மண்தொட்டியில் வேரோடு வைத்து விற்கப்பட்ட ஒரு செடியை வாங்குகிறீர்கள் பத்திரமாக நிழலில் வைத்துப் பார்த்தக்கொண்டால், தொட்டியில் செடிவேகமாக ஓரளவுக்கு வளரும். பிறகு ஒரு கட்டத் தில் போதிய இடமின்றி, அது தன்வளர்சசியைக் குறுக்கிக் கொள்ளும்.

அதே செடியை பூமியில் எடுத்து நட்டிருந்தால், அது பெரிய விருட்சமாக வளர்ந்திருக்கும். கடைசிவரை புதிது புதிதாகக் கிளைகளை எல்லாத் திசைகளிலும் அனுப்பிக் கொண் டிருக்கும்.

உங்கள் வாழ்க்கையும் அப்படித்தான்!

வளர வேண்டும் என்ற முனைப்பு உங்களுக்குள் தகதகத்துக் கொண்டிருக்கிறது. இப்போதிருக்கும் மண் தொட்டியை உடைத்துப்போட நீங்கள் தயங்குவதால், வளரமுடியாமல் தவிக்கிறது. உங்களைச்சுற்றி நீங்களே பின்னிக்கொண்டிருக்கும் வலையிலிருந்து விடுபட்டால்தான் வளர்ச்சி என்பது சாத்தியம்!

அரசனைத்தேடி ஓர் இளைஞன் அவ்வப்போது அரண்மனைக்கு வருவான். அவனுக்கு ராஜமரியாதை தந்து நிறைய செல்வங்கள் கொடுத்து அனுப்புவான் அரசன். அத்தனையையும் தொலைத்துவிட்டு அவன் மீண்டும் வந்து நிற்பான். அரசனும் முகம் கோணாமல் மறுபடி அவனுக்கு வாரிவழங்குவான். ஒரு முறை தலைமை அமைச்சர் அரச னிடம் மெள்ளக் கேட்டார்...

"மன்னா, நீங்கள் கொடுக்கும் செல்வத்தை இவன் பொறுப்பில்லாமல் தவறான நண்பர்களோடு சேர்ந்து வீணடித்துவிட்டு வருகிறான்.எதற்காக மீண்டும் மீண்டும் அவனுக்கு வழங்குகிறீர்கள்?"

"அமைச்சரே நான்பிறந்தபோதே என் தாய் இறந்து போனாள். அரண்மனைப் பணியில் இருந்த இவன்தாய்தான் இவனுடன் சேர்த்து எனக்கும் தாய்ப்பால் கொடுத்து வளர்த்தாள். அதனால், இவனை என்சகோதரனாகவே நினைக்கின்றேன்" என்றான் அரசன். அடுத்த முறை அந்த முட்டாள் பையன் வந்த போது, வேறொரு விபரீத கோரிக்கையை முன்வைத்தான்.

"உன்னைசுற்றி புத்திசாலிகள் இருப்பதால்தான் என்னைவிட மேன்மையாக இருக்கிறாய். உன்னமைச்சர் என்னுடன் இருந்தால், என்னாலும் ராஜ்யத்தை ஆளமுடியும். அவரை என்னுடன் அனுப்பு!" என்று மன்னனிடம் கேட்டான் அவன். என்ன செய்வது என்று புரியாமல் அரசன் திணறினான்.

"மன்னா... உங்களுடன் பால்குடித்து வளர்ந்த சகோதரனுக்கு உதவ, என்னுடன் பால்குடித்து வளர்ந்த என் சகோதரனை அனுப்புகிறேனே!" என்றார் அமைச்சர். மறுநாள், அரசவைக்கு அமைச்சர் வந்த போது, ஒரு எருமைக் கடாவை கையிற்றல்கட்டி இழுத்து வந்தார்.

"ஏன் சிரிக்கிறீர்கள்? இவனும் நானும் ஒரே எருமைத்தாயின் பலைத்தான் குடித்தோம் மன்னனின் சகோதரனுக்கு அமைச்சராக இருக்க இந்த சகோதரனை அனுப்புகிறேன்" என்றார்.

நாம் ஒரே தாயிடம் பால்குடித்து வளர்ந் திருக்கலாம். ஆனால், நம் உடலை, மனதை, உணர்ச்சிகளை, சக்தியை எப்படித்திறம்படப் பயன் படுத்துகிறோம் என்பதைப் பொறுத்துத் தானே நம் வளர்ச்சி அமையும்! பொதுவாக, உங்கள் நண்பர்களைச் சந்திக்கும் போது என்னவெல்லாம் பேசுவீர்கள்?

பட்ஜெட்டில் வரிகளை எப்படி விதிக்க வேண்டும்...எந்தக்கட்சிகள் கூட்டணி அமைத்துக்கொண்டால் தேர்தலில் வெற்றி பெற முடியும்... அரசாங்கம்எப்படி நடக்க வேண்டும் என்றெல்லாம் விவாதிப்பீர்கள். முஷ்ரப் பற்றியும் பின்லேடன் பற்றியும் ஜோர்ஜ்புஷ் பற்றியும் எல்லா விபரங்களும் வைத்திருப்பீர்கள்.

இப்படி உலக நடப்புக்கள் எல்லாவற்றையும் விரல்நுனியில் வைத்திருக் கிறீர்களே, உங்களைப்பற்றி நீங்கள் அறிந்திருக்கிறீர்களா? உங்களுடைய திறமையின் வீச்சு பற்றி உங்களுக்கு முழுமையாகத்தெரியுமா? கண்ணாடி அணிபவர்களுக்கு முதன்முதலாக அதை அணியும்போது, வேண்டாத பாரமாக இருக்கும் பழக்கமான பின் அதைப்பற்றிய கவனமே இருக்காது. கவனிக்கப்படாவிட்டாலும், அது தன் வேலையைத் திறம்படச் செய்துகொண்டிளருக்கும். அதே போல்தான் உங்கள் திறமையும்!

இருபத்துநான்கு மணி நேரமும் அதனைக் கூர்மையாக வைத்திருக்க முதலில் கவனத்துடன் பயிற்சி செய்யுங்கள் பழக்க வசத்தால், அது உஙகள் இயல்பான குணமாகிவிடும். பிறகு, எந்தச்சந்தர்ப்த்திலும் அது பயனபடத்தயாராக இருக்கும்.

சாலையில் வண்டி ஓட்டிப்பழகும் போது, உங்கள் மொத்தக்கவனமும் அதிலேயே இருக்கும். நல்ல பயிற்சி பெற்ற பிறகுதான் அது பற்றிய பயமோ,பதற்றமோ இல்லாமல் மிக இயல்பாக வண்டியில்பயணம் செல்ல ஆரம்பிப்பீர்களே, அதுபோல மோட்டார் வாகனத்தொழிலில் பெரும் சாதனை புரிந்த ஹென்றி ஃபோர்டு பற்றித் தெரியும்தானே!

"நீங்கள் பெரிய ஜீனியஸ்" என்று புகழப்பட்டபோது, அவர் என்ன சொன்னார் தெரியுமா? "அதிமேதாவித்தனமாவது, மண்ணாங்கட்டியாவது! உங்களிடம் இருக்கும் அதே புத்திசாலித்தனம் தான் என்னிடமும் இருக்கிறது. விடாமுயறசியுடன் உழைத்து நான் அதைப்பயன்படுத்தினேன். அவ்வளவுதான்!" கிடங்கில் குவித்து வைக்கப்பட்டிருக்கும் தானியம் விநியோகம் செய்யப்படாதவரை யாருக்கும் உபயோகம் இல்லை. வீணாக மக்கி குப்பைக்குத்தான் போய்ச் சேரும் திறமைகளையும் தேக்கிவைக்காதீர்கள் அவற்றைப்பயன்படுத்திக்கொண்டே இருந்தால்தான் பலன்!

புதிய வாய்ப்புக்களை துணிச்சலோடு எதிர்கொள்ளப் பழகினால் தான் உங்கள் திறமையும் முழுமையாகப் பரிமளிக்கும் அது உங்களை அடுத்டுத்த தளங்களுக்கு உயர்த்திக் ளகொண்டே இருக்கும்!

சத்குரு ஜக்கி வாசுதேவ்

# ஆற்றுகையும் ஆற்றுகைக் கலைகளும்

03



அவைக்காற்றுக்கலை

ஆற்றுவோரின் உடல் அங்கங்களின் அசைவுகள் முக்கியமாக முகம், குரல் அங்கத்தில் செய்யப்படும் ஆஹார்யம் (ஒப்பனை, ஆடை, அணிகள் என்பவற்றின மூலம் பார்ப்போருடன் தொடர்புகொள்ளும் கலை அவைக்காற்றுக்கலை.

"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை"

Performing Art என்னும் சொல் ஆங்கில மொழியில் 1711 இல் அறிமுகமானது என்பர். அவைக்காற்றுக் கலை என்ற சொல் 1980 களில் ஈழத் தமிழர் மத்தியில் அறிமுகமானது. அதற்கு முன்னர் இது அளிக்கைக் கலை, நிகழ்த்துக்கலை, நிகழ்கலை என்ற பெயர்களில் அழைக்கப்பட்டது.

ஆற்றுகைக்கலைகளுள் நடனம் , இசை, ஒபேரா நாடகம் என்பன அடங்கும். சார்க்கஸ் கலையையும் இதற்குள் சிலர் அடக்குவர்.

**நடனம்**

நடனம் என்பது அங்கம், பிரதியங்களை ஒரு லயத்திற்கும் தாளத்திற்கும் அசைப்பதன் மூலம் உருவாக்கப்படும் கலையாகும். பண்பாட்டிற்குப் பண்பாடு அசைவு, ஆஹார்யம் என்பன வேறுபடும்.

உதாரணமாக:

கேரளத்தின் கதகளி நடனத்தையும் சிங்கள மக்களின் கோலம் நடனத்தையும் ஒப்பிடும் இடத்து, கதகளி நடனத்தின் ஆடை அணி, முக அலங்காரம் என்பன கேரள மக்களின் வரலாற்றோடும் பண்பாட்டோடும் இணைந்து காணப்பட, சிங்கள மக்களின் கோல நடனத்தின் ஆடையணிகளும் முகமூடியும் இவர்களின் பண்பாட்டுடன் இணைந்து காணப்படுகிறது. மேற்கத்தேய நடனத்தையும் கீழைத்தேய நடனத்தையும் இவ்வண்ணமே ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

இந்திய மரபில் நடனம், நிருத்தம், நிருத்தியம்,நாடகம் என அழைக்கப்படுகிறது. நிருத்தம் வெறும் நடனமாகும். நிருத்தியம் பாவத்தோடு இணைந்த நடனமாகும். நாடகம் கதையோடும் பாவத்தோடும் இணைந்த நடனமாகும்.

**ஒபேரா**

ஒபேரா என்பது ஐரோப்பிய இசை நாடகமாகும். சங்கீதத் தன்மை பொருந்திய நாடகம் என்று இதனை அழைக்கலாம். இவ் இசைநாடக ஆற்றுகையில் நடிப்பு, பிரதி(இலக்கியம்), காட்சிகள், அசைவுகள், உடை, ஒப்பனை என்பவற்றுடன் நடனமும் இடம்பெறும். இது ஒரு பெரிய அரங்கில் *(Opera House)* நிகழ்த்தப்படும். இதனை நிகழ்த்துவ தற்கு உதவியாக ஒரு பெரும் வாத்தி யமும் குழுவும் அதை இயக்க ஒரு தலைவரும் இருப்பர். மேற்கத்தேய ஒபேரா, சீன ஒபேரா, ஜப்பானிய ஒபேரா(கபுகி, நொஹ்) எனப்பல ஒபேராவகைகள் உண்டு. தமிழ் மரபிலும் இது உண்டு. இது தனி ஒன்றாகவன்றி தமிழ்மரபில் கூத்து, இசைநாடகம், நாட் டிய நாடகம் எனப்பிரிந்து கிடக்கிறது.

**இசை**

ஒலியை அடிப்படையாகக் கொண்ட இசைவடிவம் இது. இசையென்பது பண்பாட்டிற்கும், சமூகத்திற்கும் ஏற்ப வேறுபடும். ஒத்திசைவுகள் நேர்நிலையிலும் இராகங்கள் கிடைநிலையிலும் இசையிற் காணப்படும் என்பர். இசையை அவைக்காற்றும் முறையில் பண்பாட்டுக்குப் பண்பாடு வேறுபாடு உண்டு. கர்நாடக இசை அளிக்கை முறையையும், ஜாஸ் இசை அளிக்கைமுறையையும் ஒப்பிடின் பண்பாட்டு வேறுபாடுகளைக் காணமுடியும்.

**நாடகம்**

நாடகம் என்பது செயற்படுவது ஆகும். இது (Action) செய்கையிலிருந்து வந்தது. ஒன்றைப்போல செய்தல் நடிப்பாகும்.

**அரங்கு**

நாடகத்தன்மை வாய்ந்த ஒரு பொய்மையை பார்வையாளர்கள் முன் உருவாக்குதல். இங்கு பார்ப்போர், ஆற்றுவோர் என்ற இருதரத்தினர் முக்கியமானவராய் இருப்பர். நிகழிடமும் இங்கு முக்கியம்பெறும். இவை அனைத்தையும் இணைப்பதற்கே அரங்கு என்ற பதம் பாவிக்கப்படுகிறது.

**சார்க்கஸ் கலை**

சார்க்கஸ்ஸை ஒரு கலையாக சிலர் கணிப்பதுண்டு இங்கு கலைக்குரிய ஒன்றைப் போலச்செய்தல், திறன்களை வெளிப்படுத்தல் என்பன காணப்படுதலால் இதனையும் ஓர் கலையென்பர். பார்ப்போரின் மகிழ்ச்சியும் இடம் பெறுதலாலும் இது கலையாகிறது என்பர்.

இவ்வாற்றுகைக் கலைகள் யாவும் அவைக்கு ஆற்றப்படுவதுடன் பார்ப்போரை உணர்வு பெறச் செய்வதான கலையின் இயல்புகளைக் கொண்டுள்ளமையினால் அவை யாவும் அவைக் காற்றுக் கலைகள் ஆகின்றன.

அவைக்காற்று கலைகளுள், நாடகமும், அது உருவாகும் அரங்கும் அடங்குகின்றன. நாடகமும் அரங்கும் என்று நாம் பொதுவாக அழைப்பினும் நாடகம் வேறு, அரங்கு வேறாகும்.

பேராசிரியர்.சி.மௌனகுரு

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லிபிய விவகாரத்தில் அமெரிக்கா தலையிடின் ஆயிரக்கணக்கான லிபியர்கள் பலியாவர்

## கடாபி ஆவேசம்

(டிரிபோலி)

லிபியா விவகாரத்தில் அமெரிக்கா தலையிட்டால் ஆயிரக்கணக்கான லிபியர்கள் உயிரை விட நேரிடும் என்று உலக நாடுகளை லிபிய ஜனாதிபதி கடாபி நேற்று முன்தினம் கடுமையாக எச்சரித்துள்ளார்.

லிபியாவில் 42 ஆண்டுகளாக ஆட்சியில் இருக்கும் ஜனாதிபதி கடாபிக்கு எதிராக கடந்த சில வாரங்களுக்கு முன் போராட்டம் வெடித்தது. ஜனாதிபதியின் எதிர்ப்பாளர்கள் தொடர்ந்து கிளர்ச்சியில் ஈடுபட்டுள்ளனர். கிழக்கு பகுதியை சேர்ந்த சில நகரங்களை அவர்கள் தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வந்தனர். அவர்களை நோக்கி கடாபியின் ஆதரவாளர்களும் அவரது உத்தரவின் பேரில் இராணுவமும் முன்னேறி வருகிறது.

தனக்கு எதிராக போராடுபவர்கள் லிபிய மக்களல்ல. அவர்கள் எதிரிகள். அந்நிய கைக்கூலிகள் என்று கடாபி தொடர்ந்து கூறி வருகிறார். எனவே தனது பக்கத்தில் கடைசி ஆண், பெண் இருக்கும் வரை போராடுவேன் என்று முழக்கம் செய்தார்.

இந்நிலையில் மக்களின் அமைதியான எதிர்ப்பு போராட்டத்தை இராணுவம்மூலம் கட்டுப்படுத்த முயற்சிக்கும் கடாபி உடனடியாக பதவி விலக வேண்டும் என்று அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா உட்பட பல தலைவர்கள் வலியுறுத்தினர்.

ஐ.நா.வின் கணக்கெடுப் பின்படி இது வரை நடந்த துப்பாக்கிச் சூடு வான்வழி குண்டுவீச்சில் ஆயிரம் பேர் பலியானதாக கூறப்பட்டது.

ஆனால், பலியானோர் எண்ணிக்கை இரண்டாயிரத்தைத் தாண்டிவிட்டதாக ஜனாதிபதி ஒபாமாவுக்கு லிபியாவுக்கான அமெரிக்க தூதர் தகவல் அனுப்பியுள்ளமை அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இதையடுத்து லிபியாவில் அமைதியை ஏற்படுத்தும் முயற்சியாக கடாபியை எச்சரிக்க மத்திய தரைகடல் பகுதிக்கு இராணுவ கப்பலை ஒபாமா அனுப்பியுள்ளார்.

அதில் போர் விமானங்கள் ஹெலிகொப்டர்களுடன் வீரர்கள் தயார்நிலையில் நிறுத்தப்பட்டுள்ளனர். இதையறிந்த கடாபி மேலும் ஆவேசம் அடைந்தார். தலைநகர் டிரிபோலியில் வெளிநாட்டு ஊடகத்திற்கு அவர் அளித்த பேட்டியில், நாட்டின் கிழக்குப் பகுதியை ஆக்கிரமித்துள்ள எதிரிகளின் தாக்குதலை லிபிய இராணுவம் முறியடித்து வருகிறது. என்னைப் பதவியில் இருந்து நீக்க அந்நிய நாட்டு இராணுவ உதவியை எதிரிகள் நாடுகின்றனர். அப்படி அந்நிய நாடுகள் லிபியா விவகாரத்தில் தலையிட்டால் எனக்காக போரிட்டு ஆயிரக்கணக்கான லிபியர்கள் பலியாவார்கள் என்றார்.

இதற்கிடையே எதிர்ப்பாளர்கள் மீது கடாபியின் ஆதரவாளர்கள் படையினர் நேற்று முன்தினம் தாக்குதலை தீவிரப்படுத்தினர். கிழக்கு நகரங்களான பெங்காசி, அஜ்தாபியாவில் முகாம்களை குறிவைத்து இரண்டு இடங்களில் இராணுவ விமானங்கள் குண்டு வீசின. அல்ப்ரேகா என்ற இடத்தில் இரு தரப்பினரிடையே நேரடி மோதல் ஏற்பட்டது. இதற்கிடையே இருதரப்பு மோதல் தீவிரம் அடைந்து வருவதால் உயிருக்கு பயந்து 1.5 இலட்சத்துக்கு மேற்பட்ட லிபியர்கள் எல்லை தாண்டி எகிப்து, துனிசியாவில் தஞ்சம் அடைந்துள்ளனர். மேலும் பல இல ட்சம் பேர் வெளியேற தயா ராக எல்லையில் காத்தி ருப்பதாக ஐ.நா. அகதி கள் கண்காணிப்பு முக வர் அமைப்பு தெரிவித் துள்ளது. கச்சா எண் ணெய் நிறைந்த நாடு மட்டுமல்ல லிபியா. அதில் மிகத் தரமான எண் ணெய் கிடைக் கும் நாடு என்பதால் ரூ 27 இலட்சம் கோடிக்கு உயர் ந்த பொருளுக்கான நிதியை ஏற்படுத்தியுள் ளது.



அதனால் லிபியா முதலீட்டு ஆணையம் தான் இன்று உலகின் மிகப்பெரிய நிதியை நிர்வகிக்கும் அமைப்பாக விளங்குகிறது என்று அமெரிக்க ஊடகமான சி.என்.என். செய்தி வெளியிட்டுள்ளது.

கச்சா எண்ணெய் மீதான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீடுகளை லிபிய மத்திய வங்கியும் லிபிய அந்நிய வங்கியும் நிர்வகிக்கின்றன. கடந்த ஜனவரி 2010 ஆம் ஆண்டு நிலவரப்படி அமெரிக்க வங்கிகளில் லிபியா ரூ 14.4 இலட்சம் கோடி முதலீடுகளை வைத்துள்ளதாகவும் சிஎன்என் தெரிவித்துள்ளது. (ஸ்ரீ-2)

## கடாபிக்கு உதவ முன்வந்தார் வெனிசுலா ஜனாதிபதி

(கெய்ரோ)

லிபியா ஜனாதிபதி முவம்மர் கடாபிக்கு உதவ வெனிசுலா ஜனாதிபதி சாவேஸ் முன்வந்துள்ளார். லிபியாவில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளைத் தீர்க்க அங்கு பல்வேறு நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் குழுவை அனுப்பலாம் என சாவேஸ் கூறியுள்ளார். அவரது இந்தக் கருத்து பரிசீலிக்கப்படுமென அரபு நாடுகளின் கூட்டமைப்பின் பொதுச் செயலர் மெசா கூறியுள்ளார்.

கடாபிக்கு எதிராக அமெரிக்கா , பிரிட்டன் உள்ளிட்ட மேற்கத்திய நாடுகள் ஒன்றிணைந்துள்ளன. இந்நிலையில் கடாபிக்கு சில நாடுகளின் தலைவர்கள் ஆதரவு தெரிவித்துள்ளனர். லிபியா மீது தாக்குதல் நடத்தக் கூடாது என்று ஈரான் ஜனாதிபதி அகமதி நிஜாத் ஏற்கனவே எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இந்நிலையில் வெனிசுலாவின் தகவல் தொடர்புத் துறை அமைச்சர் ஆன்ட்ரஸ் இஸ்ராலியா குறித்து கூறுகையில் , வெனிசுலாவின் நட்புநாடான லிபியாவில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் குறித்து அந்நாட்டு ஜனாதிபதி கடாபியுடன் சாவேஸ் பேசியுள்ளார். இப்பிரச்சினை தொடர்பாக பிற நட்பு நாடுகளுடனும் சாவேஸ் விவாதித்து வருகிறார்.

இதன்படி பல்வேறு நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகளை லிபியாவுக்கு அனுப்பி அங்குள்ள பிரச்சினைகளைத் தீர்க்கலாம் என்று ஜனாதிபதி சாவேஸ் தனது யோசனையை முன்வைத்துள்ளார். (ஸ்ரீ)



இத்தாலி நாட்டில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள சிலி நாட்டு ஜனாதிபதி செபாஸ்டின் பினேரா (இடது) தலைநகர் ரோம் நகரில் பிரதமர் சில்வியோ பெர்லஸ் கோனியை (வலது) சந்தித்து கைலாகு வழங்குவதை படத்தில் காணலாம்.




## எகிப்து பிரதமர் இராஜினாமா



எகிப்து பிரதமர் அகமது ஷபீக் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளதாக அந்நாட்டின் இராணுவ உயர்மட்ட கவுன்ஸில் தெரிவித்துள்ளது. எகிப்தில் ஏற்பட்ட அரசியல் புரட்சியை அடுத்து நீண்டகாலமாக அந்த நாட்டின் ஜனாதிபதியாக இருந்த முபாரக் கடந்த மாதம் பதவி விலகினார்.

பதவி விலகுவதற்கு சில நாட்களுக்கு முன் அகமது ஷபீக் என்பவரை பிரதமராக நியமித்தார். தற்போது இராணுவ உயர்மட்டக் கவுன்ஸிலின் கட்டுப்பாட்டில் எகிப்து அரசாங்கம் நிர்வகிக்கப்படுகிறது.

இந்நிலையில் பிரதமர் ஷபீக்கிற்கு எதிராகவும் போராட்டம் வெடித்தது. ஷபீக் முன்னாள் ஜனாதிபதி முபாரக்கின் ஆதரவாளர் என்றும் உடனடி யாக அவரை பதவிநீக்கம் செய்ய வேண்டும் என்றும் போராட்டக்காரர்கள் குரல் எழுப்பினார்.

இதைத் தொடர்ந்து இராணுவ உயர்மட்ட கவுன்ஸிலில் நேற்று முன்தினம் அறிக்கை வெளியிடப்பட்டது. அதில் பிரதமர் பதவியில் இருந்து ஷபீக் இராஜினாமா செய்துள்ளார். அவரது இராஜினாமா ஏற்கப்பட்டு விட்டது. முன்னாள் போக்குவரத்துத்துறை அமைச்சர் எசாம் ஷராப்புக்கு புதிய அரசு அமைக்கும் படி அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எசாம் ஷராப் கடந்த ஐந்தாண்டுகளுக்கு முன் அமைச்சர் பதவியில் இருந்து விலகினார். அன்று முதல் ஜனாதிபதி முபாரக்கிற்கு எதிரான கருத்துக்களை தெரிவித்து வந்தார். கடந்த மாதம் நடந்த போராட்டத்திலும் அவர் கலந்துகொண்டார். (ஸ்ரீ-2)

## அமெரிக்க அதிகாரியை விடுவிப்பது தொடர்பில் இழுபறி நிலை நீடிப்பு

(லாகூர்)

பாகிஸ்தானில் இரண்டு பேரை சுட்டுக் கொன்ற அமெரிக்க தூதரக அதிகாரி மீதான வழக்கு விசாரணை எதிர்வரும் 8 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானின் லாகூர் நகரில் உள்ள அமெரிக்க தூதரகத்தில் வேலை பார்த்தவர் ரேமாண்ட் டேவிஸ் (36). கடந்த ஜனவரி மாதம் 27 ஆம் திகதி இவர் காரில் சென்ற போது சிலர் தன்னை மிரட்டி கொள்ளையடிக்க முயன்றதாக கூறி இரண்டு பேரை சுட்டுக் கொன்றனர். பயந்து ஓடிய மற்றொரு பாகிஸ்தானியர் அமெரிக்க தூதரகத்தின் காரில் அடிபட்டு இறந்தார். இந்த சம்பவத்தால் லாகூரில் கலவரம் மூண்டது. உடனடியாக ரேமாண்ட் டேவிஸ் கைது செய்யப்பட்டு கோட் லாக்பட் சிறையில் அடைக்கப்பட்டார்.

டேவிசை விடுவிக்கக்கோரி அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா, வெளியுறவு அமைச்சர் ஹிலாரி உள்ளிட்டோர் வற்புறுத்தியுள்ளனர். எனினும் டேவிஸ் மீதான வழக்கு நீதிமன்றில் உள்ளதால் அவரை விடுவிப்பது நீதிமன்றின் கையில் தான் உள்ளது என ஜனாதிபதி சர்தாரி தெரிவித்துள்ளார்.

இதனால் அமெரிக்க- பாகிஸ்தான் உறவில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் டேவிஸ் மீதான வழக்கு லாகூர் நீதிமன்றில் நடைபெற்றது. டேவிஸ் சார்பில் ஓய்வுபெற்ற நீதிபதி சாகித் ஹுசைன் பொகாரி ஆஜரானார். இந்த வழக்கு தொடர்பான ஆவணங்களை படிக்க வேண்டியிருப்பதால் அவர் காலஅவகாசம் கோரினார்.

இதையடுத்து இந்த வழக்கு எதிர்வரும் 8 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. டேவிசுக்கு தூதரக அதிகாரி அந்தஸ்துபடி இந்த வழக்கில் மன்னிப்பு அளித்து விடுவிக்கப்பட வேண்டும் என கோரப்பட்டது.

ஆனால் டேவி சுக்கு தூதரக அதிகாரி அந்தஸ்து படி மன்னிப்பு வழங்க கோரும் மனு மீதான விசாரணை லாகூர் மேல்நீதிமன்றில் தனியாக நடைபெற்று வருகிறது.

எனவே இந்த நீதிமன்றில் அது குறித்து விவாதிக்க அனுமதி மறுக்கப்பட்டதாக கொல்லப்பட்ட இருவரின் தரப்பில் ஆஜரான சட்டத்தரணி ஆசார் மன்சூர் பட் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழையில் பீடைகளும் அவற்றின் முகாமைத்துவமும்



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

# இனியொரு பசுமைப் புரட்சிக்கு...

## இழைய வளர்ப்பு வாழையும் பயன்பாடும்

தாவரங்களிலுள்ள இழையங்களிலிருந்து புதிதாக பதியமுறையில் உருவாக்கும் தொழில்நுட்பமே இழைய வளர்ப்பு எனப்படும். தாவரங்களிலுள்ள வளரும் பாகங்களிலிருந்து கலங்களைப் பிரித்தெடுத்து அதற்கே உரித்தான வளர்ப்பூடகத்தில் அதிசிறந்த கட்டுப்பாடான பராமரிப்பு அறையில் வளர்த்தெடுத்து பின்னர் மெதுவாக இயற்கையான சூழலுக்கு இயைவாக்க வைத்து நடுகை செய்தலாகும்.

இழைய வளர்ப்பு முறை மூலம் தாவரங்கள் உற்பத்தி செய்யப்படும் போது பல நன்மைகள் உண்டு. தாய்த் தாவரத்தினது தெரிந்தெடுத்த வளரும் கலங்களையுடைய பாகங்களிலிருந்து கலம் அல்லது இழையங்கள் பிரித்தெடுக்கப்பட்டு செயற்கையாக இதற்கேயுரித்தான தனித்துவமான வளர்ப்பூடகங்களில் வளர்க்கப்பட்டு அவை குறிப்பிட்ட அளவில் வளர்ந்ததும் தொடர்ச்சியாக வேறு வேறு ஊடகங்களில் வளர்க்கப்பட்டு இறுதியில் இயற்கைச் சூழலில் வளரவிடப்படும். கண்ணாடியறைக்குள் கட்டுப்பாட்டு சூழலுக்குள் வளரும் வாழைக்குட்டிகள் புறச்சூழலுக்கு மெதுவாக கொண்டுவரப்பட்டு அந்த இயற்கைச் சூழலில் வளர பயிற்றப்படும். இதனை வலுவேற்றல் (Hardening) என அழைக்கலாம்.

இம்முறைமூலம் அதிக எண்ணிக்கையான சிறந்த அதே இயல்புகளையுடைய வாழைக்குட்டிகளை பெறும் வாய்ப்பு கிடைக்கின்றது. தாய் வாழையினுடைய இழையங்களிலிருந்து பதிய முறைமூலம் நூற்றுக்கணக்கான மகள் வாழைக்குட்டிகளை உருவாக்குவதே இத்தொழில் நுட்பத்தினுடைய சிறப்பாகும். எங்களூரவர்கள் குறும்பாக சொல்வதைப் போல "தாயைப் போல பிள்ளை நூலைப் போல சேலை" என்பது இங்கே முழுமையாகப் பொருந்தும். அச்சொட்டாக இத்தொழில் நுட்பத்தின் விளைவாக தாய் வாழையைப் போல மகள் வாழைகள் இருக்கும். ஆக மொத்தத்தில் நல்லரகதாய் வாழையைப் போல எந்த இயல்புகளிலும் மாற்றமில்லாது பல நூறு எண்ணிக்கையான வாழைக்குட்டிகளைப் பெற்றுக் கொள்ளலாம். இந்த வழிமுறையை விருத்தி செய்தால் நல்ல இயல்புகளுடைய வாழையினங்களை மட்டுமல்ல ஏனைய தாவரங்களை குறிப்பாக அழிந்து போகும் உள்ளூர் இனங்களைப் பாதுகாக்கவும் விருத்தி செய்யவும் உதவும். ஆனாலும் இவ்வாறு அனைத்து தாவரங்களையும் இழைய வளர்ப்பினுள் உள்வாங்குவது இலகுவான காரியமல்ல.



இழைய வளர்ப்பின் மூலம் பெறப்படும் வாழைக்குட்டிகளுக்கு எந்தவிதமான நோயோ, பூச்சி பீடையோ இருக்க நடுகைக்கு எடுத்துச் செல்லும்வரை சாத்தியமில்லை. ஏனெனில் நோயற்ற தாய் வாழையிலிருந்து பெறப்பட்ட இழையத்தை விருத்தி செய்து வாழைக்கன்றுகள் பெறப்பட்டமையால் இங்கே நோய் பரவுதலென்பது அறவே இருக்காது. இதன்மூலம் வைரசு நோய்களான கழுத்தடைப்பு அல்லது குருத்தடைப்பு (Bunchy top disease) இலையில் கோடு விழுதல், இலை சுருளுதல், பனாமா (பூஞ்சண) வாடல் நோய், விலாங்குப் புழுதாக்கம், நீள்மூஞ்சி வண்டின் தாக்கம் என்பன வாழைக்குட்டியினூடாக எடுத்துச் செல்லப்படுவதைத் தடுக்கும் அல்லது தவிர்க்கும். இதனால் வாழைச் செய்கையாளர்களுக்குள்ள பாரிய தலையிடி தவிர்க்கப்பட வாய்ப்பு உண்டு.

இவ்வாழைகள் ஒரே சீரானதாக வளர்வதும் ஒரே பருமனுடைய வாழைக்குலைகளைத் தருவதும் இவற்றின் சிறப்புக்களாக இருக்கும் போதிலும் தென்பகுதியிலிருந்து தருவிக்கப்பட்டு இழைய வளர்ப்பு மூலம் பெறப்பட்ட வாழைகளின் இலைகளில் கறுப்பாக புள்ளிகள் விருத்தியாவதும் சில இடங்களில் வாழைக்குலைகளின் பருமன் சிறிதாகவும் அவதானிக்கப்பட்டுள்ளது. எது எவ்வாறாயினும் வைரசு நோய்களிலிருந்து ஆரம்பகட்ட பாதுகாப்பிற்கு இழைய வளர்ப்பு தொழில்நுட்பம் உதவும் என்றே கருதலாம். இது இவ்வாறிருக்க, இழைய வளர்ப்பு வாழையை நடுகை செய்த பின்னர் பராமரிப்பு அவதானமாக இருக்க வேண்டும். நடுகை செய்த பின் சிற்றுண்ணி, பூச்சி பீடைகளின் தாக்கமும் பூச்சி பீடைகளினால் காவப்படும் வைரசு நோய்களையும் சரியான பீடை முகாமைத்துவமின்றேல் தவிர்க்க முடியாது. நடுகைக்குப் பின் வரக்கூடிய எந்தவிதமான வைரசு, பக்ரீறியா மற்றும் பூஞ்சண நோய்த்தாக்கத்திற்கெதிராக தொடர்ச்சியான கண்காணித்தலும் பீடை பற்றிய அறிவுடன் அவற்றை கண்டறியவும் விவசாயப் பெருமக்களை பயிற்றுவிக்க வேண்டும். இதுபற்றிய விழிப்புணர்வினை மக்களிடையே ஏற்படுத்தும் பட்சத்தில் நடுகைக்குப் பின்னரான பூச்சி பீடைகளின் தாக்கத்தை இயன்றவரை மட்டுப்படுத்தவோ அல்லது தவிர்க்கவோ முடியும்.

இழைய வளர்ப்பினூடாக வாழையை விரைந்து பெருக்கிட இதற்கான ஆய்வு கூடமொன்று யாழ்ப்பாணத்தில் அமையவிருப்பதாக அறியும் இத்தருவாயில் இதற்கு ஐய்க்கா நிதி அனுசரணையும் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்கு முன்னோடியாக கொழும்பு பல்கலைக்கழகத்தினது ஓரங்கமாக இழைய வளர்ப்பு ஆய்வு கூடமொன்று வெலிக்கந்த என்னும் கிராமத்தில் உருவாக்கப்பட்டு வேலையற்றிருக்கும் இளையவரை இழைய வளர்ப்பில் பயிற்றுவித்து இழைய வளர்ப்பு வாழையை உருவாக்குகின்றனர்.

இவையனைத்திற்கும் மேலாக இதில் பயன்படுத்தப்படும் ஊடகங்கள் விலையதிகமாகவும் உயர்தரமானதாகவும் இருக்க வேண்டும். இவையெல்லாவற்றையும் கவனத்திற் கொண்டு இழைய வளர்ப்பு தொழில்நுட்பத்தின் மூலமாக நோயற்ற சிறந்த வாழைக்குட்டிகள் எங்களுருக்கும் கிடைக்கும் என எண்ணியிருப்போமாக.

(தொடரும்)



கட்டுவன்புலம் மகா வித்தியாலயத்தின் சாரணத் துருப்பு மீள ஆரம்பிக்கப்படும் விழா அண்மையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் சாரணர் ஒருவருக்கு பிரதி அதிபர் திருமதி பு.ஆனந்தராசா கழுத்துப்பட்டி அணிவிப்பதைப் படத்தில் காணலாம்.

# இலங்கையிலிருந்து முதல் தடவையாக சூளை எண்ணெய் ஏற்றுமதி

(கொழும்பு)

இலங்கை மின்சார சபை அனல்மின் நிலையங்களில் பயன்படுத்தும் சூளை எண்ணெய் வாங்குவதைக் குறைத்துள்ளதால் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் 25 ஆயிரம்மெட்ரிக் தொன் சூளை எண்ணெயை கடந்த வாரம் முதல் தடவையாக ஏற்றுமதி செய்துள்ளதாக பெற்றோலிய கைத் தொழில் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

அண்மையில் பெய்த மழையினால் நீர்த்தேக்கங்கள் பூரணமாக நிரம்பியுள்ளன. இதனால் நீர்மின் உற்பத்தி செய்யும் நிலையங்கள் முழு இயலளவில் தொழிற்படுகின்றன. இதனால் அனல் மின் நிலையங்களுக்கான சூளை எண்ணெயின் கேள்வி பெரும் வீழ்ச்சி கண்டுள்ளது என அவர் குறிப்பிட்டார்.

எனவே அனல் மின் உற்பத்திக்காகப் பயன்படுத்தப்படும் இறக்குமதி செய்து களஞ்சியப்படுத்தி வைத்திருந்த சூளை எண்ணெயில் ஒரு பகுதியை விற்க வேண்டியிருந்ததாக அமைச்சர் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# நவீன உலகுடன் பொருந்தக்கூடிய கல்விமுறைமையே அவசியமானது

## கல்வியமைச்சர் தெரிவிப்பு



மாற்றமடைந்துவரும் உலகுடன் பொருந்தக் கூடிய கல்வி முறைமையின் அவசியம் குறித்து கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன வலியுறுத்தியுள்ளார்.

பத்தரமுல்ல கொஸ்வத்தை எம்.டி.எச்.ஜயவர்த்தன வித்தியாலயத்திற்கென புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மாதிரி கணிதப் பிரிவின் திறப்பு விழாவில் நேற்று முன்தினம் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் இந்தக் கருத்தினை வெளியிட்டுள்ளார்.

மாற்றமடைகின்ற உலகின் இன்றைய சம்பிராய முறையிலான கல்வி முறைமையின் மூலம் உலகிற்கும் நாட்டிற்கும் பொருந்தக் கூடிய ஒரு பிள்ளையை உருவாக்குவது சிரமமானதாகும் என அவர் குறிப்பிட்டார்.

தற்போதுள்ள முறையின் கீழ் இலவசக் கல்வியின் மூலம் மாணவர்களுக்குச் சிறந்த எதிர்காலத்தை உருவாக்கக் முடியாதுள்ளதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

உலகத்தின் மாற்றத்திற்கு ஏற்ப தகவல் தொழில்நுட்பம், ஆங்கில மொழியறிவு, கணிதம், கலை மற்றும் விளையாட்டு போன்ற துறைகளில் அதிக நேரத்தை செலவிட்டால் பின்னடைவைக் கண்ட நாடொன்றே உருவாகும் நிலையேற்படும் என்று கல்வி அமைச்சர் மேலும் கூறினார்.

(ஸ்ரீ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிளாஸ்டிக் தார் மூலம் வீதியமைக்கும் புதிய முறை

## மத்திய அரசு அங்கீகாரம்

இந்தியாவின் மதுரை தியாகராஜர் பொறியியல் கல்லூரி இயற்பியல் பேராசிரியர் வாசுதேவன் பிளாஸ்டிக் தார் மூலம் வீதி அமைக்கும் புதிய முறை ஒன்றைக் கண்டுபிடித்துள்ளார்.

இப்புதிய திட்டத்தை ஏற்றுக்கொண்டு மத்திய அரசு அங்கீகாரம் வழங்கியுள்ளது.

மீள்சுழற்சிக்குட்படுத்தப்படாத பொலித்தீன் கவர்கள், பிஸ்கட், சொக்லட் கவர்கள், டீகப், வெப்பமானி ஆகியவற்றை மீண்டும் பயன்படுத்தவும் இவற்றை எரிப்பதால் பூமி வெப்பமடைவதைத் தடுக்கவும் சுற்றுச் சூழலைப் பாதுகாக்கும் வகையில் பேராசிரியர் வாசுதேவன் கடந்த 2001இல் ஆய்வு மேற்கொண்டார். இவற்றைப் பயன்படுத்தி பிளாஸ்டிக் வீதி அமைக்கவும் முடிவு செய்தார்.

தொழினுட்பத்தைப் பயன்படுத்திப் பிளாஸ்டிக் கழிவுகளை எரிக்காமல் இவற்றை சல்லிகளில் கலந்து பிளாஸ்டிக் கோட்டிங் கொடுத்து அவற்றுடன் தார் சேர்த்து பிளாஸ்டிக் தார் வீதி அமைக்கவும் ஆய்வு செய்தார். உலகில் முதன்முறையாக இவரது கண்டுபிடிப்பான பிளாஸ்டிக் தார் வீதி கோவில்பட்டியில் 2002இல் போடப்பட்டது. (ஸ்ரீ-2)

# விக்ரம்-ராஜன்-கங்கு ஞாபகார்த்த கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டி

கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகமும் சனசமூக நிலையமும் நடத்தும் விக்ரம்-ராஜன்-கங்கு ஞாபகார்த்த கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் யுனொப்பஸ் நிறுவன செயற்றிட்ட பொறியியலாளர் ஆர். சிவசங்கர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அணி மோதவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். இந்துக் கல்லூரி மற்றும் கொக்குவில் இந்துக் கல்லூரியின் ஓய்வுபெற்ற அதிபர் ஏ.பஞ்சலிங்கம், கௌரவ விருந்தினராக கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் ஏ.அகிலதாஸ் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஸ்ரீ-3)

# தங்கூசி வலை, டிஸ்கோ வலை மூலம் தொழில் செய்வோர் பெரும் பாதிப்பு

(பருத்தித்துறை)

வடமராட்சி கடற்பகுதியில் தங்கூசி வலை, டிஸ்கோ வலை மூலம் தொழில் செய்யும் சிறு கடற்றொழிலாளர்கள் தமது தொழில்வளத்தை மேம்படுத்த முடியாமல் அவதியுறுவதாகத் தெரிவிக்கின்றனர்.

இக்கடற்பரப்பில் மேற்படி வலைகள் மூலம் கடந்த காலங்களில் தொழில் செய்து வந்த போதும் தற்போது அதற்கு முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளதால் தமது தொழில்வளம் பாதிக்கப்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதற்கு மாற்றீடாக ஒரு தொழில் வளத்தை ஏற்படுத்தித் தர அரசாங்கம் முன்வர வேண்டும் எனவும் சம்பந்தப்பட்ட மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஸ்ரீ-9-10)

# அனல்மின் நிலையம் அமைக்க சீனாவை அனுமதித்த போதும் இந்தியாவுக்கு அனுமதியில்லை

## இந்திய அதிகாரிகள் அதிருப்தி

(கொழும்பு)

நுரைச்சோலையில் சீன நிறுவனத்துக்கு அனல்மின் நிலையம் அமைக்க ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவே அனுமதி வழங்கினார். எனினும் திருகோணமலை சம்பூரில் இதே போன்ற அனல் மின்சார நிலையத்தை நிர்மாணிக்க இந்தியாவுக்கு அனுமதி வழங்கத் தொடர்ந்தும் தாமதித்து வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

இதனால் இந்திய அதிகாரிகள் அதிருப்தி வெளியிட்டுள்ளதாக வெளிநாட்டு அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கான அனுமதிகோரிய கடிதங்கள் மற்றும் ஆவணங்கள் மின்சாரத்துறை அமைச்சினூடாக ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்ட போதும், இதுவரையில் ஜனாதிபதி எந்த விதமான பதிலையும் வழங்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தநிலையில் இது தொடர்பில் இணையத்தளம் ஒன்று மின்சாரத்துறை அமைச்சிடம் மேற்கொண்ட விசாரணையில், நாளுக்கு நாள் உலக சந்தையில் நிலக்கரிக்கான விலை அதிகரிப்பது மற்றும் சூழல் மாசடைதல் தொடர்பில் மின்சாரத்துறை அமைச்சர் சம்பிக்க ரணவக்கவினால் ஜனாதிபதிக்கு அறிக்கை தாக்கல் செய்யப்பட்டதன் பின்னர், இது தொடர்பில் ஜனாதிபதி தீர்மானிப்பார் எனத் தெரியவந்துள்ளது.

எனினும் சம்பூரில் மக்கள் குடியிருந்த பகுதிகளில் அனல் மின்சார மையத்தை அமைப்பதில்லை என இந்திய அரசாங்கம் தமக்கு உறுதியளித்துள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்னர் அறிவித்திருந்தது.

அங்கு மக்கள் குடியிருப்புகள் இருக்கவில்லை என்ற அளவிற்கு இலங்கைப் படையினர் குடியிருப்புகள் இருந்த இடங்களை முற்றாக அழித்துள்ளனர். எனினும் அதற்கான ஆதாரங்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்திய அரசாங்கத்திடம் சமர்ப்பித்துள்ளது. (ஸ்ரீ-2)

# சட்ட மன்றத் தேர்தலுக்கு அவசரம் என்ன?- கருணாநிதி

(சென்னை)


தமிழக முதல்வரும் தலைவருமான கருணாநிதி எதிர்வரும் சட்டமன்றத் தேர்தல்களை ஏப்ரல் 13 அன்றே அவ்வளவு விரைவாக நடத்த வேண்டிய அவசியம் என்னவென்று கேள்வி எழுப்பியிருக்கிறார்.

கட்சிகளுக்கும் வேட்பாளர்களுக்கும் பிரசாரம் செய்ய இன்னும் சற்று கால அவகாசம் அளித்திருக்கலாமே எனவும் மே. 13 அன்றுதான் வாக்கு எண்ணிக்கை என்பதிலும் சில சிக்கல்கள் இருப்பதாக வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போதைய சட்டமன்றத்தின் பதவிக்காலாம் மே. 16 அன்று முடிவடையும். அந்நிலையில் அதற்கடுத்த நாளே புதிய சட்டமன்றம் அமைக்கப்பட்டாக வேண்டும். புதிய அமைச்சரவையும் பதவியேற்றாக வேண்டும்.

அதாவது மூன்றே நாட்களில் கட்சிகள் வென்றுள்ள இடங்களைப் பொறுத்து பெரும்பான்மைக் கட்சி எதுவென்று தெரிந்து அதன் தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆளுநருக்கும் தெரிவிக்கப்பட்டு அவர் புதிய முதல்வருக்கும் அமைச்சர்களுக்கும் பதவிப் பிரமாணம் செய்து வைக்க வேண்டும்.

அவ்வளவு நெருக் கடியில்தான் கட்சிகள் செயற்பட வேண்டுமா? இதையெல்லாம் மத்திய தேர்தல் ஆணையம் எண்ணிப் பார்க்காமலா இருந்திருக்கும் என்று வியக்கும் அவர் தேர்தல் ஆணையம் சுயாதீனமான அமைப்பு என்றாலும் கூட அதன் செயற்பாடுகள் சந்தேகத்திற்கப்பாற்பட்டதாக இருக்க வேண்டும் என்று வலியுறுத்தியிருக்கிறார். (ச-5)



ஊரெழு வீரகத்தி விநாயகர் ஆலய மகோற்சவத்தினை முன்னிட்டு ஊரெழு சைவாலய முன்னேற்றக் கழகம் நடாத்திய பண்ணிசைப் போட்டியில் பங்கேற்று வெற்றியீட்டிய கலைவாணி முன்பள்ளி மாணவனுக்கு ஆலய பரிபாலன சபைத் தலைவர் பரிசு வழங்குவதைப் படத்தில் காணலாம்.


# பாராட்டி வாழ்த்துகின்றோம்





வல்வெட்டித்துறை மத்திய பேருந்து நிலையம் மற்றும் மீன் சந்தை என்பவற்றை இன்று 05.03.2011 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு வைபவரீதியாக திறந்து வைக்கும்

**கௌரவ கே.என்.டக்ளஸ் தேவானந்தா**

(பாரம்பரிய கைத்தொழில்கள், சிறு தொழில் அமைச்சர்) அவர்களுக்கும்

**கௌரவ ஜீ.ஏ.சந்திரசிறி**

(ஆளுநர், வடக்கு மாகாணம்)

அவர்களுக்கும் வல்வெட்டித்துறை மக்கள் சார்பில் மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(3508)

(3938) வல்வெட்டித்துறை மக்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை இயங்கும் நேரத்தை 3 மணிவரை நீடிக்க தீர்மானம்

## கல்வி அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

பாடசாலை இயங்கும் நேரத்தை பிற்பகல் 3 மணிவரை நீடிக்க கல்வியமைச்சர் பந்துல குணவர்தன தீர்மானித்துள்ளார்.

இதற்கு முன்னர் பாடசாலை நேரம் 2 மணிவரை இடம்பெற்றதுடன் அது பின்னர் 1.30 மணியாக மாற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கல்வியமைச்சின் சிறந்த பாடசாலைகள் ஆயிரம் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஆயிரம் பாடசாலைகளில் கல்வி நேரத்தை பிற்பகல் 3 மணிவரை நீடிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இக்கால வேளைக்குள் ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் கற்பிக்கப்படும். அரசாங்க ஊழியர்கள் பிற்பகல் 4.30 மணிவரையும் பொலிஸார் 24 மணித்தியாலங்களும் கடமை புரிகின்றனர்.

ஆனால் அரசாங்க ஊழியர்களான ஆசிரியர்கள் மாத்திரம் 1.30 மணிக்கு வீடு செல்கின்றனர் என கல்வியமைச்சர் தெரிவித்தார்.

ஜப்பானில் உள்ள பாடசாலைகள் பிற்பகல் 4 மணி வரை இடம் பெறுகின்றமையால் தான் அங்குள்ளவர் திறமை வாய்ந்ததாகவர்களாக உள்ளனர் என அமைச்சர் சுட்டிகாட்டினார். (ஸ்ரீ-2)

# இலங்கைச் சனத்தொகையில் 9 வீதமானோருக்கு மனநோய்

## ஆய்வில் தகவல்

(கொழும்பு)

இலங்கையின் சனத்தொகையில் 9% மானவர்கள் மன நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு நடத்திய ஆய்வொன்றின் மூலம் தெரியவந்துள்ளது.

இவர்களுள் பலருக்கு தங்களது நிலை குறித்து தெரியாத நிலையிலேயே உள்ளனர். இது குறித்து நாடு முழுவதும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் திட்டங்களையும் சுகாதார அமைச்சு அமுல் செய்யவுள்ளது.

அளவுக்கதிகமான நகரமயமாக்கல், வேலையில்லாப்பிரச்சினை, வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, வீட்டு வன்முறைகள் என்பன இதற்குக் காரணங்களாக அமைந்துள்ளதாகவும் கண்டறியப்பட்டுள்ளது.

நடந்து முடிந்த போரின் பின்னர் வடக்கு, கிழக்கில் ஏராளமானோர் குடும்ப அங்கத்தவர்களை இழந்து அல்லது காணாமல் போய் அதன் காரணமாக உளவியல் தாக்கங்களுக்கு உட்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தற்போதைய கல்வி முறை மற்றும் போட்டித்தன்மை அதிகரிப்பு என்பன காரணமாக சிறுவர்கள் பலரும் மனநிலை பாதிக்கப்பட்டவர்களாக உள்ளனர் என்றும் இந்த ஆய்வில் மேலும் தெரியவந்துள்ளது. (ஸ்ரீ-2)

## வெதுப்பக உற்பத்தி பொருட்களின் விலை அதிகரிக்கும் சாத்தியம்

பாண் உள்ளிட்ட வெதுப்பக உற்பத்தி பொருட்களின் விலை அதிகரிக்கும் சாத்தியம் காணப்படுவதாக வெதுப்பக உரிமையாளர் சங்கத்தின் தலைவர் என்.கே.ஜெயவர்தன தெரிவித்தார்.

உணவுப் பொருட்களின் மற்றும் வெதுப்பக உற்பத்திக்கு பயன்படுத்தப்படுகின்ற மூலப் பொருட்களின் விலை அதிகரித்துள்ளமையினால் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (ஸ்ரீ-9)

பதவி வெற்றிடம்
➤ கண் சிகிச்சை வைத்தியர்
➤ பல் சிகிச்சை வைத்தியர்
➤ Home Medical Officer (HMO) (காலை 6.30- பகல் 10.30 வரை)
➤ இரத்த, சிறுநீர் பரிசோதகர் (MLT) (Full Time)
➤ X-Ray இயக்குநர் (Full Time)
உடனடியாகத் தேவை
PRINCESS OF WALES NURSING HOME
132,Kokulam Kachcheri Nallur Road, Jaffna , Sri Lanka.
Phone+94(21)2226179, +94(21)2226180
Email: princesshosp@gmail.com
(சி-2585)

# பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் 176 ஆவது ஜெயந்தி தினம்

(யாழ்ப்பாணம்)

பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணரின் 176 ஆவது ஜெயந்தி தினம் நாளை ஞாயிற்றுக்கிழமை பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தில் பக்தி பூர்வமாக நடாத்தப்படவுள்ளது.

இதில் காலை 6 மணிக்கு ஆரதியும் நண்பகல் 12 மணிக்கு விசேட பூசைகளும் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் தினம் கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் கல்லூரி , யாழ். வேம்படி உயர்தரப் பாடசாலை, யாழ். வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி, யாழ். உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, யாழ். வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி ஆகிய பாடசாலைகளின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஸ்ரீ-2)

# இலங்கை அகதியொருவர் பலியான சம்பவத்துடன் தொடர்புடைய நபருக்குச் சிறை

இலங்கை அகதியொருவரை வாகனத்தால் மோதிவிட்டு தப்பிச் சென்றுள்ளார் என்ற குற்றச்சாட்டின் பேரில் 31 வயதான ஹெரோயின் பாவனைக்கு அடிமையான நபரொருவருக்கு 8 வருடகால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2009ஆம் ஆண்டு ஜனவரி மாதம் அவுஸ்திரேலியாவில் டான்டெனொங் எனும் பகுதியிலுள்ள புகையிரதக் கடவையில் ஜரட் சுவான் என்பவரின் கார் மோதியதில் திருவடிவேல் ஸ்ரீஸ்காந்தராஜா என்பவர் பலியானார்.

குறித்த இலங்கை அகதி 27 மீற்றருக்கு அப்பால் தூக்கி எறியப்பட்டு அந்த இடத்திலேயே பலியானார். இவர் 6 மாதங்களுக்கு முன்னரே அவுஸ்திரேலியாவுக்கு வந்தடைந்தவராவார்.

ஹெரோயின் பாவனைக்கு அடிமையான ஜராட் சுவான் விரைவாகக் காரைச் செலுத்தி வந்து காரை நிறுத்துவதற்குத் தவறியதாக நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

8 வருட காலம் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள ஜரட்சுவான் குறைந்த பட்சம் 6 வருடகாலமாவது சிறைத்தண்டனை அனுபவிக்கவேண்டி நேரிடுமெனவும் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)





ஸ்ரீ கந்தசுவாமி கோவில்
உசன்-மிருசுவில்
மஹா உன்னத பாஞ்ஜசன்ய சகித 108 வலம்புரி சங்காபிஷேக ஸ்கந்த ஹோமப் பெருவிழா
06.03.211 ஞாயிற்றுக்கிழமை
ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோயில் "அருள்வாக்குச் சித்தர்"
(உசன் கந்தசுவாமி கோவில் பிரதமகுரு)
குகஸ்ரீ இரத்தினகேதீஸ்வர சுவாமிகள்
தலைமையில் பல சிவாச்சாரியார்கள் கலந்து சிறப்பிப்பார்கள்.
யாழ். பிரதான பஸ்நிலையத்திலிருந்து உசன் கந்தசுவாமி கோயில் வரை இ.போ.ச பஸ்சேவையும், தனியார் சிற்றூர்திப் போக்குவரத்துச் சேவையும் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
நிகழ்வுகளை இணையத்தளத்தில் பார்வையிட: www.ussanjaffna.com
(3929)
விளம்பர அனுசரணை: ஓட்டல் ஓங்கார பவன் உயர்தர சைவ உணவகம்
இல 37, கண்டி வீதி, சாவகச்சேரி உரிமையாளர்: சர்மா தொ.பே.:0777231680

ஸ்ரீ அம்மா பகவான் சரணம்
ஸ்ரீ கல்கி பகவானின் 62வது ஜென்மதின நிகழ்வு அழைப்பு
மேற்படி நிகழ்வு எதிர்வரும் திங்கட்கிழமை 07.03.2011 அன்று காலை 8.30 மணிமுதல் 11.30 மணி வரை சுழிபுரம் ஸ்ரீ அம்மா பகவான் சற்சங்க ஆன்மீகப் பிரார்த்தனை மையத்தில் அறுபத்திரண்டு (62) கலசங்கள் கொண்ட பூஜை நிகழ்வுகளுடன் நடைபெறவுள்ளது. இந் நிகழ்வில் இந்தியாவிலுள்ள ஸ்ரீ அம்மா பகவான் ஒன்னெஸ் பல்கலைக்கழகத்திலிருந்து வருகைதந்த ஸ்ரீ உமாஜி அவர்களும் கலந்து கொள்ளவுள்ளார். பக்தர்கள் அனைவரையும் கலந்து சிறப்பித்து இந் நன்நாளில் பகவானின் அருள் ஆசியினைப் பெற்றுக் கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
குறிப்பு: யாழ். மாவட்ட ஏகத்துவ அமைப்பின் அனுசரணையுடன் ஸ்ரீ உமாஜி அவர்களினால் 06.03.2011 ஞாயிறு பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். நல்லூர் இளங்கலைஞர் கலாமண்டபத்தில் நடாத்தப்படும் ஆரோக்கிய தீட்ஷா நிகழ்விலும் 07.03.2011 திங்கள் பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்.எடிசன் அக்கடமியில் இடம்பெறும் முக்தி தீட்ஷா நிகழ்விலும் கலந்து கொண்டு ஸ்ரீ அம்மா பகவானின் அருளாசியினால் வாழ்க்கையில் வெற்றியைப் பெற்றுக் கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
சுழிபுரம் ஸ்ரீ அம்மா பகவான்,
சற்சங்க ஆன்மீகப் பிரார்த்தனை மையம்,
யாழ். மாவட்டம், இலங்கை.
05.03.2011 தொ.பே:- 0777651719
(3939)



கழகங்களுக்கிடையில் நடைபெற்ற தேசிய மட்ட டயட்டா கிர்வல வலைப் பந்தாட்டபோட்டியில் சம்பியனான யூனியன் கல்லூரி அணியினர் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி மற்றும் ஆசிரியர்களுடன் நிற்பதைப் படத்தில் காணலாம். (படம்:- என்.குமார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லா மக்களையும் சில நாட்களுக்கும் சில மக்களை எல்லா நாட்களுக்கும் முட்டாளாக ஆக்க முடியும். ஆனால் எல்லோரையும் எப்போதும் முட்டாளாக்க முடியாது. *–ஆபிரகாம் லிங்கன்*

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## கடாபி வெளியேறும் காலம் நெருங்கிவிட்டது

லிபியா நாட்டில் உள்நாட்டு யுத்தம் மூண்டுள்ளது. லிபிய நாட்டின் தலைவர் கேணல் கடாபிக்கு எதிராக இந்நாட்டு மக்கள் ஆர்ப்பாட்டம் செய்து வருகின்றனர்.

இந்நிலையில் கடாபியின் இராணுவம், தனது நாட்டு மக்களை கொன்று குவித்து வருகின்றது.

லிபிய நாட்டில் நடக்கும் இந்த மோசமான மனிதப் படுகொலையை மனிதநேயமுள்ள நாடுகள் வன்மையாகக் கண்டித்து வருகின்றன.

ஒரு நாட்டின் தலைமை தனது நாட்டு மக்களையே குண்டு வீசிக் கொன்று குவிக்குமாயின் அதனை அரச தலைமை என்று ஒருபோதும் கூற முடியாது.

மாறாக அது பாசிசப் போக்காகும். இந்தப் போக்கை கேணல் கடாபி பின்பற்றவது லிபியாவின் வரலாற்றில் மிக மோசமான இருண்ட காலமாக கணிக்கப்படும் என்பது உறுதி.

நாட்டுமக்கள் இந்தத் தலைமை நமக்கு வேண்டாம் என்று கூறும்போது இல்லை இல்லை நான் பதவியில் இருக்கப் போகிறேன் எனத் தர்க்கிப்பது நியாயமாகாது.

அரச தலைமை என்பது நாட்டு மக்களுக்கானது. பதவி என்பதும் மக்களுக்கு சேவை செய்வதற்கானதே.

பதவிக்காக மக்களைக் கொல்வது அல்லது பதவிக்கு வருவதற்காக மக்களைக் கொல்வது அல்லது பதவிக்கு வந்துவிட்டேன் என்பதற்காக மக்களைக் கொல்வது எதுவுமே நீதியாகாது.

மக்களின் எதிர்ப்பை ஏற்றுக்கொண்ட எகிப்திய அதிபர் முபாரக் தனது பதவியை இராஜினாமாச் செய்தார். அவர் இராஜினாமாச் செய்வதற்கு அந்நாட்டு இராணுவம் மக்கள் பக்கம் நின்றமையும் காரணமாகும்.

இராணுவம் என்பது எப்போதும் அரசிற்கு அல்லது நாட்டின் அதிகாரத்திற்கு மட்டுமே ஆதரவு வழங்குவது என முடிவு செய்யுமாயின் மனித உயிர்கள் அநியாயமாக அழிவதைத் தவிர வேறு வழியில்லை.

லிபிய நாட்டு தலைவர் கடாபியை வெளியேறுமாறு அந்நாட்டு இராணுவம் கோரியிருந்தால் எகிப்து போல உயிர் அழிவுகள் இல்லாமல் லிபிய நாட்டு மக்கள் தமக்கு விருப்பமான ஆட்சியை அமைத்திருப்பர்.

என்னசெய்வது, கடாபியின் காட்டுமிராண்டித் தனத்திற்கு அந்த நாட்டு இராணுவம் துணை போகிறது. இதனால் லிபிய நாட்டு குடிமக்கள் துடிதுடித்து பலியாகின்றனர். இதுதான் நிலைமை. எதுவாயினும் லிபியாவின் தலைமையிலிருந்து கடாபி வெளியேறுவது உறுதியாகிவிட்டது.

# அட்மிரல் திஸார சமரசிங்க நியமனம் ஆஸி பாராளுமன்ற உறுப்பினர் எதிர்ப்பு




அவுஸ்திரேலியத் தூதுவராக இலங்கையின் முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் திஸார சமரசிங்கவை நியமிப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை அந்நாட்டின் தொழிலாளர் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் முர்பி கடுமையாக எதிர்த்துள்ளார்.

அவுஸ்திரேலிய நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போதே அவர் தனது எதிர்ப்பை வெளிப்படுத்தினார்.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரில், மக்கள் மீது கண்மூடித்தனமான பீரங்கித்தாக்குதல்கள் நடத்தப்பட்டமைக்கு பொறுப்பேற்க வேண்டிய பொறுப்பிலிருந்த கடற்படைத் தளபதியை அவுஸ்திரேலியாவுக்கான தூதுவராக நியமிக்க மேற்கொள்ளப்படும் முயற்சிகள் குறித்து அவர் தனதுரையில் விசனம் வெளியிட்டுள்ளார்.

அதேவேளை வன்னிப் போரின் போது சர்வதேச அனுசரணையுடன் வெள்ளைக்கொடியை ஏந்தியவாறு சரணடையச் சென்ற விடுதலைப் புலிகளின் மூத்த தலைவர்களின் படுகொலையுடன் சம்பந்தப்பட்டிருப்பதாகக் கூறப்படும் பாலித ஹோகன மீது அவுஸ்திரேலிய அரசாங்கம் சுதந்திரமான விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன் இலங்கையில் தமிழ் மக்கள் பாதுகாப்பாகவும், கௌரவமாகவும் வாழ்வதற்கு அவுஸ்திரேலியா நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் தொழிலாளர் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் முர்பி தனதுரையில் வேண்டுகோள் விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-5)

## மருதங்கேணிப் பாடசாலைக்கு அமைச்சர் நிதி உதவி

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கல்வி வலயத்தின் மருதங்கேணி கோட்டத்திற்கு உட்பட்ட மூன்று பாடசாலைகளின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகளுக்காக பாரம்பரிய கைத் தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் நிதியுதவி வழங்கினார்.

வடமராட்சி கிழக்குப் பகுதியில் மக்கள் மீள் குடியேறியுள்ள நிலையில் மாமுனை இந்து தமிழ்க் கலவன் பாடசாலை, ஆழியவளை சீ.சீ.தமிழ்க் கலவன் வித்தியாலயம். செம்பியன்பற்று ரோமன் தமிழ்க் கலவன் பாடசாலை ஆகிய ஆகிய பாடசாலைச் சமூகங்களால் அமைச்சரிடம் நிதியுதவி கோரப்பட்டிருந்தது.

இதன் பிரகாரம் பாடசாலைகளின் இல்ல மெய்வல்லுநர் போட்டிகளை நடத்தும் விதமாக மூன்று பாடசாலைகளுக்கும் காசோலைகளை யாழ். அலுவலகத்தில் வைத்து அமைச்சர் வழங்கினார்.

இக் காசோலைகளை மாமுனை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் சந்திரமோகனும், ஆழியவளை சீ.சீ.தமிழ்க் கலவன் வித்தியாலய அதிபர் பாஸ்கரனும், செம்பியன்பற்று ரோமன் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் ஜெயச்சந்திரனும் பெற்றுக்கொண்டனர். (ந)

## சர்வதேச மகளிர் தினம்

(யாழ்ப்பாணம்)

வட மாகாண கல்வி பண்பாட்டுத் துறை விளையாட்டு அமைச்சின் பண்பாட்டு அலுவல்கள் திணைக்களமும் யாழ்.மாநகராட்சி மன்றமும் இணைந்து நடத்தும் சர்வதேச மகளிர்தின நிகழ்வு எதிர்வரும் 08ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் நடைபெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவும் கௌரவ விருந்தினர்களாக வட மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி மற்றும் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ந)

## மென்பந்தாட்ட சுற்றுப்போட்டி

பருத்தித்துறை, தும்பளை விவேகானந்தா விளையாட்டுக்கழகத்தினால் வருடாந்தம் நடாத்தப்படும் அமரர்களான வைத்திய கலாநிதி க.பரிமேலழகர்,ஆசிரியர் வே. விமலன், செ.பரணீதரன் ஆகியோர் ஞாபகார்த்த மென்பந்தாட்டச் சுற்றுப் போட்டி இன்றும், நாளையும் காலை 8 மணிக்கு மாதனை கண்ணகை அம்மன் ஆலயத்திற்கு அருகிலுள்ள மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் பங்கு பற்ற விரும்பும் கழகங்கள் உரிய நேரத்திற்கு சமுகம் தருமாறு கழக செயலாளர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-9)

## யாழ். மாவட்டத்தை சேர்ந்த 26 கிராம அலுவலர்களுக்கு பதவியுயர்வு

இலங்கை பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் தரம் இரண்டில் இருந்த கிராம அலுவலர்களை தரம் ஒன்றிற்காக பதவி உயர்த்துவதற்காக இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட சேவை மூப்பு அடிப்படையிலான நேர்முகப் பரீட்சையில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 26 கிராம அலுவலர்கள் தரம் ஒன்றிற்கு பதவி உயர்வு செய்யப்பட்டுள்ளதாக பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

சேவை மூப்பு அடிப்படையில் நடைபெற்ற நேர்முகப் பரீட்சையில் பதவி உயர்வு பெற்றவர்களின் விபரங்கள் வருமாறு,

பி.கதிரேசன், ஜே.ரவீந்திரன் (நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவு), ஏஸ். கணபதிப்பிள்ளை (ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவு), ஏம். பி. தவராசா (மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவு), என். பாலாம்பிகை (காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவு), ஆர்.லோகநாதன் , கே.சூரியகுமாக் , கே.சுதர்சன் , என். ஸ்ரீ சோமஸ்கந்த மூர்த்தி (சண்டிலிப்பாய் பிரதேச செயலகம்), எம். சிவனேசன் , பி.பரமநாதன் (கரவெட்டி பிரதேச செயலகம்), எஸ். ரவீந்திரன், ரி.வதனகுமார் (பருத்தித்துறை பிரதேச செயலகம்), கே.கணேசலிங்கம் (சாவகச்சேரி பிரதேச செயலகம்), [illegible] திருமதி கே.நாகேந்திரநாதன், என்.தவனேசன் (நல்லூர் பிரதேச செயலகம்), எஸ்.யூலன் (யாழ்ப்பாணம் பிரதேச செயலகம்), எஸ். பூபாலசிங்கம் (தெல்லிப்பளை பிரதேச செயலகம்), எஸ். அல்பிரட் , எஸ். வசந்தகுமாக் , கே.நகுலேஸ்வரன், கே.ஜெயந்திரன் (கோப்பாய் பிரதேச செயலகம்), (ஸ்ரீ-2)

## சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்



சர்வசமயப் பேரவை சிறப்பாக நிறைவுற்று விட்டது. இதை உருவாக்க முயற்சி செய்தவர்களுக்கு இறைவன் துணை நின்று, அவர்களுடைய தன்னலமற்ற உழைப்பிற்கு வெற்றி வாகை சூடியுள்ளார்.

இந்த அற்புதமான கனவை, முதலில் கண்டு, பின்னர் அதை நனவாக்கிய, பரந்த இதயமும், உண்மையில் பற்றும்கொண்ட உத்தமர்களுக்கு என் நன்றி, என் மீது ஒரு மித்த அன்பு காட்டியதற்காகவும் சமயங்களுக்கு இடையே நிலவுகின்ற அதிருப்தியைத் தணிப்பதற்காகக் கூறப்பட்ட கருத்துக்களைப் பாராட்டியதற்காகவும் அறிவுசார்ந்த சபை யினருக்கு என் நன்றி. இந்த இன்னிசையில் அவ்வப்போது சில அபசுவரங்கள் கேட்டன. அவர்களுக்கு என் சிறப்பான நன்றி. ஏனெ னில் அவர்கள் தங்கள் மாறுபட்ட ஒலியால், இன்னிசையை மேலும் இனிமை ஆக்கினர். சமய ஒருமைப்பாட்டிற்குரிய பொது நிலைக்களம் பற்றி திகம் பேசப்பட்டது. இதைப்பற்றி என்சொந்த கோட்பாட்டை இப்போது நான் சொல்ல விரும்பவில்லை. ஆனால் இந்த ஒருமைப்பாடு ஏதாவது ஒரு மதத்தின் வெற்றியாலும் மற்ற மதங்களின் அழிவாலும் கிட்டும் என்று இங்குள்ள யாரேனும் நம்பினால், அவரிடம் நான் , " சகோதரா ! உனது நம்பிக்கை வீண்" என்று சொல்லிக் கொள்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



# திருமதி இராசமணி வீரசிங்கம்

சிவன் பண்ணை வீதி, கொட்டடியைப் பிறப்பிடமாகவும் 198/5 நாவலர் வீதி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசமணி வீரசிங்கம் அவர்கள் நேற்று 04.03.2011ந் திகதி வெள்ளிக்கிழமையன்று சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வீரசிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான தம்பையா சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்லையா சவுந்தரம் தம்பதிகளின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்றவர்களான திருமதி இராசம்மா இராசையா, திருமதி லட்சுமி கந்தையா மற்றும் திருமதி பாக்கியம் செல்லப்பா, காலஞ்சென்றவர்களான இராசையா, நடராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஜெகதீஸ்வரன் (ஜெயம்- ஜேர்மன்), விமலரதி, நித்தியகலா, ஸ்ரீதரன் (சிறி ராம் ஜூவல்லர்ஸ், கொனிக்கா கலர் லாப்), விஜயகுமாரி, ரவீந்திரகுமார் (சுப்பஸோ- லண்டன்), ஜெயசீலன் (சானுகா நகைமாடம்), ஸ்ரீசக்திவேல் (ஸ்ரீமீனாட்சி ஜூவல்லர்ஸ், டொட் லைன் கலர்லாப்), நிகிலா, உஷாநந்தினி ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற திருமதி கலா ஜெகதீஸ்வரன் (ஜேர்மன்) மற்றும் சண்முகலிங்கம் (பூரணி நகைமாடம்), சுரேந்திரன் (டுபாய்), திருமதி மைதிலி ஸ்ரீதரன், சத்தியரூபன் (ஸ்ரீ நதியா நகைமாடம், ஸ்ரீ நதியா கலர் லாப்), திருமதி அனுசியா ரவீந்திரகுமார் (கொழும்பு), திருமதி சத்தியப்பிரியா (உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம்- யாழ்ப்பாணம்), கிருஸ்ணமோகன் (ரட்ணா கென்ஸ்ரக்ஸ்சன்ஸ்), இராஜேஸ்வரன் (பிரதேச செயலகம்- கோப்பாய்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், திருசாந்தன், நிரோசன், மீனஷா, மீனலக்ஷன். ஹரிஸ்ராம், ஹரிணி, ஸ்ரீநதியா, சானுகா, கஜலக்ஷன், கஜஹனுசன், சுபசிரவின், வர்ஷன், சாய்பிரதா, திருசாளினி, நிஹாசன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 06.03.2011ந் திகதி ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**198/5, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**
**021 222 2435**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(சி-2587)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகக் கிண்ண கிரிக்கெட் திருவிழா 2011
பெப்ரவரி 19 - ஏப்ரல் 02
ICC Cricket World Cup 2011

# ஆஸிக்கு பதிலடி கொடுக்குமா இலங்கை

# கொழும்பில் இன்று விறுவிறுப்பான ஆட்டம்

(கொழும்பு)

உலகக்கிண்ணத் தொடரில் கொழும்பில் இன்று நடக்கும் லீக் போட்டியில் இலங்கை அணி நடப்புச் சம்பியன் அவுஸ்திரேலிய அணியைச் சந்திக்கிறது.

இதில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்தி கடந்த 2007 இல் நடந்த உலகக்கிண்ண இறுதிப் போட்டியில் கண்ட தோல்விக்கு பதிலடி கொடுக்க இலங்கைப் படை தயாராக உள்ளது.

இலங்கை, இந்தியா, பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் 10 ஆவது உலகக்கிண்ண தொ்டர் நடைபெறுகிறது.

இதில் கொழும்பு ஆர்.பிரேமதாஸ விளையாட்டரங்கில் நடைபெறும் 20 ஆவது லீக் போட்டியில் ஏ பிரிவைச்சேர்ந்த இலங்கை - அவுஸ்திரேலிய அணிகள் மோதுகின்றன.

கடந்த 2007 இல் மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெற்ற உலகக் கிண்ணத் தொடரின் இறுதிப் போட்டியில் அவுஸ்திரேலிய அணி இலங்கை அணியை வீழ்த்தியது.

இலங்கை அணி, இம்முறை சொந்த மண்ணில் அவுஸ்திரேலிய அணியை சந்திக்க இருப்பதால், கடந்த தோல்விக்கு பதிலடி கொடுக்க நல்ல வாய்ப்பு கிடைத்துள்ளது. இதனை சரியாக பயன்படுத்திக் கொள்ளும் பட்சத்தில் இலங்கைஅணி காலிறுதி வாய்ப்பை பிரகாசப்படுத்திக் கொள்ளலாம்.

இலங்கை அணியின் முதல் வரிசைத் துடுப்பாட்டம் பலமாகவுள்ளது. ஆரம்ப வீரர்களான உபுல் தரங்க, டில்சான் சாதிக்கும் பட்சத்தில் இமாலய இலக்கை அடையலாம்.

கடந்த மூன்று போட்டிகளிலும் அபார ஆட்டத்தை வெளிப்படுத்திவரும் அணித்தலைவர் குமார் சங்கக்கார இன்றும் அசத்தும் பட்சத்தில் நடுத்தரவரிசையில் விக்கெட் வீழ்ச்சியைத் தவிர்க்கலாம்.

பாகிஸ்தான் அணிக்கு எதிராக சோபிக்கத் தவறியதால் சர்ச்சையில் சிக்கித் தவிக்கும் மஹேல ஜெயவர்த்தன, சமரவீரவும் இன்று எழுச்சி பெறவேண்டிய கட்டாயத்தில் உள்ளனர்.

இவர்களைத் தவிர சகலதுறை வீரர் மத்யூஸ், சாமர சில்வா உள்ளிட்டோரும் அதிரடி காட்டினால் கூடுதல் பலம்.

### மலிங்க நம்பிக்கை

கென்ய அணிக்கு எதிராக ஹட்ரிக் சாதனை படைத்த இலங்கை வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்க மீது அதிக எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது. இவர் இன்னும் அசத்தலாகச் செயற்படும் பட்சத்தில் அவுஸ்திரேலிய துடுப்பாட்ட வீரர்களுக்குச் சிக்கலாகிவிடும்.

மலிங்க, குலசேகர, பெரேரா, மத்யூஸ் உள்ளிட்ட சகல வேகங்களும் ஒத்துழைப்புக் கொடுத்தால் நல்லது. சுழல் அனுபவ முரளிதரன் ஒத்துழைப்பிருப்பது நம்பிக்கை.

கடந்த போட்டிக்ளில் பெரியளவில் சோபிக்காத முரளிதரன் நடப்புச் சம்பியன் அவுஸ்திரேலிய அணிக்கு எதிராக விக்கெட் வேட்டை நடத்த வாய்ப்புள்ளது.

### ஹட்ரிக் வாய்ப்பு

சிம்பாவே, நியூசிலாந்து அணிகளை வீழ்த்திய அவுஸ்திரேலியா, இலங்கை அணியை அதன் சொந்த மண்ணில் எதிர்கொள்ளவிருப்பது சவாலான விடயம். இதில் சிறப்பாக விளையாடும்பட்சத்தில் ஹட்ரிக் வெற்றிபெற்று காலிறுதி வாய்ப்பை அதிகப்படுத்திக் கொள்ளும்.

தவிர பொன்டிங் தலைமையிலான அவுஸ்திரேலிய அணி உலகக்கிண்ண அரங்கில் தொடர்ந்து 25ஆவது வெற்றியைப் பதிவு செய்து புதிய வரலாறு படைக்கலாம்.

### வோட்ஷன் எதிர்பார்ப்பு

சிம்பாவே, நியூசிலாந்து அணிகளுக்கு எதிராக அரைச்சதம் கடந்து சிறப்பான ஆரம்பம் வழங்கிய சகலதுறை வீரர் ஷேன் வோட்ஷன் இன்றும் தனதுஅதிரடி ஆட்டத்தைத் தொடரலாம்.

இவருக்கு ஹடின் ஒத்துழைப்புக் கொடுக்கும் பட்சத்தில் இமாலய இலக்கை அடையலாம்.

பொன்டிங், மைக்கல் கிளார்க் உள்ளிட்டோர் தங்களது அனுபவத்தை வெளிப்படுத்தினால் சாதகம். நடுத்தர வரிசையில் வைட், டேவிட் ஹசி களமிறங்கும் பட்சத்தில் இலங்கை மண்ணில் ரன் மழை பொழியலாம்.

சுழலில் கிரேஜா நம்பிக்கை அளிக்கிறார். இவருக்கு ஸ்மீபன் சிமித் ஒத்துழைப்புக் கொடுத்தால் இலங்கை அணிக்கு சிக்கலாகிவிடும்.

சமபலமான இரு அணிகளும் இன்று மோதுவதால் அனல் பறக்கும் ஆட்டத்தை இன்று காணலாம்.

### ஆஸி ஆதிக்கம்

உலகக் கிண்ண அரங்கில் இலங்கை அவுஸ்திரேலிய அணிகள் இதுவரை 07 முறை மோதியுள்ளன. இதில் அவுஸ்திரேலியா 06, இலங்கை ஒரு போட்டியில் வெற்றிகண்டன. 1996 ஆம் ஆண்டு உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் அவுஸ்திரேலியாவை வீழ்த்தி இலங்கை சம்பியனானது.

## புள்ளிப் பட்டியல்

ICC Cricket World Cup 2011

### பிரிவு A

| அணிகள் | போட்டி | வெற்றி | தோல்வி | சமனிலை | முடிபில்லை | புள்ளிகள் | நிகர ஓட்ட எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| பாகிஸ்தான் | 3 | 3 | 0 | 0 | 0 | 6 | +1.747 |
| இலங்கை | 3 | 2 | 1 | 0 | 0 | 4 | +2.663 |
| அவுஸ்திரேலியா | 2 | 2 | 0 | 0 | 0 | 4 | +1.813 |
| நியூசிலாந்து | 3 | 2 | 1 | 0 | 0 | 4 | +1.584 |
| சிம்பாவே | 3 | 1 | 2 | 0 | 0 | 2 | +0.079 |
| கனடா | 3 | 0 | 3 | 0 | 0 | 0 | -2.873 |
| கென்யா | 3 | 0 | 3 | 0 | 0 | 0 | -4.825 |

### பிரிவு B

| அணிகள் | போட்டி | வெற்றி | தோல்வி | சமனிலை | முடிபில்லை | புள்ளிகள் | நிகர ஓட்ட எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| தென்னாபிரிக்கா | 2 | 2 | 0 | 0 | 0 | 4 | +2.763 |
| மேற்கிந்தியத் தீவுகள் | 3 | 2 | 1 | 0 | 0 | 4 | +2.667 |
| இந்தியா | 2 | 1 | 0 | 1 | 0 | 3 | +0.870 |
| இங்கிலாந்து | 3 | 1 | 1 | 1 | 0 | 3 | +0.035 |
| அயர்லாந்து | 2 | 1 | 1 | 0 | 0 | 2 | -0.207 |
| பங்களாதேஷ் | 3 | 1 | 2 | 0 | 0 | 2 | -1.764 |
| நெதர்லாந்து | 3 | 0 | 3 | 0 | 0 | 0 | -3.058 |

## நாளைய ஆட்டங்கள்

cricket world Cup 2011

தென்னாபிரிக்கா எதிர் இங்கிலாந்து
காலை 9.30
சென்னை

இந்தியா எதிர் அயர்லாந்து
INDIA IRELAND
மாலை 2.30
பெங்களூர்

# நியூசிலாந்து இலகு வெற்றி

# சிம்பாவே அணி பரிதாபம்

(அகமதாபாத்)

சிம்பாவே அணியுடனான லீக் போட்டியில் சகல துறையிலும் ஜொலித்த நியூசிலாந்து அணி 10 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

பத்தாவது உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் இந்தியா, இலங்கை, பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் நடைபெற்று வருகிறது. இதில் அகமதாபாத்தில் நடைபெற்ற 18ஆவது லீக் போட்டியில் 'ஏ' பிரிவைச் சேர்ந்த நியூசிலாந்து- சிம்பாவே அணிகள் மோதின.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சிம்பாவே அணித்தலைவர் சிகும்புரா முதலில் துடுப்பெடுத்தாடத் தீர் மானித்தார்.

இதனடிப்படையில் களமிறங்கிய சிம்பாவே அணிக்கு ரெய்லர்– கொவேன்ரி ஜோடி ஆரம்பம் வழங்கினர்.

இதில் கொவேன்ரி பூச்சியத்துடன் ரன்–அவுட் முறையில் ஆட்டமிழந்தார்.

அடுத்து களமிறங்கிய தைபு- 8, எர் வின்– 11 ஓட்டங்களுடனும் அணித் தலைவர் சிகும்புரா ஒரு ஓட்டத்துடனும் சகாப்வா பூச்சியத்துடனும் வரிசையாக ஆட்ட மிழந்து வெளியேற சிம்பாவே அணி 14.3 ஓவர்களில் 46 ஓட் டங்களை எடுத்து 5 விக்கெட்டுக்களை யிழந்து திணறியது.

இந்நிலையில் 6 ஆவது விக்கெட்டுக்காக ரெய்லருடன் இணைந்த லாம்ப் பொறுப்பான ஆட்டத்தை வழங்கி ஆறுதல் அளித்தார்.

இந்த ஜோடி 6ஆவது விக்கெட்டுக்காக 40 ஓட்டங்களைச் சேர்த்த போது ஆரம்பம் முதல் தாக்குப் பிடித்த ரெய்லர் 57 பந்துகளில் (4 பவுண்டரிகள் உட்பட) 44 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.



தொடர்ந்து உற்சயா களமிறங்க மறுமுனையில் லாம்ப் 18 ஓட்டகளுடன் ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த கிரீமர் பொறுப்புடன் ஆட சிம்பாவே அணி 31.1 ஓவர்களில் 100 ஓட்டங்களைத் தொட்டது.

இதில் கிரீமர் 22 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார். அடுத்து வந்த பிறைஸ் 11 ஓட்டங்களுடன் வெளியேறினார்.

அடுத்து பின்வரிசையில் சிறப்பான ஆட்டத்தை வழங்கிய உற்சயா 65 பந்துகளில் (3 பவுண்டரிகள் உட்பட) 36 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்க சிம்பாவே அணி 46.2 ஓவர்களில் 162 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

பந்து வீச்சில் சௌத்தி 3 விக்கெட்டுக்களையும் மில்ஸ், விக்டோரி ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் ஸ்றைரிஸ் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். பதிலுக்கு 50 ஓவர்களில் 163 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற சுலப இலக்குடன் துடுப் பெடுத்தாடிய நியூசிலாந்து அணிக்கு குப்தில் – மக்குலம் ஜோடி சிறப்பான இணைப்பாட்டத்தை வழங்கினார்.

விக்கெட்டை பறிகொடுக்காமல் வெற்றி பெற வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இந்தக் கூட்டணி அற்புதமான ஆட்டத்தை வழங்கியது. இதில் குப்தில் 68 பந்துகளிலும் மக்குலம் 74 பந்துகளிலும் அரைச்சதத்தை பூர்த்தி செய்தனர்.

இந்நிலையில் நியூசிலாந்து அணி 33.3 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 166 ஓட்டங்களைக் குவித்து 10 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இதன் மூலம் நியூசிலாந்து அணி தொடரில் தான் ஆடிய 3 ஆட்டங்களில் இரண்டாவது வெற்றியை பதிவு செய்து 4 புள்ளிகளைப் பெற்றுள்ளது. துடுப்பாட்டத்தில் குப்தில் 108 பந்துகளில் (7 பவுண்டரிகள்,2 சிக்சர்கள் உட்பட) 86 ஓட்டங்களையும் பிரண்டன் மக்குலம் 95 பந்துகளில் (6 பவுண்டரிகள் 2 சிக்சர்கள் உட்பட) 76 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் குவித்தனர்.

இப்போட்டியில் ஜொலித்த நியூசிலாந்து வீரர் குப்தில் ஆட்டநாயகனாக தெரிவானார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விமானப்...

கொழும்பு செல்லவுள்ளதாக முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் இவ் விழாவில் இந்திய விமானப் படையின் சுகோய் போர் விமானங்களின் சாகச நிகழ்வுகள் எதுவும் இடம்பெற வில்லை என்பதுடன் துணைத்தளபதி ஏயார் மார்ஷல் பிறவுணுக்குப் பதிலாக இந்திய விமானப்படை தலைமையகத்தின் ஆளணிப் பிரிவுக்கான பொறுப்பதிகாரியாக உள்ள ஏயார் மார்ஷல் அனில் சோப்ராவ் கலந்து கொண்டிருந்தார்.

இம் மாற்றங்களுக்கான காரணங்கள் குறித்து தகவல்கள் ஏதும் வெளியிடப்பட வில்லை.

இந் நிகழ்வில் கலந்துகொள்வதற்காக கொழும்புக்கு விஜயம் செய்திருந்த இந்திய விமானப்படை உயர் அதிகாரி ஏயார் மார்ஷல் அனில் சோப்ரா கடந்த முதலாம் திகதி கடற்படைத்தலைமையகத்தில் இலங்கை கடற்படைத்தளபதி வைஸ் அட்மிரல் சோமதிலக திஸநாயக்கவை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-5)

## இலங்.தூதரகங்களுக்கு புலனாய்வுப்பிரிவினர் நியமிக்கப்படாமை பாரிய குறைபாடாம்!

விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் அதிகமாக உள்ள நாடுகளில் இருக்கும் இலங்கை தூதரங்களுக்கு புலனாய்வு பிரிவின் அதிகாரிகள் நியமிக்கப்படாமை பாரிய குறைப்பாடு என தூதரக தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இங்கிலாந்து, கனடா, தாய்லாந்து, மலேசியா போன்ற விடுதலைப்புலிகளின் செயற்பாடுகள் அதிகமாகவுள்ள நாடுகளில் உள்ள இலங்கை தூதரங்களில் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் நியமிக்கப்படவில்லை என கூறப்படுகிறது.

இதனால் விடுதலைப்புலிகளின் செயற்பாடுகள் குறித்து எந்த தகவல்களும் இந்த நாடுகளில் உள்ள இலங்கை தூதரங்களுக்கு கிடைப்பதில்லை. 2010ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இங்கிலாந்திற்கு சென்றபோது பெரும் எண்ணிக்கையான புலம்பெயர் தமிழர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதால் ஜனாதிபதி தனது பயணத்தை இடை நடுவில் முடித்துக்கொண்டு நாடு திரும்ப நேர்ந்தது.

இங்கிலாந்தில் விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் மற்றும் அவர்களது திட்டங்கள் குறித்து எந்த தகவல்களும் அங்குள்ள இலங்கை தூதரகத்திற்கு கிடைத்திருக்க வில்லை.

புலிகளின் செயற்பாடுகள் குறித்து முன் கூட்டியே அறிந்து கொண்டிருந்தால் ஜனாதிபதிக்கு ஏற்பட்ட அசௌகரியத்தை தவிர்த்திருக்க முடியும் என இங்கிலாந்திலுள்ள இலங்கை தூதரகத் தரப்பினர் தெரிவித்துள்ளனர். (ந-5)

## முதுகல்விமாணி மாணவர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்தில் முதுகல்விமாணி (M.Ed) பட்டப்படிப்பை (2010/2011) மேற்கொள்பவர்களில் அதிபர்களுக்கான தடைகாண் வினைத்திறன் பரீட்சைக்குத் தோற்றவுள்ளவர்களை இன்று காலை 10 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்தில் ஒன்று கூடுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ந)

## சிங்கம்...

1000 ரூபாய் நாணயத்தாள்களை அச்சிடுகின்றது.

இதில் முன்னர் எங்களுடைய அபிமானமான சிங்கம் இருந்தது. இம்முறை சிங்கம் இல்லை. சிங்கத்தை எடுத்து விட்டனர்.

சிங்கம் சிறையில் உள்ளது. எங்களுடைய சிங்கம்; இந்த நாட்டை மீட்டெடுத்த சிங்கம் சிறையில் உள்ளது.

சிறையில் அடைத்து விட்டு நாணயத் தாள்களில் சிங்கத்தை அச்சிட முடியாதென அரசாங்கம் நன்கு அறிந்துள்ளது.

அதனால் நாணயத் தாள்களில் ஆந்தையை அச்சிட்டுள்ளனர்.

சிங்கம் அங்கே உள்ளது. ஆந்தை இங்கே உள்ளது.

நாட்டை மீட்கவேண்டுமாயின் நாணயத் தாளின் ஆந்தையை நீக்கி சிங்கத்தை அச்சிட வேண்டுமாயின் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சி ஏற்படுத்தப்பட வேண்டும்.

என நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார். (ந-5)

## நல்லிணக்க ஆணை...

தலைப்புலிகளை வெற்றி கொள்ள அரசாங்கம் மேற்கொண்ட போர் குறித்து அமெரிக்க செனட்சபை சுதந்திரமான சர்வதேச அமைப்பொன்றை ஸ்தாபிக்கப்படவேண்டும் என பிரேரணை ஒன்றை தாக்கல் செய்திருந்தது.

அமெரிக்க செனட்டினால் வெளியிடப்பட்ட கருத்துக்களில் எவ்விதமான அடிப்படைத் தன்மையும் கொண்டிருக்கப்படவில்லை எனத் தெரிவித்துள்ள வெளிவிவகார அமைச்சின் அறிக்கையில்,

செனட், நல்லிணக்க ஆணைக்குழுவின் நடவடிக்கைகளை உரிய முறையில் புரிந்து கொள்ளவில்லையெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவினால் பதிவு செய்யப்பட்ட சாட்சியங்கள் தற்போது பரிசீலனையிலுள்ள நிலையில் முடிபுகள் முற்றுப்பெறாத நிலையில் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக வெளியிடப்படும் கருத்துக்கள் தற்போதைய நிலையில் உகந்ததல்ல எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## கடாபி கலங்காதே; உசா...

இதனையடுத்து தொலைபேசியில் கடாபியை தொடர்பு கொண்ட இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, கடாபிக்கு தைரியம் கூறியதாக லிபியாவின் அரசாங்க தொலைக்காட்சி செய்தி வெளியிட்டுள்ளது.

கடாபி இதற்கு முன்னரும் தம்மை தைரியமான தலைவர் என்பதை வெளிக்காட்டியுள்ளதாகவும் லிபியாவில் ஏற்பட்டுள்ள பயங்கரவாதத்திற்கு தைரியமாக முகம் கொடுப்பார் எனவும் பயங்கரவாதத்திற்கு எதிராக தாம் அனைவரும் கைகோர்த்து கொள்ள வேண்டும் எனவும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ லிபிய தலைவரை தொலைபேசியில் தொடர்புக் கொண்டு கூறியதாக லிபியன் டிவி என்ற அரசாங்க தொலைக்காட்சி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் புகைப்படத்துடன் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த செய்தி அரபு மொழியில் வெளியிடப்பட்டுள்ளது. இந்த செய்தியை வெளியிட்ட குறித்த தொலைக்காட்சி உலக தலைவர்கள் கடாபியுடன் இருப்பதாக கூறியுள்ளது.

இலங்கை ஜனாதிபதி கடாபிக்கு தைரியத்தை வழங்கியுள்ள நிலையில் கடாபி ஆட்சியை விட்டு செல்ல வேண்டும் என அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தெரிவித்துள்ளார்.

கடாபியின் இராணுவம் நிராயுதபாணிகளான மக்களை சுட்டுக்கொல்வதுடன் வெளிநாட்டுகளில் இருந்து அழைத்து வரப்பட்ட கூலிப்படையினரை பயன்படுத்தி தாக்குதல் நடத்தி வருகிறது. இந்த கூலிப்படையினர் ஒருவருக்காக கடாபி 30 ஆயிரம் அமெரிக்க டொலர்களை வழங்கியுள்ளார்.

இதேவேளை லிபிய தலைவர் கடாபி நேற்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது. (ந-5)

## அ.தி.மு.க...

அ.தி.மு.க கூட்டணியிலுள்ள இடதுசாரி கட்சிகள் மற்றும் வைகோ தலைமையிலான மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்துக்கான தொகுதிப் பங்கீடுகள் குறித்த அறிவிப்புக்கள் இதுவரை வெளியாகவில்லை. (ந-5)

## சுபாஸ்...

பட்டதாக இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் உபய மெத வல தெரிவித்தார்.

யாழ். உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் அமைந்துள்ள இந்தக் ஹோட்டல் 1995ஆம் ஆண்டு டிசம்பர் 2ஆம் திகதி இராணுவத்தினரால் குத்தகைக்கு பெறப்பட்டது. (ச-5)


## கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 14 10 1928



மறைவு 04 03 2011

### அமரர் வீரசிங்கம் இராசமணி

எமது நிறுவன உரிமையாளர் வீ.சிறிதரனின் அன்புத் தாயார் மரணமடைந்த செய்தியறிந்து அதிர்ச்சியடைகின்றோம். அத்துடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
கொனிக்கா கலர் லாப்,
சிறிராம் ஜுவல்லர்ஸ் ஊழியர்கள்
தாயகம் : சிறுவர்களும், ஊழியர்களும்

(C-2588)



**STUDYING UK** **April 2011 Intake**

ஏப்ரல் மாதத்தில் தொடங்கும் கல்லூரிக்கு மாணவர்கள் செல்வதற்கான அனுமதி பதிவுகளுக்கு முந்திகொள்ளுங்கள்

ENGLAND

O/L அல்லாதவர்களுக்கும் LONDON செல்லும் ஓர் அரிய வாய்ப்பு

லண்டன் விசாக்கள் 100% விசா உத்தரவாதம்
ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்கள் இலவசம்.

குறைந்தபட்ச தகமை G.C.E (O/L) போதுமானது.
IELTS தேவையில்லை, விசேட ஆங்கில பயிற்சி வழங்கப்படும்.
Sponsor (Bank Arrangement) வசதி செய்து தரப்படும்.
20 மணி நேர பகுதி நேர வேலைவாய்ப்பு உறுதி.

**குறைந்தசெலவில் குறகிய காலத்தில் செல்ல......**

கடைசியாக செண்றவர்களில் சிலர்:

S. Keerthiya, Urumpirai West, Urumpirai.
Mr. Lavakumaran. Wellvattithurai Jaffna
V. Vijitharan Pointpedro Jaffna
A.Senthuran Batticolla
Dinojkumar Trincomalee
Vinson Amalathas Pointpedro Jaffna
T. Kiruthikka Kantharmadam Jaffna
A.J.Jackshan Kilinochi
Jonis Amalraj Pointpedro Jaffna
Mr. Aron Thusanth Pointpedro Jaffna
R. Sanjeevan Achuveli Jaffna
Asker Ali Main Street Sammanthurai
V.Pushpakumar Delf - Jaffna
Mr. A. Ravi Nallur Jaffna
Miss. Bavatharani Chavakacheri Jaffna
T.Asok Kumar Adyapatham Jaffna
R.Dinesh KKS Road Jaffna
Mr. Vikneswaran Wattala Colombo
Mr. Skywin Batticolla
J.I. Niroshini Kokilay Jaffna

**உறுதியான பயணம் உயர்வான கல்வி நிறைவான சேவை**

**WESTMINSTER** INSTITUTE OF HIGHER STUDIES
No. 03, Ramanathan Road, Kalatti Junction, Jaffna.
No. 23, Thamaraikeni Road, Batticaloa.
Telephone: 0213207778 - 0653064810 - 0113056888.
Hot line : 0771919192 - 0772229286

WIIHE Westminster International Institute of Higher Education


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.03.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org